REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2024 மார்ச் 7 வியாழக்கிழமை
# தினகரன்
THINAKARAN தினகரன்
வரு. 92 இல. 58 | Thursday 07, March, 2024 | 16 பக்கங்கள் | 50/-






ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் விசேட உரையில் தெரிவிப்பு

## அரசின் பாதை வெற்றிகரமானது என்பது உறுதி

# வலுவடையும் பொருளாதாரத்தின் பலனை மக்களுக்கே கொடுப்போம்

### பொருளாதார மறுசீரமைப்புச் சட்டம் விரைவில் பாராளுமன்றில் சமர்ப்பிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரசாங்கம் முன்னெடுக்கும் வேலைத் திட்டங்களின் பலனாக நாட்டின் பொருளாதாரம் வலுவடைந்திருப்பதாகவும், எதிர்காலத்தில் மக்களுக்கு மேலும் பல நிவாரணங்களைப் பெற்றுக்கொடுக்க எதிர்பார்த்துள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று (07) ஆற்றிய விசேட உரையிலேயே ஜனாதிபதி இவ்வாறு கூறினார். சபையில் உரைநிகழ்த்திய அவர் தெரிவித்ததாவது: நாட்டை மீட்கும் செயற்பாடுகள் அனைத்தும் அறிவியல் முறைமைகளுக்கு அமைய, படிப்படியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதிகாரத்துக்காக ஒரு போதும் தாம், பொய் சொல்லவில்லை. நாட்டை மீளக் கட்டியெழுப்புவதே எனது நோக்கம். அதிகாரங்களை அடைந்துகொள்ள பொய்யுரைக்கும் தேவை எனக்கில்லை.

சில அரசியல் குழுக்கள் அதிகாரத்தை அடையும் நோக்கில் யதார்த்தத்தை மறந்துவிட்டு, கற்பனைக் கதைகளைக் கட்டவிழ்க்கின்றன. நாட்டின் இன்றைய பிரச்சினைகளுக்கு சில்லறைத்தனமான தீர்வுகள் தேவையில்லை.இவ்வாறான தீர்வுகளால் நாட்டின் பொருளாதாரத்தை மீளமைக்க முடியாதென்பதை அடிப்படை பொருளாதார அறிவுள்ளவர்கள் அறிவர்.

அரசாங்கம் பயணிக்கும் பாதையின் வெற்றி உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த பாதையில் முன்னேறிச் செல்வதற்கான சட்ட, திட்டங்களை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளோம்.இதற்காக,பொருளாதார மறுசீரமைப்புச் சட்டமூலம் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

போகும் பாதையில் முன்னேறிச் சென்று பொருளாதாரம் வலுவடைவதன் பலனை, நாடு என்ற வகையில் அடைந்துகொள்வதா? இல்லாவிடின் அந்த செயன்முறையிலிருந்து விடுபட்டு ஓரிரு வருடங்களுக்கு முன்பிருந்த இருள் யுகத்துக்குள் மீண்டும் செல்வதா? என்பதை தீர்மானிக்குமாறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

(முழுமையான உரை 05 ஆம் பக்கம்)

**அதிகாரத்துக்காக ஒருபோதும் பொய் சொல்லவில்லை**

**புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள், மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் போன்ற பொருட்கள், VAT வரிப் பட்டியலில் இருந்து நீக்கப்படும்**

**"மரணமானவரின் உடலை மயானத்துக்கு கொண்டு செல்ல வாகனத்துக்கு எரிபொருள் நிரப்ப முடியாமலும், பிள்ளைகள் நோய்வாய்ப்பட்டபோது பெரசிட்டமோல் தேடிக்கொள்ள முடியாமலும் இருந்த நாடு, இன்று நிம்மதியாக மூச்சு விடுகிறது"**

**இன்றும் அதிகாரத்துக்காக அல்ல, நாட்டை மீளக் கட்டியெழுப்பவே நான், முயற்சிக்கிறேன்**

## பேரீச்சம் பழங்கள் அன்பளிப்பு



சவூதி அரேபிய மன்னர் சல்மானின் மனிதாபிமான உதவிகள் மற்றும் நிவாரணங்களுக்கான மையம் இலங்கைக்கு 50 மெற்றிக் தொன் பேரீச்சம் பழங்களை நன்கொடையாக வழங்கியுள்ளது. புத்தசாசன மற்றும் மதவிவகார அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதாரனபத்திரன, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் இஸட்.ஏ.எம்.பைசல் ஆகியோரிடம் சவூதி அரேபியாவின் இலங்கைக்கான தூதுவர் காலித் ஹமூத் அல்கஹ்தானி, உத்தியோக பூர்வமாக பேரீச்சம் பழங்களை கையளித்தார். (தெஹிவளை, கல்கிஸ்ஸை விசேட, கொழும்பு தினகரன் நிருபர்கள்)

## தமிழக மீனவர்களை அனுமதிக்கும் கோரிக்கையை அமைச்சர் நிராகரிப்பு

### பேச்சுக்களுக்கு இந்தியா இணங்கினால் ஆராயலாம்



இலங்கை கடற்பகுதியில் மீன்பிடிப்பதற்கு இந்திய மீனவர்களுக்கு அனுமதி வழங்குமாறு தமிழக அரசாங்கம் விடுத்த கோரிக்கையை நிராகரித்துள்ளதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

தமிழக கடற்றொழில் அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் தொலைபேசியில் இக்கோரிக்கையை முன்வைத்ததாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். 06

## நாட்டின் பொருளாதாரம் வலுவடைவு அவசியமான அபிவிருத்திகள் ஆரம்பம்

### அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ



மிக அவசியமான அபிவிருத்தி வேலைத்திட்டங்களை அரசாங்கம் தற்போது ஆரம்பித்துள்ளதாக, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ தெரிவித்தார்.

இந்தியா, சீனா மற்றும் மேற்கத்திய நாடுகள் இந்நாட்டில் முதலீட்டுக்காக முன்வந்துள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (06) நடைபெற்ற ஊடகவியலாளர் 06

## அதிகாரப் பகிர்வால் நாடு பிளவுபடும் என்பது ஏற்றுக்கொள்ள முடியாத கூற்று

### தங்களை, தாங்களே ஆளும் மனநிலை தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட வேண்டும்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அதிகார பகிர்வு நாட்டை பிளவுபடுத்தும் என்ற கூற்று முற்றிலும் தவறானது. தங்களைத் தாங்களே ஆள்கிறோம் என்ற மனநிலை தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட வேண்டுமென்றால் அதிகார பகிர்வு அவசியமானது என, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற பிணைப் பொறுப் பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சட்டமூலம், 06

## இரண்டு ஆண்டு கால ஜனாதிபதியின் வகிபாகம்

### "Press Vs. Prez" நூல் இன்று வெளியீடு



பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்சி பெறும் கடினமான பணியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முக்கியமான வகிபாகத்தை கேலிச்சித்திரக் கலைஞர்கள் எப்படி நோக்கினர் என்பதை 06

## தீர்வுகளை வழங்கினாலும் பொலிஸ் அதிகாரம் பற்றி பேச முடியாதுள்ளது

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்பில் ஜனாதிபதி

**லோரன்ஸ் செல்வநாயகம்**

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் தீர்வுகளை வழங்க முடியுமானபோதும், பொலிஸ் அதிகாரம் தொடர்பில் தற்போது பேச முடியாது. பேசினால் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாதென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் வடக்கு, கிழக்கு தமிழ் கட்சி எம்.பி.க்களுக்குமிடையில் நேற்று நண்பகல் பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் நடந்த சந்திப்பிலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இச்சந்திப்பில், வலிகாமம் வடக்கிலுள்ள மக்களின் 06

## கொழும்பில் காற்றின் மாசு அதிகரிப்பு; சுவாச நோயாளர் பாதிக்கப்படலாம்



நாட்டில் காற்றின் தரம் கடந்த 24 மணி நேரத்தில் மிகவும் மோசமடைந்துள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது. காற்றின் தரக் குறியீட்டின் படி, கொழும்பின் காற்று மாசு மதிப்பு 127 ஆக பதிவாகியுள்ளது. 06

## 'என்னை பதவியிலிருந்து அகற்றியதற்கான சதிகள்'

### கோட்டாபயவின் நூல் வெளியீடு



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தன்னை பதவியிலிருந்து அகற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்ட சதிகள் குறித்து நூல் ஒன்றை இன்று வெளியிடவுள்ளார். 2019 நவம்பரில், ஜனாதிபதியாக 06

## பெறுமதி சேர் வரி திருத்த சட்டம் மூலம் 24 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பெறுமதி சேர் வரி திருத்தச் சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு 24 மேலதிக வாக்குகளால் சபையில் நிறைவேற்றப்பட்டது. 06



## அலி சப்ரி ரஹீம் எம்.பியின் சபை அமர்வு இடைநிறுத்தம்

வெளிநாட்டிலிருந்து தங்கம் கடத்திய விவகாரம் தொடர்பில் அலி சப்ரி ரஹீம் எம்.பியின் பாராளுமன்ற வருகையை, இன்று முதல் ஒரு மாத காலத்துக்கு இடைநிறுத்தியுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

நெறிமுறைகள் மற்றும் சிறப்புரிமைகள் தொடர்பான குழுவின் தலைவர் 06

## முட்டைக்கான அதிகபட்ச சில்லறை விலை நிர்ணயம்

### இவ்வாரம் விலைகள் அறிவிப்பு



முட்டைக்கான அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயிக்கும் முன்மொழிவை இந்த வாரத்துக்குள் நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபையிடம் சமர்ப்பிக்க, விவசாய மற்றும் பெருந்தோட்ட 06

# நகர்வலம்



### சிவில் உடையில் சென்ற பொலிஸ் அதிகாரி

## பொதுமக்கள் இருவர் மீது தாக்குதல்; உடப்பு பிரதேசத்தில் பதற்றம்

*(உடப்பு குறூப் நிருபர்)*

உடப்பு பிரதேசத்தில் செவ்வாய்க் கிழமை (5) இரவு பொலிஸ் அதிகாரி ஒருவர் சிவில் உடையில் சென்று இருவர் மீது தாக்குதல் நடத்தியதில் ஒருவர் காயமடைந்து உடனடியாக உடப்பு பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக் கப்பட்டுள்ளார்.

இத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக அப்பகுதியில் உள்ள மக்களுக்கு தகவல் கிடைக்கப் பெற்றதையடுத்து உடப்பு வைத்தியசாலைக்கு முன்னால் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் ஒன்று கூடியதனால் அங்கு பதற்றமான நிலை காணப்பட்டது.

இதனையடுத்து முந்தல் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் தலைமையிலான பொலிஸ் குழுவொன்று அவ்விடத்திற்கு வருகை தந்தபோது அங்கு ஒன்று கூடிய மக்கள் தாக்குதல் நடத்திய பொலிஸ் அதிகாரிக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தனர். இதனையடுத்து பொலிஸார் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்ததையடுத்து மக்கள் சுமார் இரண்டு மணித்தியாலயங்களுக்கு பிறகு கலைந்து சென்றனர்.

பின்னர் காயமடைந்த உடப்பு ஆண்டிமுனை சின்னக்கொளனி பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான ச. பிரபு என்பவர் மேலதிக சிகிச்சைக்காக சிலாபம் பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் உடப்பு மற்றும் முந்தல் பொலிஸார் மேலதிக விசாரனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### தேசிய கல்விக் கொள்கை கட்டமைப்பு (2023/2033)

## துறைசார் மேற்பார்வைக் குழு பாராளுமன்றில் கலந்துரையாடல்

தேசிய கல்விக் கொள்கைக் கட்டமைப்பு வரைபு (20232033) (National Education Policy Framework) தொடர்பில் மூன்றாவது மற்றும் நான்காவது கலந்துரையாடல் கல்வி தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவில் இடம்பெற்றது.

கல்வி தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழு அதன் தலைவர் கலாநிதி வீ.இராதாகிருஷ்ணன் தலைமையில் கடந்த பெப்ரவரி 22 மற்றும் 28ஆம் திகதிகளில் கூடியபோதே இவ்விடயம் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கொள்கைக் கட்டமைப்பு வரைபில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் மற்றும் உள்ளடக்கப்பட வேண்டிய புதிய விடயங்கள் குறித்து நீண்ட கலந்துரையாடல் நடைபெற்றது.



தேசியக் கல்வியின் எதிர்காலத் திட்டங்கள் மற்றும் மேற்கொள்ளப்படவுள்ளதாக எதிர்பார்க்கப்படும் முக்கிய மாற்றங்களின் சுருக்கம் பற்றிய பல்வேறு அம்சங்களைப் பேராசிரியர் அர்ஜுன பராக்கிரம மற்றும் கலாநிதி மதுர எம். வெஹெல்லே ஆகியோர் விளக்கினர்.

குழுவின் உறுப்பினர்களான பாராளுமன்ற உறுப்பினர்கள் விமலவீர திஸாநாயக்க, ரோஹினி கவிரத்ன, அசங்க நவரத்ன, மஞ்சுளா திஸாநாயக்க, பி.வை.ஜீ. ரத்னசேகர, கெவிந்து குமாரதுங்க, முதிதா சொய்சா, பேராசிரியர் சரித ஹேரத் ஆகியோரும், குழுவின் தலைவருடைய அனுமதியுடன் பாராளுமன்ற உறுப்பினர் வீர சுமன வீரசிங்கவும் கலந்துகொண்டனர்.

மேலும், இக்கூட்டத்தில் கல்வி அமைச்சு தேசிய கல்வி ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் மற்றும் கொள்கைக் கட்டமைப்பை தயாரிப்பதற்கு இணைந்துகொண்ட தரப்பினர் கலந்துகொண்டனர்.

## சவூதி அரேபிய அரசினால் இலங்கைக்கு 50 மெட்ரிக் தொன் பேரீச்சம் பழம் அன்பளிப்பு

*கொழும்பு தினகரன் நிருபர், அஸ்ரப் ஏ.சமத்*

எதிர்வரும் ரமழான் மாதத்தை முன்னிட்டு சவூதி அரேபியாவின் மன்னர் சல்மான் மனிதாபிமான உதவிகள் மற்றும் நிவாரணங்களுக்கான மையம் இலங்கை அரசாங்கத்திற்கு இம்முறை 50 மெற்றிக் தொன் பேரீச்சம் பழங்களை நன்கொடையாக வழங்கியுள்ளது.





இதனை வைபவரீதியாக கையளிக்கும் நிகழ்வு நேற்று (06) முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் அமைச்சில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சவூதி அரேபியாவின் இலங்கைக்கான தூதுவர் காலித் ஹமூத் அல்கஹ்தானி புத்தசாசன மற்றும் மதவிவகார அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதானபத்திரன மற்றும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் இஸட்.ஏ.எம். பைஸல் ஆகியோரிடம் உத்தியோகபூர்வமாக கையளித்தார். இந்நிகழ்வில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள சவூதி அரேபியாவுக்கான இலங்கை தூதுவர் அமீர் அஜ்வாத் மற்றும் அமைச்சின் உயரதிகாரிகள், உலமாக்கள் உட்பட முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டனர்.

### ஜேர்மன் நாட்டின் நிதியுதவியில்...

## பேருவளை நகர சபைக்கு ரூ. 60 இலட்சம் பெறுமதியான உபகரணங்கள் அன்பளிப்பு



ஜேர்மன் நாட்டின் மேன் கின்ஸிங் மாவட்ட மக்களின் நிதியுதவியில், பேருவளை நகர சபைக்கு சுமார் ரூ. 60 இலட்சம் பெறுமதியான ட்ரக்டர், டேலர் மற்றும் முச்சக்கர வண்டி ஆகியவற்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

மேற்படி உபகரணங்களை கையளிக்கும் நிகழ்வு (29) பேருவளை நகர சபை செயலாளர் திருமதி குணவர்த்தன தலைமையில் நகர சபை வளாகத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஜேர்மன் நாட்டின் மேன் கின்ஸிங் மாவட்ட முன்னாள் மாவட்ட அமைச்சர் கர்ள் எகோபர் பிரதம அதிதியாக கலந்துகொண்டு இதனை உத்தியோகபூர்வமாக செயலாளரிடம் கையளித்தார். சீனன் கோட்டை இர்ஸான் முஹம்மத் தலைமையிலான குழுவினரால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்நிகழ்வில் நகர சபை முன்னாள் தலைவர் மஸாஹிம் மொஹமட், சீனன் கோட்டை பிரதேச முக்கியஸ்தர்கள் உட்பட அரச அதிகாரிகளும் கலந்து சிறப்பித்தனர்.



வெலிகம புதிய தெரு முஹியித்தீன் அஹதிய்யா பாடசாலையின் 25ஆவது வருட பூர்த்தி விழாவும் (வெள்ளி விழா) பரிசளிப்பு வைபவமும் அண்மையில் வெலிகம ஜின்னா வீதியில் அமைந்துள்ள தென்னிலங்கை இஸ்லாமிய கலாசார நிலையத்தில் மிக விமர்சையாக இடம் பெற்றன. அஹதிய்யா பாடசாலை அதிபர் மௌலவி எம்.ஏ. ஏ.எம் பிஷிர் (பஹ்ஜி) தலைமையில் இடம்பெற்ற இவ் விழாவில், அதிதிகள் பரிசில்களை வழங்கி வைத்தனர். (படம் ; வெலிகம தினகரன் நிருபர்)

## எனசல்கொல்ல மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் நாளை

கண்டி, தெல்தோட்டை எனசல்கொல்ல மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் நாளை 08ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 2 மணி தொடக்கம் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் அனைத்து பழைய மாணவர்களும் தவறாது கலந்து சிறப்பிக்குமாறு பழையமாணவர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஏ.ஆர்.ஐ. யாகூப் அனைத்து பழைய மாணவர்களையும் கேட்டுள்ளார்.

### கணித பாட இலவச

## கருத்தரங்கு தொடர்பில் கலந்துரையாடல்

*(புத்தளம் தினகரன் நிருபர்)*

கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையில் இம்முறை கல்வித் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான கணித பாட இலவச ஐந்து நாள் தொடர் கருத்தரங்குகள் தொடர்பான மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுடனான கலந்துரையாடல் அண்மையில் நடைபெற்றது. கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையில் அதன் பிரதி அதிபர் எஸ்.எப். சாஜினாஸ் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடல் கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையில் 2017 ம் ஆண்டு சாதாரண தர பரீட்சை எழுதி தற்போது பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் மாணவர்களின் "கயிடெக்ஸ் 17" அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மாளிகாவத்தை வை.எம்.எம்.ஏ ஏற்பாட்டில் கலை நிகழ்வு



**ருஸைக் பாரூக்**

மாளிகாவத்தை வை.எம்.எம்.ஏ தேசிய கவுன்சில் ஒழுங்கு செய்த வருடாந்த முன்பள்ளி மாணவர்களின் கலை நிகழ்ச்சி அண்மையில் கொழும்பு எம்.சி. பெஹர்தீன் கேட்போர் கூடத்தில் வை.எம்.எம்.ஏ இன் தேசிய தலைவர் எம்.எம். மொஹம்மத் தலைமையில் நடைபெற்றது . D. I. C. Recruitment (Pvt) Ltd மற்றும் Medihub Clinic and Laboratory (Pvt) Ltd பணிப்பாளர் பாத்திமா மொஹமட் ஹபீல் பிரதம அதிதியாகவும் மற்றும் வை. டப்ளியூ. எம். ஏ. போஷகர் ஜஸ்மானி தாசிம் கௌரவ அதிபதியாகவும் கலந்து கொண்டனர். மாணவர்களின் கலை கலாசார நிகழ்வும் இடம்பெற்றன. முன்பள்ளி தலைமை ஆசிரியர் திருமதி பர்வீன் சியாத், வை.எம்.எம்.ஏ தேசிய செயலாளர் ஹஸ்மில் ஹம்தூன், பொருளாளர் எம். டி. எம்.இம்தியாஸ், முன்பள்ளி ஒருங்கிணைப்பாளர் இர்ஸாம் ஸாரூக் மற்றும் ஆளுநர் சபை எஸ்.எம். இல்யாஸ், ரஸ்மி ரபீக் மற்றும் எம்.என்.எம். உமைர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் உயிரிழப்பு

*அநுராதபுரம் தினகரன் நிருபர்*

காட்டு யானையின் தாக்குதலுக்குள்ளான குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமான முறையில் உயிரிழந்துள்ளதாக நொச்சியாகம பொலிஸார் தெரிவித்தனர். நொச்சியாகம பொலிஸ் பிரிவின் கஸ்லபுஹேன பகுதியில் நேற்று இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவத்தில் உயிரிழந்தவர் 49 வயதுடைய ரனோவராவெவ, நொச்சியாகம பகுதியைச் சேர்ந்தவர் என்பது தெரியவந்துள்ளது.

## மிகச்சிறந்த முற்கொடுப்பனவு Any Time Planகளை அறிமுகப்படுத்தும் டயலொக்




இலங்கையின் # 1 இணைப்பு வழங்குனரான டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி, இன்றைய வாடிக்கையாளர்கள் மத்தியில் சடுதியாக அதிகரித்து வரும் சமூக வலைத்தளப்பாவனைக்கு ஏற்ற வகையில், ஈடு இணையற்ற இலாபகரமான அனைவரும் பெற்றுக்கொள்ளக்கூடியவாறு விரிவுபடுத்தி வடிவமைக்கப்பட்ட புதிய முற்கொடுப்பனவு Home Broad Band Plan களை அறிமுகப்படுத்துகின்றது

வீட்டிலுள்ள அனைவரின் தெரிவுக் கேற்பவும் பல அம்சங்களுடன் கூடிய. வீட்டிற்கு WiFi , YouTube மற்றும் வீட்டிற்கு WiFi Social Plan என இரண்டு Plan கள் உள்ளன. இதில் வெறும் ரூ.760க்கு, வாடிக்கையாளர்கள் TikTok , Instagram மற்றும் Face book ஆகியனவற்றிற்கு பிரத்தியேகமாக 20 GB உடன் ஏனைய இணையத்தேவைக்காக மேலதிகமாக 20 GB வழங்கப்படுகிறது. அத்துடன் ரூ.860 plan ஆனது ஏனைய இணையத்தேவைக்காக வழப்படும் உடன் 30 GB மேலதிக டேட்டாவை பிரத்தியேகமாக You Tube இற்கு வழங்குகிறது.

ஒரே ரீலோட்டில் மாதத்திற்கு தேவையான அனைத்து Data தேவைகளையும் பூர்த்தி செய்யும் வகையிலேயே இந்த plan கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. மேலும் You Tube, Face book, Instagram மற்றும் TikTok போன்ற பிரபலமான சமூக வலைத்தளங்களுக்கு தாராளமான Data வை அள்ளி வழங்குகின்றன.

## 135 ஆண்டுகால பெருமை மிக்க பயணத்தை குறிக்கும் வகையில் நினைவு முத்திரையை வெளியிட்ட HNB

இலங்கையின் முதன்மையான தனியார் துறை வங்கியான HNB PLC, தனது 135ஆவது ஆண்டை வாடிக்கையாளர்கள் மற்றும் வணிகங்களின் நிதி இலக்குகளை அடைவதற்கு ஆதரவளிக்கும் வகையில் தேசத்தின் வங்கி முறையின் மூலக்கல்லாக தனது பாரம்பரியத்தை பலப்படுத்தியது.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தருணத்தில் கருத்து தெரிவித்த HNBயின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ஜொனாதன் அலஸ், "HNBஇன் ஆரம்ப காலத்திலிருந்தே, எங்களின் உண்மையான பலம் நமது நிதி வலிமையில் மட்டுமல்ல, நாங்கள் சேவை செய்யும் மக்களுக்கும் வளரும்




சேமிப்பாளர்கள் முதல் செழித்து வரும் SMEகள் வரை உள்ளது என்பதை HNB அங்கீகரித்துள்ளது. 'கெமி புபுதுவ' போன்ற முயற்சிகள், சமூகங்களுக்குள் நம்மை இணைத்துக்கொள்வதற்கும், தொடர்ச்சியான முன்னேற்றத்தின் அடிப்படையில் உறவுகளை வளர்ப்பதற்கும், பகிர்ந்த செழுமைக்கும் எங்களின் அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகின்றன. முழுவதும், HNB நம்பிக்கையின் கலங்கரை விளக்கமாக, சர்வதேச வெற்றிக்கு நுண் வணிகங்களை வழிநடத்தி, இலங்கையின் தொழில் முயற்சியின் உறுதியான உணர்வை வெளிப்படுத்துகிறது. மேலும், நமது கடந்தகால சாதனைகளில் இருந்து உத்வேகம் பெற்று, நாளைய வாய்ப்புகளைத் எட்டுவதன் மூலம், முன்னோக்கிய பயணத்தை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்." எனத் தெரிவித்தார்.

# IMF உடனான பேச்சுவார்த்தைகள்:இறுதி வரைபு சட்டமூலமாக சமர்ப்பிக்கப்படும்

## ஹர்ஷ டி சில்வா எம் பியின் கேள்விக்கு ஜனாதிபதி பதில்

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகள் முடிவுற்றதும் அதன் சட்ட வரைவை சட்ட மூலமாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று ஹர்ஷ டி சில்வா எம்பி எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவிக்கையில்,

இது முழு நாட்டுக்கும் முக்கியமான விடயம்.இதனால், சர்வதேச நாணய நிதியத்துடன் நான்,முதலில் பேச்சு வார்த்தையை நடத்தியதும் அனைத்து கட்சித் தலைவர்களையும் பேச்சுவார்த்தைக்காக அழைப்பேன்.

அப்போது மாற்றுக் கருத்துக்கள் இருந்தால் அதனை எதிர்க் கட்சிகள் முன்வைக்க முடியும். நாம் அந்த கருத்துக்களை பெற்றுக் கொண்டு அதன் பின்னர் சர்வதேச நாணய நிதிய தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்த முடியும்.

இந்த பேச்சுவார்த்தைகள் முடிவுற்றதும் அதன் சட்ட வரைவை சட்ட மூலமாக பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க முடியும் என்றும் தெரிவித்தார். ஹர்ச டி சில்வா எம்பி தமது கேள்வியின் போது,

சர்வதேச கடன் மறுசீரமைப்பு தற்போது இடம்பெற்று வருகின்றது. அதேவேளை, தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே உள்ளன. அந்த வகையில் அடுத்து ஆட்சியமைக்கும் அரசாங்கம் அந்த வேலைத் திட்டங்களை முன்னெடுத்து செல்வதற்கு கடமைப்பட்டுள்ளது.

இதற்கமைய பாராளுமன்றத்தில் அனைத்துக் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தி இணக்கப்பாடு ஒன்றுக்கு வருவது சிறந்தது என குறிப்பிட்டார். இதற்கு பதில் அளித்த ஜனாதிபதி, நான் ஜனாதிபதி பதவியில் எவ்வளவு காலம் இருப்பேன் என்பதும் அத்துடன் நிதி தொடர்பான தெரிவுக்குழுவின் தலைவராக நீங்கள் எவ்வளவு காலம் இருப்பீர்கள் என்பதும் தெரியாது. எவ்வாறெனினும், இது முழு நாட்டுக்கும் முக்கியமான விடயம் என்பதால் நாம் அது தொடர்பில் விசேட கவனம் செலுத்துவோம் என்றும் தெரிவித்தார்.

# தவக்கால சிந்தனை



## கடவுளுடன் நெருக்கமான உறவு

இறைவாக்கினர் எரெமியாவிற்கு கடவுளின் செய்தி யாதெனில், "எனது குரலுக்கு செவிசாயுங்கள், அப்போது நான் உங்கள் கடவுளாய் இருப்பேன். நீங்கள் என் மக்களாய் இருப்பீர்கள்" என்பதாகும். இதன் பொருள் யாதெனில், கடவுள் நம்மிடம் என்ன கேட்கின்றார் என்பதனை அறிந்து கொள்ள முதலில் அவருக்கு செவிகொடுங்கள். அவரிடம் கற்றுக் கொள்ளுங்கள். கடவுளுடன் உறவினை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

ஓர் ஆசிரியரின் வார்த்தைகள் "நமக்குள்ளே ஓரிடம் உள்ளது. அங்கே கடவுள் நம்மை தொடுகிறார். அரவணைக்கிறார். ஆரத் தழுவுகிறார்." ஆனால், இன்று நாம் வாழ்கின்ற உலகானது சத்தங்களாலும் பராக்குகளாலும் நிறைக்கப்பட்டுள்ளது. இவற்றால் நாம் அங்கும் இங்குமாக அலைக்கழிக்கப் படுகின்றோம்.

இத்தகைய சூழ்நிலையில் நாம் கடவுளுடன் நெருக்கமாக இருக்கும் உறவினை அனுபவிக்க முடியாமல் உள்ளது. நமது வாழ்க்கைச் சூழல்களும் ஏனைய நமது பொறுப்புக்களும் கடவுளின் குரலுக்கு செவிசாய்ப்பதற்கான நேரத்தை கொடுக்க முடியாமற் நம்மைத் தடுத்து விடுகின்றன. கடவுளுடன் நெருக்கமாக இருப்பதற்கான மிகச் சிறந்த வழியாதெனில், நமது வாழ்வின் அழுத்தங்களிலிருந்து விடுபட்டு நம்மையே தனிமைக்கு சிறிது நேரம் விட்டுக் கொடுப்பதாகும். தனிமையில் கடவுளுடன் கொள்கின்ற உறவினால் நாம் நம்மிடமுள்ள சாந்தமற்றவற்றை வெறுமையாக்குகின்றோம். அதாவது, இரைச்சல், கோபம், பொறாமை, காழ்ப்புணர்ச்சி போன்றவற்றை நம்மிடமிருந்து அகற்றுகின்றோம். நாம் சாந்தமாகின்றபோது, நாம் அன்பின் கரத்தால் தொடப்படுவதை உணர்கின்றோம். அப்போது நாம் நமக்குள் இசைக்கும் இயேசுவின் இதயத் துடிப்பினை கேட்கிறோம்.

இத் தவக்காலமதில் இயேசுவுடன் தனித்திருக்க பழகுவோம். அவருடன் தனித்திருந்து அவரது இதயத் துடிப்பினைக் கேட்போம். அவரது அரவணைப்பினை, ஆரத் தழுவுதலை வாழ்வில் உணர்வோம்.

அருட்தந்தை நவாஜி...
(திருகோணமலை மறைமாவட்டம்)

# இடறி விழுந்த மாணவி உயிரிழப்பு

இரத்தினபுரி கலவான பிரதேசத்தில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றில் இடறி வீழ்ந்த மாணவியொருவர் உயிரிழந்துள்ளார்.



இடறி விழுந்ததில், காயமடைந்த இம்மாணவி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னரே உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்று புதன்கிழமை (06) இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் இரத்தினபுரி கலவான பிரதேசத்தை சேர்ந்த 08 ஆம் தரத்தில் கல்வி பயிலும் 13 வயது பாடசாலை மாணவியாவார்.

# மாலைதீவு பாதுகாப்பு அமைச்சருடன் இராஜாங்க அமைச்சர் சந்திப்பு

மாலைதீவுக்கு விஜயம் செய்துள்ள பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் அண்மையில் (05) மாலைதீவு பாதுகாப்பு அமைச்சர் மொஹமட் கஸ்ஸான் மஃமூனை சந்தித்தார்.

இராஜாங்க அமைச்சர் தென்னகோன் உள்ளிட்ட குழுவினரை வரவேற்ற அமைச்சர் கஸ்ஸான் மாலைதீவுக்கு உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டமைக்கு நன்றி தெரிவித்தார். மாலைதீவின் தேசிய பாதுகாப்புப் படைக்கு வழங்கப்பட்ட தொடர்ச்சியான பயிற்சி உதவிகளுக்காக இலங்கை அரசாங்கம் மற்றும் ஆயுதப்படைகளுக்கு அவர் நன்றி தெரிவித்தார்.

மாலைதீவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பு மற்றும் உறவின் முக்கியத்துவத்தை மேலும் வலியுறுத்திய அமைச்சர் கஸ்ஸான், பிராந்திய அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு இரு நாடுகளுக்குமிடையில் மேற்கொள்ளப்பட்டுவரும் கூட்டு முயற்சியின் முக்கியதுவத்தை எடுத்துரைத்தார்.

மாலைதீவுக்கு விஜயம் செய்யுமாறு அழைத்தமைக்காக மாலைதீவு பாதுகாப்பு அமைச்சருக்கு அமைச்சர் தென்னக்கோன் நன்றி தெரிவித்தார். மாலைதீவின் தேசிய பாதுகாப்புப் படைக்கு தொடர்ச்சியான இராணுவ கல்வி மற்றும் பயிற்சி உதவிகளை வழங்குவதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் உறுதியளித்தார்.



மாலைதீவின் தேசிய பாதுகாப்புப் படையின் தேவைகளை அடையாளம் காணவும் மாலைதீவுடனான பயிற்சி நடவடிக்கைகளை மேலும் அதிகரிக்கவும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அதிமேதகு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளதாக அவர் மேலும் வலியுறுத்தினார்.

இதேவேளை, காலநிலை மாற்றம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, வன்முறை, தீவிரவாதம், சட்டவிரோத ஆட்கடத்தல், அனர்த்தங்கள் மற்றும் மனிதாபிமான நெருக்கடிகள் போன்ற பொதுவான சவால்களை எதிர்கொள்வதற்கு ஒன்றிணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தையும் இராஜாங்க அமைச்சர் தென்னகோன் இதன் போது சுட்டிக்காட்டினார். உக்ரைன் ரஷ்யா, இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீன் இடையில் நடந்து வரும் யுத்தம் காரணமாக இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தற்போது நிலவும் நிலைமை குறித்தும் அவர் எடுத்துரைத்தார்.

இச்சந்திப்பில் , பாதுகாப்பு ஒத்துழைப்பு, இருதரப்பு உறவுகளை மேம்படுத்துதல், ஏற்கனவே உள்ள உறவுகளை வலுப்படுத்துதல் மற்றும் ஒத்துழைப்பிற்கான புதிய வழிகளை அடையாளம் காணுதல், பிராந்திய அமைதி, ஸ்திரத்தன்மை இணைந்து பணியாற்றுவதற்கான உறுதிப்பாட்டை இரு அமைச்சர்களும் மீண்டும் உறுதிப்படுத்தினர்.

# அமைச்சர் டக்ளஸுடன் கிழக்கு ஆளுநர் சந்திப்பு



கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து கலந்துரையாடினார்.

கடற்றொழில் அமைச்சில் நடைபெற்ற இச்சந்திப்பில், திருகோணமலையிலுள்ள பொது மீன் சந்தை, கிண்ணியா மீன் சந்தை தொடர்பான விடயங்கள் விரிவாக கலந்துரையாடப்பட்டன .

06


# விலைமனுக்கோரல்

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| பிராந்தியம் | கேள்வி இல. பொருட்களது விபரம் - தொகை | விலைமனுக்கோரல் முடிவு திகதி | விலைமனு ஆவணம் பெறும் இடமும் தொ.பே. இலக்கமும் | விலைமனு ஆவண விலை (ரூபா) | கேள்வி விபரம். ICB NCB |
| சேவைகள் | | | | | |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/24/40<br>வாடகைக்கு வான் மின் அத்தியட்சகர் (உகன) மின் பாவனையாளர் சேவை நிலையம் - அம்பாறை (இரண்டு வருடகாலம்) | 20-03-2024ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம், அம்பாறை<br>063-2222387<br>063-2222078<br>அல்லது<br>பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம்,<br>திருகோணமலை<br>026-2222666<br>026-2221030 | 1000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/24/41<br>வாடகைக்கு வான் மின் அத்தியட்சகர் (வீரகொட) மின் பாவனையாளர் சேவை நிலையம் - அம்பாறை (இரண்டு வருடகாலம்) | 20-03-2024ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம், அம்பாறை<br>063-2222387<br>063-2222078<br>அல்லது<br>பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை<br>026-2222666<br>026-2221030 | 1000.00 | NCB |

மேற்குறித்த பொருட்கள் வழங்கப்படல் தொடர்பாக வழங்குதாரர்களிடமிருந்து இலங்கை பிராந்தியம்-02 மின்சார சபை சார்பாக கொள்வனவுக் குழுவின் தலைவர் சர்வதேச/ தேசிய போட்டித் தன்மையுடன் கூடியதான விலைமனுக்களைக் கோருகின்றார். இலங்கை மின்சார சபையிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆவணங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற முகவர்களுக்கு மாத்திரமே விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும். தேவைக்கேற்ப அவர்கள் 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்திற்கேற்ப பதிவு செய்துகொள்ளல் வேண்டும்.

விலைமனுக்கோரல் முடிவு திகதிக்கு இரண்டு தினங்கள் இருக்கும் வரை விலைமனு ஆவணங்கள் விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர்கள் அல்லது அவர்களது முகவர்கள் மூலம் உரித்தான முறையில் இலங்கை மின்சார சபையின் பிரதிப் பொது முகாமையாளருக்கு/ பிரதம பொறியியலாளருக்கு எழுத்துமூலமாக விண்ணப்பித்து 5ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை வழங்குவதன் மூலம் கடமை நாட்களில் 09.00 மணிமுதல் 15.00 மணிவரையிலான காலப்பகுதிக்குள் ஆவணங்கள் பெற்றுக்கொள்ளலாம். பணமாகவோ இலங்கை மின்சார சபை பொது முகாமையாளர் சார்பாக வரையப்பட்ட வங்கி வரைவுப்பத்திரம் ஒன்றின் மூலமாகவோ கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படலாம்.

எழுத்துமூலமான விண்ணப்பமொன்றின் அடிப்படையில் வெளிநாட்டுத் தூதரகங்கள்/ வர்த்தக ஆணைக்குழுக்கள் என்பன இலவசமான முறையில் விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இ.மி.சபையின் உரித்தான பி.பொ.மு/பிரதம பொறியியலாளர்களது அலுவலகங்களில் வைத்து உத்தேச விலைமனுதாரர்களினாலும் அவர்களது முகவர்களினாலும் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாகப் பரிசீலிக்கப்படலாம்.

4 ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் வைத்து விலைமனுதாரர்கள் மற்றும் அவர்களது முகவர்கள் முன்பாக விலைமனுக்கோரல் நேரம் முடிந்தவுடனேயே விலைமனுக்கள் திறக்கப்படும். காலம் பிந்திவரும் மனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனு ஆவணங்கள் விநியோகிப்பவர்களான இ.மி.சபை.பொ.மு/பிரதம பொறியியலாளர் ஆகியோர்களிடமிருந்து விலைமனுக்கோரல் முடிவு திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்பாக அனைத்து விளக்கங்களும் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

**பொது முகாமையாளர்**
**இலங்கை மின்சார சபை**

வளமான வாழ்விற்கு மின்சாரம்

விலைமனு ஆவணத்தின் தகவல் பிரதியானது www.ceb.lk என்ற இ.மி.ச. கூட்டுரு இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்படலாம்.

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் மாசி மாதம் 19ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஷஃபான் பிறை 25

**குறள் தரும் சிந்தனை**

சிறப்புஈனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு

*சிறப்பையும், செழிப்பையும் தரக்கூடிய அறவழி ஒன்றைத்தவிர ஆக்கமளிக்கக் கூடிய வழி வேறென்ன இருக்கிறது?*

## தண்ணீர், மின்சாரப் பாவனையில் சிக்கனத்தைக் கடைப்பிடிப்போம்!

நாட்டில் தற்போது மிக மோசமான வெப்பகாலம் ஆரம்பமாகியுள்ளது. ஓரிரு மாத காலத்துக்கு முன்னர் தொடர்ச்சியான மழையினால் எமது மக்கள் அவதியுற்றனர். நாட்டின் பல இடங்களில் வெள்ளம் ஏற்பட்டது. கிழக்கில் உள்ள விவசாயிகளுக்கு ஏற்பட்ட இழப்பு கொஞ்சநஞ்சமல்ல. அறுவடை செய்ய வேண்டிய வயற்காணிகளில் கால்வாசி அறுவடையைக் கூட பலரால் பெற்றுக் கொள்ள முடியவில்லை. பலர் தங்களது நெற்செய்கையை முற்றாகவே கைவிட நேர்ந்தது. பெருமளவு பணத்தை நெற்செய்கைக்காக முதலீடு செய்திருந்த அவர்களுக்கு ஏற்பட்ட இழப்பு அதிகம்.

சுமார் நான்குமாத கால தொடர்ச்சியான மழை முற்றாக ஓய்ந்ததும் கடுமையான வரட்சி தலைதூக்கியது. தற்போது நாட்டில் கடுமையான உஷ்ணமும், வரட்சியும் நிலவுகின்றன. நீர்ப்பாசனக் குளங்கள் வற்றி வருகின்றன. மக்களுக்கான குடிநீரை சிக்கனமாக விநியோகிக்க வேண்டிய நிலைமை ஏற்படப் போகின்றது. நீர்மின்சார உற்பத்தி குறைந்து கொண்டு செல்வதாக இலங்கை மின்சாரசபை தெரிவித்துள்ளது. எரிபொருள் மூலமான மின்சார உற்பத்தி மற்றும் நுரைச்சோலை அனல்மின்சார நிலையத்தையே இனிமேல் அதிகளவில் நம்பியிருக்க வேண்டி ஏற்படலாம்.

கடந்த பெப்ரவரி இறுதிப்பகுதியில் உஷ்ணம் நிறைந்த காலநிலை ஆரம்பமாகி விட்டது. எதிர்வரும் மேமாதம் வரை இவ்வாறான வெப்பமான காலநிலை தொடரக் கூடுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே எதிர்வரும் மேமாதம் வரையான காலப்பகுதியானது மக்களுக்கு பெரும் சிரமம் நிறைந்ததாகவே இருக்கப் போகின்றது.

இன்றைய கோடை காலத்தில் மக்களுக்கான இரு தேவைகள் குறித்து அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளது. முதலாவது நீரை சிக்கனமாகப் பயன்படுத்துவது மிகவும் முக்கியம். நீரை மிகவும் சிக்கனமாகப் பயன்படுத்தினாலேயே கோடை காலம் முடிவடையும் வரை நீர்த்தட்டுப்பாடு இன்றி எங்களால் சமாளிக்கக் கூடியதாக இருக்கும். நீருக்குப் பற்றாக்குறை வருமானால் கடுமையாகப் பாதிக்கப்படப் போவது நகரங்களில் வாழ்கின்ற மக்களாவர். ஆகவே நாம் ஒவ்வொருவரும் தண்ணீரை மிகவும் சிக்கனமாகப் பயன்படுத்துவதில் கவனம் செலுத்துவது அவசியம்.

இரண்டாவது மின்சாரம் சம்பந்தப்பட்ட பிரச்சினை ஆகும். மின்சாரம் இன்றேல் உலகின் இயக்கமே நின்றுவிடும் என்றபடி இன்று எமது நிலைமை ஆகியுள்ளது. உலக மக்களின் அத்தனை இயக்கமும் மின்சாரத்திலேயே தங்கியிருக்கின்றது என்பதுதான் உண்மை.

வரட்சிக் காலம் தலைதூக்குகின்ற போது நாட்டில் மின்சார நெருக்கடி ஏற்படுவது வழமையாகும். மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்ற நீர்த்தேக்கங்கள் வற்றுவதால் நீர்மின்சார உற்பத்தியானது சிரமமான காரியமாகிப் போகின்றது. இந்நிலையில் எரிபொருள் மூலமே மின்சாரத்தை உற்பத்தி செய்ய வேண்டியிருக்கின்றது. மின்சார உற்பத்திக்காக அதிகளவு எரிபொருளை இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது. அதற்காக அதிகளவு பணம் செலவாகின்றது.

மின்சார உற்பத்திக்காக அதிகளவு பணத்தைச் செலவிட்டாலும் கூட, அதற்கேற்ப மின்சாரக் கட்டணத்தை நினைத்தபடி அதிகரிப்பதென்பது முடியாத காரியமாகும். இவ்வாறான நிலையில், இலங்கை மின்சார சபையானது நஷ்டத்தில் இயங்க வேண்டிய நிலைமை ஏற்படுகின்றது. மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்கின்ற வேளையில் மக்களிடமிருந்து அதிருப்தி வெளியிடப்படுவது தவிர்க்க முடியாததாகும். இவ்விடயத்தில் அரசாங்கம் தர்மசங்கடமான நிலைமையையே எதிர்கொள்கின்றது.

இலங்கையில் நுரைச்சோலையில் நிலக்கரி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றது. ஆனால் நுரைச்சோலை மின்னுற்பத்தி நிலையம் அடிக்கடி செயலிழந்து விடுவதால், அடிக்கடி மின்தடை ஏற்படுகின்றது. நிலக்கரி மூலமான மின்னுற்பத்திக்காகவும் அதிக பணத்தை எமது நாடு செலவிடுகின்றது.

மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்துவதில் எமது மக்கள் ஒவ்வொருவரும் அதிக கவனம் செலுத்துவார்களானால் தற்போதைய வரட்சிக் காலத்தை எம்மால் சிக்கலின்றி கடந்துவிட முடியும். ஆனால் மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்துவது இயலாத காரியமாகவே உள்ளது. மின்சாரத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்துமாறு பல்வேறு தரப்பினராலும் மக்களுக்கும் நிறுவனங்களுக்கும் கோரிக்கை விடுக்கப்படுகின்ற போதிலும், அவ்வேண்டுகோள் குறித்து அக்கறை கொள்வோர் குறைவாகவே உள்ளனர்.

வளிச்சீராக்கியை(எயார்கண்டிஷன்) நிறுத்திவிட்டு மின்விசிறிகளைப் பயன்படுத்துமாறு விடுக்கப்படும் ஆலோசனைகளுக்கு செவிசாய்ப்போரும் குறைவு. அதேசமயம் உஷ்ணக்காலம் என்பதால் மின்விசிறி மற்றும் வளிச்சீராக்கிகளின் பாவனையும் மிக அதிகமாகவே காணப்படுவதுண்டு. ஆகவேதான் வரட்சிக்காலங்களில் மின்சாரப் பாவனையானது வழமையை விட அதிகரித்துக் காணப்படுகின்றது.

தற்போது நிலவுகின்ற உஷ்ணம் மிகவும் அதிகமாகும். மின்சாரமும் தண்ணீரும் மக்களுக்கு மிகவும் அத்தியாவசியமானவை என்பதால் நாம் ஒவ்வொருவரும் இக்காலத்தில் அவதானம் பேண வேண்டியது முக்கியம்.

editor.tkn@lakehouse.lk

# இலங்கையில் சினிமா விருது வழங்கும் பாரிய நிகழ்வு சரசவிய திரைப்படவிழா

### லேக் ஹவுஸ் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம் புகழாரம்

சரசவிய சினிமா விருது வழங்கும் விழா இன்று காணப்படும் அனைத்து விருது வழங்கும் விழாக்களுக்கும் முன்னோடியானது என லேக் ஹவுஸ் நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம் தெரிவித்தார்

அச்சு ஊடகங்கள் மிகவும் வீழ்ச்சியடைந்து கடுமையான சவால்களை எதிர்நோக்கி வரும் இவ்வேளையில், லேக் ஹவுஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை இந்தச் சவால்களை வெற்றிகரமாக எதிர்கொண்டுள்ளதாக லேக் ஹவுஸ் நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம் தெரிவித்தார்.

35 ஆவது தடவையாகவும் இம்முறை நடைபெறவுள்ள சினிமா விருது வழங்கும் விழா தொடர்பாக நேற்றுமுன்தினம் (05) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே லேக் ஹவுஸ் நிறுவனத் தலைவர் இதனைத் தெரிவித்தார்.





இம்மாதம் 28 ஆம் திகதி மாலை 6 மணி முதல் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள 35ஆவது சரசவி சினிமா விருதுகள் வழங்கும் விழா குறித்து நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் கருத்துத் தெரிவித்தார்.

இம்முறை சரசவிய சினிமா விருது வழங்கும் விழா நடைபெறுவது 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் இந்நாட்டில் திரையிடப்பட்ட இலங்கை திரைப்படங்களுக்காக ஆகும். அதன்படி 2019 ஆம் வருடம் திரையிடப்பட்ட 30 திரைப்படங்களில் 28 திரைப்படங்களும், 2020 ஆம் ஆண்டு திரையிடப்பட்ட 12 படங்களும் விருது வழங்கும் விழாவுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. விழாவில் 64 விருதுகள் வழங்கப்படவுள்ளன.

லேக் ஹவுஸ் நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

சரசவிய பத்திரிகை 1963 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அதாவது சரியாக 60 வருடங்களுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்டது. விருது வழங்கும் விழா 1964 இல் தொடங்கியது. 2018 ஆம் ஆண்டிலேயே லேக் ஹவுஸ் நிறுவனம் கடைசியாக சரசவிய விருது வழங்கும் விழாவை நடத்தியது. 2018 ஆம் ஆண்டுக்குப் பிறகு கொவிட் 19 தொற்று சூழ்நிலை காரணமாக சரசவிய விருது வழங்கும் விழாவை நடத்த முடியவில்லை. அதன்படி, 2024 ஆம் ஆண்டு இலங்கைத் திரையுலகின் மாபெரும் விழாவாகக் கருதப்படும் சரசவிய விருது வழங்கும் விழா லக்ஸ் சரசவிய விருது வழங்கும் விழாவாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 30 வருடங்களின் பின்னர் இலங்கை யுனிலீவர் நிறுவனம் சரசவிய விருது வழங்கும் விழாவின் பிரதான அனுசரணையாளராக இணைந்துள்ளமை பாராட்டத்தக்கது.

இலங்கையில் 114 வருடங்களாக தொடர்ச்சியாக வெளியாகும் ஒரேயொரு பத்திரிகை தினமின பத்திரிகையாகும். மேலும், மூன்று மொழிகளிலும் தினசரி மற்றும் வாராந்திர செய்தித்தாள்களை வெளியிடும் முன்னணி ஊடக அமைப்பு இலங்கையின் லேக் ஹவுஸ் நிறுவனமாகும்.

2023 ஆம் ஆண்டில் 320 இலட்சம் ரூபா அளவில் எம்மால் இலாபமீட்ட முடிந்தது. அச்சு ஊடக நிறுவனமாக மின்சாரக் கட்டணம், நீர்க் கட்டணம், தொலைபேசிக் கட்டணம் என அனைத்தையும் நாம் தற்போது செலுத்தியுள்ளோம். லேக் ஹவுஸ் நிறுவனத்தை இன்றே மூட வேண்டி நேரிட்டாலும் நாளை காலையில் லேக் ஹவுஸ் நிறுவனத்தில் பணிபுரியும் அனைவரினதும் கொடுப்பனவுகளை செலுத்தும் அளவுக்கு நாம் நிதி பலத்துடன் உள்ளோம் என பெருமையுடன் தெரிவிக்க விரும்புகிறேன். அச்சு ஊடகம் மிகவும் சீரழிந்து கடுமையான சவால்களை எதிர்நோக்கி வரும் வேளையில் லேக் ஹவுஸின் பணிப்பாளர் சபை இந்த சவால்களை வெற்றிகரமாக எதிர்கொண்டுள்ளது. நாங்கள் அச்சு ஊடகம் போன்று பிற டிஜிட்டல் ஊடகத்துறையிலும் ஈடுபட்டுள்ளோம்.

30 வருடங்களின் பின்னர் இலங்கை யுனிலீவர் நிறுவனம் சரசவிய விருது வழங்கும் நிகழ்வின் பிரதான அனுசரணையாளராக இணைந்துள்ளமை பாராட்டத்தக்கது."

இவ்வாறு லேக் ஹவுஸ் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம் தெரிவித்தார்.

**'100 வருடங்களைப் பூர்த்தி செய்யும் லக்ஸ் பெருமையுடன் சரசவிய சினிமா விருது விழாவில் இணைகிறது'**
**- யுனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் பணிப்பாளர் திருமதி ஷமாரா சில்வா**

சரசவிய பத்திரிகையின் பிரதம ஆசிரியர் கலாநிதி நுவன் நயனஜித், உரையாற்றுகையில், "நாட்டின் மாபெரும் கலை விழாவாக, இன்று இருக்கும் அனைத்து விருது விழாக்களுக்கும் முன்னோடியாக விளங்கும் விழாவாக சரசவிய விழாவை அழைக்கலாம். இலங்கையில் சினிமா பத்திரிகைகளின் வரலாற்றை எடுத்துக் கொண்டால், முதல் நாளிதழ் 'சினமா' என்ற பத்திரிகையில்தான் தொடங்குகிறது. சரசவிய பத்திரிகை ஏப்ரல் 10, 1963 இல் 46 ஆவது நாளிதழாகத் தொடங்கியது. அதன்பிறகு இதுவரை 115 சினிமா நாளிதழ்கள் ஆரம்பிக்கப்பட்டு நின்றுவிட்டன. 46 ஆவதாக தொடங்கிய சரசவிய தவிர மற்ற 114 பத்திரிகைகளும் இன்று இல்லை. ஒருபுறம், இது நமது பத்திரிகை தாய்வீட்டுக்கு பெருமை சேர்க்கிறது" எனத் தெரிவித்தார்

யுனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் பணிப்பாளர் திருமதி ஷமாரா சில்வா உரையாற்றுகையில், "சரசவிய விருதுகள் இலங்கைத் திரையுலகின் மிகப் பிரம்மாண்டமான திரைப்பட சம்மேளனம் என்று கூறலாம். 2024 ஆம் ஆண்டில், லக்ஸ்( LUX) அதன் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகிறது. அச்சந்தர்ப்பத்தில் சினிமாவோடு இணைந்திருக்க வேண்டும் என்று நினைத்தோம். சினிமா என்பது மக்களுடன் இணைந்த ஒன்று. சினிமா துறையை மீட்டெடுக்கும் நிறுவனமாக நாமும் இணைய வேண்டும். கடந்த ஆண்டு முதல் நாங்கள் பல்வேறு திரைப்பட விருது விழாக்களுடன் இணைந்துள்ளோம். சரசவிய விருது வழங்கும் விழா பிரம்மாண்டமான விருது வழங்கும் விழாவாகும். அதனால் நாங்கள் அதனுடன் இணைந்து கொண்டோம்" எனத் தெரிவித்தார்.

சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பின் சட்டத்தரணி சுதர்சன் சேனவிரத்ன உரையாற்றுகையில், "அடிப்படையில் நாங்கள் கலையில் மிகுந்த ஆர்வம் கொண்ட நிறுவனம். இந்த நிகழ்வில் கலந்து கொள்வது கலைக்கான எங்கள் பங்களிப்பை விரிவுபடுத்துகிறது. மேலும் வெகுசன ஊடகத்துறை அமைச்சின் கீழுள்ள இரண்டு சகோதர நிறுவனங்கள் என்பதனையும் இன்னொரு காரணமாகக் குறிப்பிடலாம். தொலைக்காட்சி நாடகத்தைப் பொறுத்தவரை, நாங்கள் சில வகையான பணிகளைச் செய்கிறோம். அவை அனைத்திற்கும் முதன்மையான கலையாக சினிமா கலையை அறிமுகப்படுத்தலாம். சினிமா சவால்களைச் சந்திக்கும் சந்தர்ப்பத்தில் இந்தக் கலையை முன்னிலைப்படுத்த வேண்டும் என்று நினைத்தோம்" எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், கொமர்ஷல் வங்கியின் சிரேஷ்ட சந்தைப்படுத்தல் முகாமையாளர் திருமதி நிரோஷா வெத்தசிங்க, லேக் ஹவுஸ் நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரிகளான சட்ட மற்றும் நிர்வாகப் பணிப்பாளர் சட்டத்தரணி சரித ரணதுங்க, ஆசிரியர் பீட பணிப்பாளர் சிசிர பரணதந்திரி மற்றும் பணிப்பாளர் (நிதி) கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.



நெத்மீ பூஜனி ரத்நாயக்க
தமிழில்: வீ.ஆர்.வயலட்

# சிவராத்திரி சிறப்பு நிகழ்வாக நாளை உலக சைவப் பேரவை கொடிதினம்



நாளை (08.03.2024) மகாசிவராத்திரி தினம் ஆகும். சிவனுக்குரிய இராத்திரியாகப் போற்றப்படும் இந்நாள் சிவசிந்தனையுடன் புனிதமாக அனுஷ்டிக்கப்பட வேண்டிய உன்னதமான விரத தினமாகும். சிவனுக்குரிய வாகனமும் கொடியும் இடபம் எனப்படும் நந்தியாகும். ஒரு சிவசின்னமாகவும் பெருமை பெறும் நந்திக்கொடியின் முக்கியத்துவத்தை சிவராத்திரி நாளன்று உலகளாவிய ரீதியில் இந்து மக்களுக்கு உணர்த்தும் வகையில் கடந்த இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக உலக சைவப் பேரவை செயற்பட்டு வருகிறது.

அந்த வகையில் வழமைபோல இந்த வருடமும் மகா சிவராத்திரி தினமாகிய நாளை நாடளாவிய ரீதியில் சைவக்கொடி தினத்தை அனுஷ்டிப்பதுடன் கொடி வாரத்தை ஆரம்பித்து வைப்பதற்கும் உலக சைவப் பேரவை ஏற்பாடு செய்துள்ளது. கொழும்பு மாவட்டத்திற்கான வைபவம் உலக சைவப் பேரவையின் இலங்கை கிளைத் தலைவர் விடைக்கொடிச்செல்வர் சின்னத்துரை தனபாலா தலைமையில் கொழும்பு பம்பலப்பிட்டி ஸ்ரீ மாணிக்கவிநாயகர் ஆலயத்தில் காலை 8.00 மணிமுதல் இடம்பெறவிருக்கிறது.

மாணிக்கப்பிள்ளையார் ஆலய அறங்காவல் சபைத் தலைவர் அ. மாணிக்கவாசகர் முதலாவது கொடியை பெற்றுக் கொள்வார். உலக சைவப் பேரவை உட்பட ஏனைய இந்துமத அமைப்புகளினதும் உறுப்பினர்கள் மற்றும் சைவ அடியார்கள் கலந்து சிறப்பிக்கவிருக்கிறார்கள்.

கொடிதினம் தொடர்பாக உலக சைவப் பேரவையின் இலங்கைக் கிளைத் தலைவர் விடைக்கொடிச்செல்வர் கலாநிதி சின்னத்துரை தனபாலா தகவல் தருகையில், 'மேல் மாகாணம், வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் உட்பட நாடளாவிய ரீதியில் இந்து மக்கள் பெருமளவில் வாழும் பகுதிகளில் சைவக் கொடிதினம் நடத்தப்படுகிறது. சைவப் பேரவைத் தொண்டர்கள் இல்லங்களுக்கு வருகை தந்து கொடியினை வழங்கும்போது, அதனைப் பெற்றுக் கொள்ளும் இந்து மக்கள் அனைவரும் தாராள மனதுடன் நிதி அன்பளிப்புச் செய்வதன் மூலம், புனித சிவராத்திரி தினத்தன்று நற்பணிகளுக்கு உதவிய பெரும்பேற்றைப் பெறுவதாக இருக்கும். இதற்கு அனைவரினதும் ஒத்துழைப்பை உலக சைவப் பேரவை எதிர்பார்க்கிறது' எனத் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு மாவட்டங்களிலும் கொடி விற்பனை மூலம் கிடைக்கும் நிதியானது, அந்தந்த மாவட்டங்களிலுள்ள அறநெறிப் பாடசாலைகளின் வளர்ச்சிக்கும், வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கும், விழிப்புலன், செவிப்புலன் அற்றவர்கள் மற்றும் ஊனமுற்றவர்களுக்கான மனிதாபிமான செயற்திட்டங்களுக்கும், பலவகையிலும் பாதிக்கப்பட்டு வசதி குறைந்த நிலையில் வாழும் இந்து மக்களின் வாழ்வாதார உதவிகளுக்கும் பயன்படுத்தப்படுவது வழக்கமாகும்.

சிவராத்திரி நாளன்று இந்து மக்கள் அனைவரும் தங்கள் இல்லங்களிலும், ஆலயங்கள், இந்துமத நிறுவனங்கள் மற்றும் அறநெறிப் பாடசாலைகளிலும் நந்திக் கொடிகளை ஏற்றி வைத்து சைவ விழிப்புணர்வை வெளிப்படுத்துவதுடன் கொடி தினத்தையும் கொடி வாரத்தையும் முக்கியத்துவப்படுத்த வேண்டும் என உலக சைவப் பேரவை சார்பாக இலங்கைவாழ் அனைத்து இந்து மக்களையும் கேட்டுக் கொள்வதாக கலாநிதி சின்னத்துரை தனபாலா தெரிவித்துள்ளார்.

அ. கனகசூரிய



# கொஸ்கமவில் மனத்தூய்மைக்கான தியானப்பயிற்சி 10ஆம் திகதிஆரம்பம்

சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்னர் வடிக்கப்பட்டு, பர்மாவைச் சேர்ந்த சி.ஜி. கின் அவர்களால் கற்பிக்கப்பட்டு இந்தியா மற்றும் உலகம் முழுவதும் விபாசனா கற்றுத்தந்த ச. கோயங்கா அவர்களால் நடத்தப்படும் மனத்தூய்மைக்கான தியானமுறை பயிற்சி இலங்கையிலும் நடைபெறுகின்றது.

குருஜி எஸ்.என். கோயங்காஅவர்களின் வழிகாட்டலில் கொஸ்கம, பஹலாகொஸ்கம, தம்மசோபா விபாசனா தியான மையத்தில் எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதிவரை பத்து நாட்கள் தியானப் பயிற்சி வகுப்புகள் நடைபெற உள்ளன.

இவர்களது இலவச பயிற்சிநெறியில் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் கலந்து கொள்ளலாம். விபாசனாதியான மையத்தில் இணைந்து கொள்ள விரும்புபவர்கள் 0772448608, 0773504491, 0774935850 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. மேலும்,www.sobha.dhamma.org என்ற இணையத்தில் முன்பதிவு செய்து கொள்ளவும் முடியும்.

மனத்தூய்மைக்கான இந்தத் தியான பயிற்சிநெறியில் அனைவரும் கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

எச்.எச். விக்கிரமசிங்க

# நாட்டில் வலுவடைந்து வரும் பொருளாதாரத்தின் பலன்களை மக்களுக்கு பெற்றுக் கொடுப்போம்!

## பாராளுமன்றத்தில் ஆற்றிய விசேட உரையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க



அரசாங்கத்தின் வேலைத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமான சட்டத்திட்டங்களை பாராளுமன்றத்தில் சமர்பிப்போம். பொருளாதார மறுசீரமைப்புச் சட்டம் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

அரசாங்கம் முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களின் பலனாக நாட்டின் பொருளாதாரம் வலுவடைந்திருப்பதாகவும், எதிர்காலத்தில் மக்களுக்கு மேலும் பல நிவாரணங்களைப் பெற்றுக்கொடுக்க எதிர்பார்த்திருப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அந்த செயற்பாடுகள் அனைத்தும் அறிவியல் முறைமைகளுக்கு அமைய, படிப்படியாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், அதிகாரத்திற்காக ஒருபோதும் தான் பொய் சொல்லவில்லை என்பதோடு, அதிகாரத்திற்காக அன்றி நாட்டை மீளக்கட்டியெழுப்புவதே தனது நோக்கமாகும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று (06) பாராளுமன்றத்தில் ஆற்றிய விசேட உரையில் இவ்வாறு கூறினார்.

சில அரசியல் குழுக்கள் அதிகாரத்தைப் பெற்றுகொள்ளும் நோக்கில் யதார்த்தத்தை மறந்துவிட்டு, கற்பனைக் கதை சொல்கின்றன எனச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இன்று நாட்டின் முன்பிருக்கும் பிரச்சினைகளுக்கு, சில்லறைத்தனமான தீர்வுகள் இல்லை என்றும், அவ்வாறான தீர்வுகளால் நாட்டின் பொருளாதாரத்தை மீளமைக்க முடியாதென்பதை அடிப்படை பொருளாதார அறிவுள்ளவர்கள் அறிவர் எனவும் தெரிவித்தார்.

அரசாங்கம் பயணிக்கும் பாதையின் வெற்றி உறுதி செய்யப்பட்டிருப்பதாகவும், அந்தப் பாதையில் முன்னேறிச் செல்வதற்கான சட்டதிட்டங்களை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க எதிர்பார்த்திருப்பதாகவும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, பொருளாதார மறுசீரமைப்புச் சட்டமூலம் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருப்பதாகவும் கூறினார்.

## அனைத்து செயற்பாடுகளும் அறிவியல் முறையில் படிப்படியாகவே முன்னெடுக்கப்படுகின்றன. அதிகாரத்திற்காக நான் ஒருபோதும் பொய் சொல்லவில்லை'

போகும் பாதையில் முன்னேறிச் சென்று பொருளாதாரம் வலுவடைவதன் பலனை, நாடு என்ற வகையில் அடைந்துகொள்வதா? இல்லாவிடின் அந்த செயன்முறையிலிருந்து விடுபட்டு ஓரிரு வருடங்களுக்கு முன்பிருந்த இருள் யுகத்துக்குள் மீண்டும் செல்வதா? என்பதை தீர்மானிக்குமாறும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

ஜனாதிபதி பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையில் மேலும் தெரிவித்ததாவது:

இன்று நமது நாடு ஓரளவு பொருளாதார ஸ்திரத்தன்மையை அடைந்துள்ளது என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்கிறார்கள். எனினும், இதனை ஏற்றுக்கொண்டதாக காட்டிக் கொள்ளாமல், நாம் முன்னெடுத்துள்ள வேலைத் திட்டத்தை விமர்சிப்பவர்களும் இருக்கின்றனர்.

பொருளாதாரம் வலுவாக இருப்பதாகத் தோன்றினாலும், மக்கள் அதை உணரவில்லை என்று சிலர் குற்றம் சாட்டுகின்றனர். மக்கள் மீது தேவையற்ற வகையில் வரிச் சுமையை அதிகரித்துள்ளதாகவும் கூறுகின்றனர். மின்சாரக் கட்டணம் மற்றும் எரிபொருள் விலைகள் தேவையற்ற வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் கூறுகின்றனர்.

பொதுவாக, பூவைக் காயப்படுத்தாமல் தேன் எடுப்பதைப் போல் மக்களைத் துன்புறுத்தாமல் வரி வசூலிக்க வேண்டும் என்ற பழமொழி உண்டு. ஆனால் அந்த நடைமுறையை நாங்கள் பின்பற்றவில்லை என்று விமர்சிக்கின்றனர். எனினும், இவ்வாறு விமர்சிப்பவர்கள் ஒரு விடயத்தை மறந்துள்ளனர். பூக்களை நசுக்கித் தேன் எடுக்கும் சந்தர்ப்பங்களும் உள்ளன என்பதை அவர்கள் மறந்துள்ளனர்.

இது நமக்கு சிறந்தவொரு படிப்பினை. ஒரு சாதாரண சூழ்நிலையில், பூக்களை நசுக்காமல் தேன் எடுக்க முடிந்தாலும், இருளில் பயணிக்கும்போது அவ்வாறு செய்ய முடியாது.

இன்று நாமும் இருளில் பயணித்துக் கொண்டிருக்கிறோம். கடந்த காலத்தில் நாம் பொருளாதார தொங்கு பாலத்தில் பயணிக்க நேரிட்டது. இருளில் பயணிக்க நேரிட்டது. இவ்வாறான ஆபத்தான நிலை எங்களுக்கு ஏன் ஏற்பட்டது? எமது பொருளாதாரம் ஏன் வங்குரோத்தடைந்தது? கடந்த கால அரசாங்கங்கள் தொலைநோக்குப் பார்வையற்ற முடிவுகள் எடுத்தமை ஒரு காரணமாகும். அரசாங்கத்தின் பல சாதகமான வேலைத் திட்டங்களை பல்வேறு அரசியல் கட்சிகள் எதிர்த்து, சீர்குலைத்ததும் மற்றொரு காரணமாகும். இந்தக் கட்சிகள் பொதுச்சொத்துக்களை சேதப்படுத்தின.

இதனால் நாட்டுக்கு முறையான, பரிபூரணமான பொருளாதாரத் திட்டமொன்று தேவைப்பட்டது. இதுபோன்ற திட்டத்தை செயல்படுத்த நாம் பல சந்தர்ப்பங்களில் முயற்சித்தோம். எனினும், இவ்வாறான திட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுக்க வாய்ப்புக் கிடைக்காமல் போனது.

நாட்டிற்கு என்ன நடந்தது என்பதை அனைவரும் அறிவர். நாடு வங்குரோத்தடைந்தது. கடனைச் செலுத்த முடியாமல் போனது. பொருளாதார நெருக்கடியை சமாளிக்க முடியாமல் போனது. சாதாரண குடிமகன் முதல் பெரிய தொழிலதிபர் வரை அனைவரும் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். மின்சாரம் துண்டிக்கப்பட்டது. வரிசைகளின் யுகம் ஏற்பட்டது. பலர் தொழில்களை இழந்தனர். தொழில்களும் வணிகங்களும் சரிந்தன. சிலர் நாட்டை விட்டு வெளியேறினர். நாடு முழுவதும் தீப்பற்றி எரிந்தது. பொருளாதார நரகத்தில் நாடு விழுந்தது.

இந்த நேரத்தில் நாடு அராஜகமாக மாறியது. ஆட்சி நிர்வாகம் சீர்குலைந்தது. பொருளாதார ரீதியில் மட்டுமன்றி சமூக ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் கடுமையான ஆபத்தை நோக்கி நகர்ந்துகொண்டிருந்தது. இந்த நிலைமையில் இருந்து நாட்டை மீட்கும் சவாலை யாரும் ஏற்க முன்வரவில்லை. அழைக்கப்பட்ட அனைவரும் மறுத்துவிட்டனர். தீயில் குதித்து தீயை அணைக்கும் தைரியம் யாருக்கும் இல்லை.

ஆனால் நாட்டுக்காக அந்த சவாலை நான் ஏற்றுக்கொண்டேன். தீயின் நடுவே சென்று தீயை அணைக்க ஆரம்பித்தேன். அந்த அயராத முயற்சியின் பலனை இன்று நாடு முழுவதும் அனுபவித்து வருகிறது. இந்த நேரத்தில், அந்த மாபெரும் முயற்சியில் எனக்கு உறுதுணையாக இருந்த அனைவரையும் நன்றியுடன் நினைவு கூர்கிறேன்.

நாங்கள் ஒரு சிறந்த, பயணத் திட்டத்திற்கு அடித்தளமிட்டோம். சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து பொருளாதாரத் திட்டத்தைத் தயாரித்தோம். அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தியதன் விளைவாக, நாடு நாளுக்கு நாள் இயல்பு நிலைக்கு வந்தது. அழுத்தம் தணிந்தது. துயரங்கள் மெல்லக் குறைய ஆரம்பித்தன.

அதைத் தெளிவுபடுத்தும் சில பொருளாதாரக் குறிகாட்டிகளை இந்த அவையில் முன்வைக்க விரும்புகிறேன்.

2022 முதல் 2023 இரண்டாம் காலாண்டு வரை 6 காலாண்டுகளுக்கு தொடர்ந்து சுருங்கிய நமது பொருளாதாரம், 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் இருந்து புத்துணர்ச்சி பெற ஆரம்பித்தது. இந்த ஆண்டு 2 முதல் 3 சதவீத வளர்ச்சியை எட்ட முடியும் என்று சர்வதேச நிதி நிறுவனங்கள் கணித்துள்ளன.

2022 ஆம் ஆண்டை விட 2023 ஆம் ஆண்டில் அரச வருமானத்தை 50 சதவீதத்திற்கும் மேல் அதிகரிக்க முடிந்தது. கடந்த ஆண்டு முதன்மைக் கணக்கில் உபரித் தொகையைப் பெற முடிந்தது. இதனால், மூன்று, நான்கு ஆண்டுகளாக அரசுக்கு சேவை வழங்கிய ஒப்பந்ததாரர்களுக்கு அனைத்து நிலுவைத் தொகையையும் முடித்துள்ளோம்.

2022 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில், அரசுக்குச் சொந்தமான 52 பெரிய நிறுவனங்கள் மொத்தமாக ரூ.720 பில்லியன் நட்டத்தை எதிர்கொண்டன. ஆனால் 2023 ஆம் ஆண்டின் அதே காலப் பகுதியில் இந்த நிறுவனங்களிடமிருந்து ரூ.313 பில்லியன் இலாபமாகப் பெற முடிந்தது.

மத்திய வங்கி மற்றும் அரசாங்கம் ஒருங்கிணைந்து மேற்கொண்ட பொருளாதார முகாமைத்துவம் காரணமாக, 2022ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 70 சதவீதமாக இருந்த பண வீக்கம், 2024ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 5.9 சதவீதமாகக் குறைந்தது. பண வீக்கம் குறைந்ததால் 30 சதவீதமாக இருந்த வட்டி வீதத்தை 2023ஆம் ஆண்டில் 10 சதவீதத்தையும் விடக் குறைத்து சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கும், நுகர்வோருக்கும் நிவாரணம் வழங்க முடிந்தது.

2022 ஏப்ரல் நடுப்பகுதியில் வெறும் 20 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்த அந்நியச் செலாவணி கையிருப்பை, தற்போது 3 பில்லியன் அமெரிக்க டொலர் வரை அதிகரிக்க முடிந்தது. தனியார் மோட்டார் வாகனங்கள் தவிர, இறக்குமதிக்கான கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளன.

1977 இற்குப் பிறகு முதன்முறையாக, 2023ஆம் ஆண்டில், கொடுப்பனவு கையிருப்பின் நடப்புக் கணக்கில் உபரியை ஏற்படுத்த முடிந்தது. இதன் காரணமாக கடந்த வருடத்தில் இதே காலப்பகுதியில் ரூ.363 ஆக இருந்த அமெரிக்க டொலரின் பெறுமதி நேற்றைய நிலவரப்படி ரூ.308 ஆக வீழ்ச்சியடைந்துள்ளது. ரூபாயின் பெறுமதி வலுப்பெற்றுள்ளது.

இந்த பொருளாதார முன்னேற்றத்தின் விளைவுகளை இன்று முழு சமூகத்திலும் காண முடிகிறது.

கை டிரக்டர்கள் முதல் பெரிய பஸ்கள் வரை பல்வேறு வாகனங்களில் அனுராதபுரத்திற்கும் சிவனொளிபாத மலைக்கும் எத்தனை மக்கள் சென்று வழிபடுகின்றனர்? தலவில, மடுதேவாலய யாத்திரைக்கு எத்தனை பேர் செல்கிறார்கள்? நுவரெலியாவுக்கு எத்தனை பேர் சுற்றுலா செல்கிறார்கள்? தூரப்பயணம் செல்லும் ரயில் பெட்டியில் இருக்கையை முன்பதிவு செய்வது எவ்வளவு கடினமாக இருக்கிறது? முன்பதிவு செய்யப்படாத பெட்டிகளில் எத்தனை பேர் பயணிக்கிறார்கள்? நாடு முழுவதும் எத்தனை சுற்றுலாப் பயணிகள் உள்ளனர்?

வீட்டை விட்டு வெளியே வர முடியாமல் இருந்தவர்கள் இன்று அதிகமாக பயணம் செய்கின்றனர். பொழுது போக்க வெளியே செல்கிறார்கள். நோய்வாய்ப்பட்டவரை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லவோ, சடலத்தை மயானத்திற்குக் கொண்டு செல்லவோ வாகனத்திற்கு சிறிது எரிபொருள் பெற முடியாத நாடாக இருந்தோம். வீட்டில் சமைக்க எரிவாயு இல்லாமல், வெளியே விறகு அடுப்பில் சமைத்த நாடு இது. பிள்ளை நோய்வாய்ப்பட்டால், பெரசிடமோல் மாத்திரையை தேடி வீடுவீடாகச் சென்ற நாடு இது. அந்த நிலை இப்போது முற்றிலும் தலைகீழாக மாறிவிட்டது.

இன்று நாம் காணும் மற்றும் உணரும் பொருளாதார முன்னேற்றத்தை சிலர் விமர்சிக்கின்றனர். கடன் கொடுப்பனவு நிறுத்தப்பட்டுள்ளதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக கூறுகின்றனர். கடனை மீளச் செலுத்த ஆரம்பித்தால், நாடு மீண்டும் மோசமான நிலைக்குத் தள்ளப்படும் என்று அவர்கள் வாதிடுகின்றனர். நாம் தற்பொழுது நரகத்தில் ஒரு இடைவேளைப் பெற்று, இந்த நிலையை அனுபவிப்பதாக அவர்கள் கூறுகிறார்கள்.

அந்த விமர்சனங்கள் எந்த அடிப்படையும் அற்றவை என்பதைக் கூற விரும்புகிறேன்.

வெளிநாட்டுக் கடன்கள் உட்பட அனைத்து கடன்களையும் மறுசீரமைப்பது குறித்து தற்போது ஆராய்ந்து வருகிறோம். இந்தப் பேச்சுவார்த்தைகள் விரைவில் வெற்றிகரமாக முடிவடையும் என நம்புகிறோம். கடனை மீளச் செலுத்தாதிருக்க 2023 முதல் 2027 வரை தற்காலிக சலுகைக்காலம் கிடைக்கும் என நம்புகிறோம். அதன் பின்னர் 2027 முதல் 2042 வரையிலான காலக்கட்டத்தில் கடனை மீளச் செலுத்த நடவடிக்கை எடுப்போம்.

## அதிகாரத்திற்கு கனவு காணும் அரசியல்வாதிகள் யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளவில்லை.

தற்போது, அரச வருமானத்தை, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 11 சதவீதமாக உயர்த்த முடிந்துள்ளது. அதற்காக எமக்கு வற் வரியை விதிக்க நேரிட்டது. அது மிகவும் கடினமான முடிவு. அவ்வாறு வரி விதிக்கும் முடிவை நாங்கள் மிகவும் கஷ்டத்துடனே எடுத்தோம்.

ஆனால் இந்த பொருளாதார நோயைக் குணப்படுத்த வேறு மாற்றுவழி இல்லை. இந்த வலியை சிறிது காலம் அனுபவிக்க நேரிடும். வற் வரி விதிப்பால், அரசின் வருமானம் வலுப்பெற்றது.

கடனை அடைக்கும் பலம் எம்மிடம் உள்ளது என்பது சர்வதேச சமூகத்தின் முன் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பாதையில் நாம் வெற்றிகரமாகத் தொடர்ந்தால், இந்த ஆண்டு இறுதிக்குள் நமது பொருளாதாரம் ஸ்திரமாகிவிடும்.

முதலீட்டை ஈர்ப்பதற்காக ஒரு புதிய நிறுவனம் நிறுவப்படும். வெளிநாட்டு நிதித் துறைகளுக்கான தொடர்ச்சியான பிரவேசம் உறுதிப்படுத்தப்படும். விவசாயத்துறை நவீனமயப்படுத்தப்படும். உணவுப் பாதுகாப்பின் கீழ் பாரிய அளவிலான பண்ணைகளை ஆரம்பிக்க பல வெளிநாடுகள் ஏற்கனவே விருப்பம் தெரிவித்துள்ளன.

வெளிநாட்டுச் சந்தைகள் படிப்படியாக ஏற்றுமதிக்காக திறக்கப்படுகின்றன. இங்கு, பாரம்பரிய மற்ற ஏற்றுமதிகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும். நமது நாட்டை பசுமை மற்றும் டிஜிட்டல் பொருளாதாரமாக மாற்றி, பிராந்திய பொருளாதார மற்றும் சேவை மையமாக அபிவிருத்தி செய்வோம். துறைமுக நகரம், சர்வதேச நிதி மையமாக மாற்றப்படும். ஆனால், இந்தத் திட்டத்தின் ஊடாக தொடர்ந்து பயணிப்பதன் மூலம் மாத்திரமே இவை அனைத்தையும் மேற்கொள்ள முடியும்.

நாம் இதுவரை கடைப்பிடித்து வந்த திட்டங்கள் காரணமாக நாட்டின் பெரும்பான்மையான மக்களுக்கு பல வசதிகளையும் சலுகைகளையும் வழங்க முடிந்துள்ளது. 'உறுமய' திட்டத்தின் கீழ் இருபது இலட்சம் குடும்பங்கள் காணி உரிமையாளர்களாக மாறுவர். பல தலைமுறைகளாக இழந்த காணி உரிமையை அவர்கள் மீண்டும் பெறுவார்கள்.

வறுமையில் இருக்கும் மற்றும் பாதிக்கப்படக் கூடியவர்களை பொருளாதார நெருக்கடியிலிருந்து பாதுகாக்கும் வகையில் சமூகப் பாதுகாப்புக்கான கொடுப்பனவை மூன்று மடங்காக உயர்த்த முடிந்தது. அதனால் குறைந்த வருமானம் பெறும் 24 இலட்சம் குடும்பங்களுக்கு 'அஸ்வெசும' வழங்கப்படுகிறது. 45 லட்சம் பாடசாலை மாணவர்களுக்கு 'சுரக்ஷா' காப்புறுதித் திட்டம் வழங்கப்படுகிறது. தகவல் தொழில்நுட்பம் கற்பிக்கும் அனைத்துப் பாடசாலைகளுக்கும் 'ஸ்மார்ட்' வகுப்பறைகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஒரு இலட்சம் பிள்ளைகளுக்கு ஜனாதிபதி நிதியம் புலமைப் பரிசில்களை வழங்குகிறது. நோயாளிகளுக்கு வழங்கும் நிவாரணத் தொகையையும் ஜனாதிபதி நிதியம் இரட்டிப்பாக அதிகரித்துள்ளது.

'மலைநாட்டு தசாப்தம்' என்ற திட்டத்தின் கீழ் 89 பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள கிராமங்களை மேம்படுத்தும் பணிகளை ஆரம்பிக்கவுள்ளோம். அதற்காக ஒரு பிரதேச சபைக்கு ரூ.100 மில்லியன் வரையில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. வரவு செலவுத் திட்ட பன்முகப்படுத்தப்பட்ட நிதியைக் கொண்டு தேர்தல் தொகுதிகளில் அபிவிருத்திச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. 25 பிரதேச சபைகளைத் தெரிவு செய்து விவசாய நவீனமயமாக்கல் வேலைத் திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளோம்.

சுற்றுலாத்துறை வளர்ச்சி கண்டுள்ளது. அதனால் பலர் பயனடைகின்றனர். அந்தத் துறையில் மேலும் பல முன்னேற்றங்களை ஏற்படுத்த முயற்சிக்கிறோம். சரிந்து கிடந்த பொருளாதாரம் ஓரளவு வலுவடைந்துள்ளது. அதன் பலனாக படிப்படியாக மக்களுக்கு நிவாரணங்களை வழங்குகிறோம்.

வர்த்தகச் சமூகத்தின் நலனுக்காக பராடே சட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளோம். இம்மாதத்தில் மின்சாரக் கட்டணத்தில் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. எதிர்வரும் நாட்களில் பாடசாலைப் புத்தகங்கள், கற்றல் உபகரணங்கள், சுகாதார உபகரணங்கள், மருந்து உள்ளிட்ட பொருட்களுக்கு வற் வரி விலக்களிக்க எதிர்பார்த்துள்ளோம். எதிர்காலத்தில் வற் வரியைக் குறைக்கவும் முடியும்.

சில்லறைத்தனமான விடயங்களால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுக்காண முடியுமென சிலர் கருதுகின்றனர். வெளிநாடுகளிலிருக்கும் இலங்கையர்களிடமிருந்து 10_100 டொலர் வரை சேகரிக்கலாம் என சிலர் யோசனை கூறுகிறார்கள். அது பாடசாலையை அண்மித்து வசிப்போரிடம் பணம் சேகரித்து பாடசாலையை அபிவிருத்தி செய்ய முற்படுவது போன்ற செயலாகும். பொருளாதாரம் பற்றிய அறிவை ஓரளவேனும் கொண்டிருப்பவர்கள், அவ்வாறான முறைகளில் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாது என்பதை அறிவார்கள்.

இந்தத் தருணத்தில் நம் முன்பிருக்கும் கேள்வி ஒன்றுதான்! நாம் தற்போது செல்லும் பாதையில் முன்னேறிச் செல்வதா? இல்லையா? என்ற கேள்வியே இருக்கிறது.

இவ்வாறு முன்னேறிச் சென்று, பொருளாதாரம் வலுவடைந்ததன் பலனை ஒரு நாடு என்ற வகையில் அடைவதா? இல்லாவிட்டால் இந்த நிலையிலிருந்து விலகிச் சென்று ஓரிரு வருடங்களுக்கு முன்பு இருந்ததைப் போல வங்குரோத்து நிலையை அடைவதா? என்பதை முடிவு செய்ய வேண்டும்.

நரகத்தில் மீண்டும் விழ வேண்டுமா? இல்லாவிட்டால் தற்போதை பாதையில் சுவர்க்கத்தை சென்றடைவதா? தற்போதைய பாதையைத் தவிர வேறு வழிமுறைகள் எவையும் இல்லை. நாம் இதுவரையில் அடைந்திருக்கும் வெற்றிகள் அதனை உறுதி செய்துள்ளன. அதனால் இதே வழியில் முன்னேறிச் செல்வதற்கான சட்ட திட்டங்களை பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக்கொள்ள எதிர்பார்க்கிறோம்.

அதே நோக்கில் பொருளாதார மறுசீரமைப்புச் சட்டமூலத்தை விரைவில் பாராளுமன்றத்தில் சமர்பிப்போம்.

இவை அனைத்தையும் பிரசித்தமாகும் நோக்கில் செய்யவில்லை.

## அரசாங்கத்தின் பயணப் பாதை வெற்றிகரமானது என்பது உறுதியாகியுள்ளது!

பல அரசியல் குழுக்கள் பிரசித்தமாவதற்காக கற்பனைக் கதைகளைச் சொல்கின்றன. கனவுக் கோட்டைகளையும் கட்டுகின்றனர். அவர்களுக்கு நாட்டின் யதார்த்தமான நிலைமை புரியவில்லை. அதிகாரத்திற்காக முட்டிமோதிக்கொள்கிறார்கள். அதிகாரத்திற்காகப் பொய் சொல்கிறார்கள்.

ஆனால் நான் ஒரு போதும் அதிகாரத்திற்காகப் பொய் சொல்லவில்லை. எனது எதிர்காலத்திற்காகவும் நான் பணியாற்றவில்லை. நாட்டின் எதிர்காலத்திற்காகவே செயற்படுகிறேன். அதனால் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் முனைப்புடன் செயற்படவில்லை. நாட்டை மீளக்கட்டியெழுப்ப வேண்டும் என்பதே எனது நோக்கமாகும்.

எமது திட்டங்கள் சமூகத்தின் ஒவ்வொரு தனிநபருக்கும் நெருக்கடியை ஏற்படுத்துவதாக அமைந்திருக்கலாம். அதனை நாம் உணர்ந்துள்ளோம். ஆனால் தனித்தனியே ஒவ்வொரு நபரினதும் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பது சரியான முறையாக அமையாது. அதனால் ஒருபோதும் நிலையான தீர்வை அடைய முடியாது. ஒட்டுமொத்த நாட்டையும் கட்டியெழுப்புவதே எமது நோக்கமாகும். வலுப்பெறும் பொருளாதாரத்தின் பலன்களை அனைவருக்கும் பெற்றுக்கொடுக்கவே எதிர்பார்க்கிறோம்.

அதற்காக பேராசிரியர் ஹேன்பிட்டகெதர ஞானவாச தேரர் 1983 எழுதி வெளியிட்ட "எமக்கு பௌத்த ஆட்சி முறை அவசியமாவது ஏன்" என்ற நூலில் குறிப்பிட்டிருக்கும் ஒரு விடயத்தை மேற்கோள் காட்ட விரும்புகிறேன்.

"தனிநபர் தேவைகளைப் பூர்த்தி செய்ய முயற்சிப்பதால் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கிட்டாது. மாறாக நெருக்கடி மேலும் வலுவடைந்து அதர்மம், மோசடி அதிகரித்து, அமைதியும் சமாதானமும் நலிந்து போகும்" என புத்த பெருமானின் போதனையில் கூறியுள்ளார். பொதுவான காரணத்தை அறிந்து தீர்வை வழங்க வேண்டியதன் அவசியத்தையை பௌத்த தர்மம் போதிக்கிறது. அதனால் நாம் அனைவரும் ஒட்டுமொத்த சமூகத்திற்கும் நன்மை பயக்கும் வகையிலான தீர்வுக்குச் செல்வோம்.

இந்த சரியான பயணத்தில் இணைந்துகொள்ள ஒன்றுபடுமாறு சபையில் இருக்கும் அனைவரிடமும் மக்களிடமும் கேட்டுகொள்கிறோம்." இவ்வாறு ஜனாதிபதி தனது உரையில் தெரிவித்தார்.

(ஜனாதிபதி ஊடகப் பிரிவு)

குடிசனமதிப்பீட்டின் போது

# இந்திய வம்சாவளி மக்கள் 'மலையக தமிழர்'என்றே பதிவு

## ஜனாதிபதி ரணில் அங்கீகாரம்

குடிசனமதிப்பீட்டின் போது இந்திய வம்சாவளி மக்கள் என்பதற்கு பதிலாக இனிமேல் 'மலையக தமிழர்' என்ற பதத்தை பயன்படுத்தி குடிசனமதிப்பீட்டை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க குடிசனமதிப்பீடு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

குடிசனமதிப்பீடுகளின் போது இந்திய வம்சாவளி மக்கள் என்று குறிப்பிடாமல் 'மலையக தமிழர்' என்ற பதத்தின் கீழ் மேற்கொள்ள வேண்டுமென விடுக்கப்பட்டிருந்த வேண்டுகோளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனுமதி வழங்கியுள்ளார்.இதன் பிரகாரம் , குடிசனமதிப்பீட்டை மேற்கொள்ளுமாறும் அந்த கடிதத்தில் ஜனாதிபதியின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.



கிரிகம்பமுனுவவில் முதியோர் பராமரிப்பு நிலையம் திறக்கப்பட்டுள்ளது.பழுதடைந்திருந்த கிரிகம்பமுனுவ மாதிரி ஆரம்ப பாடசாலையின் கட்டடம் நவீன மயப்படுத்தப்பட்டு,அதில் இந்த பராமரிப்பு நிலையம் திறக்கப்பட்டுள்ளது.இப்பராமரிப்பு நிலையத்தை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன மக்களிடம் கையளித்தார்.

இத்திறப்பு விழாவில் கொழும்பு மாவட்ட செயலாளர் கே.ஜி. விஜேசிறி, தேசிய முதியோர் செயலகத்தின் பணிப்பாளர் கே.ஜி. லனரோல், ஹோமாகம பிரதேச செயலாளர் பி. ஏ. டி.சிந்தக உள்ளிட்ட அரச அதிகாரிகள், உள்ளூர் முதியோர் சங்க உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

கிரிகம்பமுனுவவில் "சன்ஹிந்த" முதியோர் பகல்நேர பராமரிப்பு மத்திய நிலையம் பொல்கஸ்ஓவிட்ட, கிரிகம்பமுனுவ பிரதேசத்தில் சில காலங்களுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்டு, முதியோர் பகல்நேர பராமரிப்பு நிலையமாகபோக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தலைமையில் பொதுமக்கள் வசம் கையளிக்கப்பட்டது.

பாழடைந்த பழைய கட்டிடத்தை முழுமையாக சீரமைத்து தேவையான வசதிகளை ஏற்படுத்த தேசிய முதியோர் தலைமை செயலகம் தேவையான நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது. இவ்வாறு கொழும்பு மாவட்டத்தில் உள்ள ஒரே ஒரு முதியோர் பகல் நேர பராமரிப்பு மத்திய நிலையம் கிரிகம் பமுனுவ "சன்ஹிந்த" முதியோர் பகல்நேர பராமரிப்பு நிலையமமாகும்.

# தெஹிவளை ஸ்ரீ ஆஞ்சநேயர் ஆலயத்தில் சிவராத்திரி

கொழும்பு தெஹிவளை அருள்மிகு ஸ்ரீ ஆஞ்சநேயர் ஆலயத்தில் 9ஆவது வருடாபிஷேக இலட்சார்ச்சனை எதிர்வரும் (16.03.2024) ஆம் திகதி சனிக்கிழமை வரை நடைபெறவுள்ளது. ஸ்ரீமத் சந்திர சேகர சுவாமிகளின் தலைமையில் 9 ஆம் வருட இலட்சார்ச்சனை பூஜை தொடர்ந்து காலையும் மாலையும் விசேட ஹோமம், விசேட தீப ஆராதனைகளுடனும் நடைபெற்று வருகிறது. இதேவேளை இவ்வாலயத்தில் நாளை (08.03.2024) வெள்ளிக்கிழமை மஹா சிவராத்திரியன்று நான்கு யாம பூஜைகளும் நடைபெறவுள்ளது.

மாசி மாதம் வரும் தேய்பிறை சதுர்த்தசி நாளையே 'மகா சிவாராத்திரியாகப் போற்றிக் கொண்டாடுகிறோம். 'ராத்திரி' என்ற சொல்லுக்கு அனைத்தும் செயலற்ற ஒடுங்குதல் என்று பொருள். அதாவது, உயிர்கள் செயலற்ற ஈசன் நினைவாக ஒடுங்கும் காலமே சிவராத்திரி.

ஆகவே, இந்த புண்ணிய காலத்தில் சிவனின் திருநாமம் சொல்லி, நான்கு கால பூஜைகள் செய்து வழிபடுவது விசேஷம். இந்நாளின் மூன்றாம் காலத்தில் ஈசனை வழிபட்டால் எத்தனைய பாவங்கள் செய்திருந்தாலும் அது நம்மை விட்டு விலகிப் போகும்.

இதனால் இந்த ஜென்மம் மட்டுமல்லாது மறு ஜென்மத்திலும் நிறைவான வாழ்வை பெற முடியும். அந்த அளவிற்கு மகத்துவம் மிக்க நாளாகும்.

நான்கு யாம பூஜைகள் பின்வருமாறு:

சிவாராத்திரியன்று 01ஆம் யாமம் மாலை 6.00, 02ஆம் யாமம் இரவு 9.00, 03ஆம் யாமம் நள்ளிரவு 12.00, 04ஆம் யாமம் அதிகாலை 3.00 மணிக்கும் இடம்பெறவுள்ளது

# முச்சக்கரவண்டி - லொறி விபத்து மூவர் பலி, ஒருவர் படுகாயம்

## குருநாகல், பொத்துஹெரவில் சம்பவம்

குருநாகல், பொத்துஹெர, பூலோகொல்ல சந்திக்கருகில் இடம்பெற்ற முச்சக்கர வண்டி விபத்தில் மூவர் உயிரிழந்துள்ளனர். குருநாகலிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த லொறியுடன், எதிர்திசையில் வந்த முச்சக்கரவண்டி மோதி, இவ்விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்த விபத்தில் முச்சக்கரவண்டியில் பயணித்த நால்வர் படுகாயமடைந்து குருநாகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். பின்னர் சிகிச்சை பலனின்றி மூவர் உயிரிழந்துள்ளனர்.

லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை பொத்துஹெர பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இன்றைய பலன்கள்

## (07.03.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:** எதிர்பார்க்கும் லாபத்தை பெற கூட்டாளிகளுடன் கலந்து ஆலோசிப்பது நல்லது. பண பொறுப்பில் உள்ளவர்களால் பிரச்சினைகள் ஏற்படும்.

**ரிஷபம் :** தள்ளி வைத்த வேலையை உடனே செய்ய வேண்டிய சூழ்நிலை உருவாகலாம். கூட்டு தொழில் செய்பவர்கள் வியாபார அபிவிருத்தி பற்றி பங்குதாரர்களிடம் ஆலோசிப்பீர்கள்.

**மிதுனம்:** கூட்டு தொழில் செய்பவர்களுக்கு அதிக லாபம் கிடைக்கக்கூடும். பணியாளர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கி உற்சாகம் அளிப்பீர்கள்.

**கடகம்:** தொழில் போட்டிகளை சமாளிப்பது பற்றி பங்குதாரர்களுடன் ஆலோசிப்பீர்கள். குடும்பத்தில் சிறு சிறு பிரச்சனைகள் இருந்தாலும் பெரிய பாதிப்பு ஏற்படாது.

**சிம்மம்:** கூட்டுத் தொழில் செய்பவர்கள் சுமாரான லாபம் பெறக்கூடும். பணியாளர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி:** கூட்டு தொழில் நன்றாக நடைபெறும். எதிர்பார்க்கும் லாபம் குறையாது. போட்டியாளர்களின் கரங்கள் வலுத்து இருப்பதால் அவர்களை முறியடிக்க பங்குதாரர்களுடன் ஆலோசிப்பீர்கள்.

**துலாம்:** கூட்டுத்தொழில் செய்பவர்கள் வியாபாரத்தில் அதிக லாபம் பெறக்கூடும். குடும்பத்தில் மகிழ்வான சூழ்நிலை காணப்படும். அதிக வேலைகளால் பெண்களுக்கு ஆரோக்கிய குறை ஏற்படலாம்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் சிறு சிறு பிரச்சனைகள் ஏற்பட்டாலும் பெரிய பாதிப்புகள் இருக்காது. பெண்கள் அடுப்படியில் பணியாற்றும் போது கவனம் தேவை.

**தனுசு:** பணிகளில் புதிய யுக்த்தியை கையாளுவீர்கள். கூட்டுத்தொழில் செய்பவர்களுக்கு வியாபாரம் முன்னேற்றமாக நடைபெறும். குடும்பம் சிறப்பாக நடைபெறும்.

**மகரம்:** கூட்டுத் தொழில் செய்பவர்கள் பணியாளர்களின் ஒத்துழைப்புடன் அதிக லாபம் பெறுவர், தாய் வழி உறவுகளின் சுப நிகழ்வுகளில் பங்கேற்கும் பெண்களுக்கு மன வருத்தம் உண்டாகலாம்.

**கும்பம்:** சொந்த தொழில் செய்பவர்கள் வாடிக்கையாளர்களின் அவசரம் கருதி அவரது வேலையை விரைவாக செய்து கொடுப்பார்கள். கூட்டுத்தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் ஏற்படலாம்.

**மீனம்:** குடும்பத்தில் சிலருக்கு ஆரோக்கிய குறை ஏற்பட்டு அகலும். கலைஞர்கள் அதிக முயற்சியின் பெயரில் புதிய வாய்ப்புகளை பெறுவர். இருப்பினும் போதிய வருமானம் கிடைக்காது.

## அதிகாரப் பகிர்வால் நாடு பிளவுபடும்...

நம்பிக்கைப்பொறுப்பு பற்றுச்சீட்டுக்கள் (திருத்தச்) சட்டமூலம், ஈட்டுச்சட்டம் (திருத்தச்) சட்டமூலம், நிதி குத்தகைக்குவிடுதல் (திருத்தச்) சட்டமூலம் உள்ளிட்ட சட்டம் மூலங்கள் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்,

நம்மத்தியில் வேறுபாடுகள் காணப்பட்டாலும் தமிழ்க் கட்சி தலைவர்களை வாழ்த்த வேண்டும். கடந்த வரவு செலவுத்திட்டத்தின் போது அவர்கள் அனைவரும் நாங்கள் தனி நாடு கோரவில்லை, ஒரே நாட்டுக்குள் அதிகார பகிர்வையே கோருவதாகவே அவர்கள் தெரிவித்தனர். சமஷ்டி முறை வரை வேண்டும் என்று பொன்னம்பலம் கூறியதுடன் ஏனையவர்கள் தமக்கு போதுமான அதிகாரங்களை பகிர வேண்டும் என்று கூறினர்.

இவ்வாறு கூறியதில் எந்தத் தவறும் கிடையாது. அமைதியான முறையில் தமது கருத்துக்களை கூறும் சந்தர்ப்பம் இருக்க வேண்டும். அது தொடர்பில் பேச வேண்டும். அதிகார பகிர்வால் நாடு பிளவடையும் என்பது முற்றிலும் பொய்யாகும். நான், அண்மையில் ஐரோப்பிய நாடுகள் சிலவற்றுக்கு சென்றிருந்த போது அங்கு சிலநாடுகளில் ஆய்வு செய்தேன். சுவிற்சர்லாந்தில் சிறப்பாக நிர்வாகம் செய்கின்றனர். அதேபோன்று பெல்ஜியம் போன்ற இடங்களுக்கு சென்றிருந்தேன். சிறிய நாடுகளில் அதிகார பகிர்வு முடியாது என்றே இங்கே நாம் கூறுகிறோம். ஆனால், பெல்ஜியம் எமது நாட்டை விட சிறிய நாடு. அங்கு 10 மாகாணங்கள் உள்ளன. அவற்றை இணைத்து பலமான சமஷ்டி அரசு அமைக்கப்பட்டுள்ளது. அவர்கள் அமைதியாக வாழ்கின்றனர்.

நாம் ஒவ்வொருவர் மீதும் வைராக்கியம், நம்பிக்கையின்மையை ஏற்படுத்திக்கொண்டிருந்தால் எம்மால் முன்னோக்கி செல்ல முடியாது.

கட்சி பேதமின்றி அதிகார பகிர்வு தொடர்பில் தமது நிலைப்பாடு என்ன என்பது தொடர்பில் அனைவரும் கூற வேண்டும். அதிகார பகிர்வு நாட்டை பிளவு படுத்தும் என்று சிலர் கூறுகின்றனர். ஆனால் அப்படி நடக்காது. கொல்வின் ஆர்.டி சில்வா 1956இல் சிங்கள மொழியை மட்டும் அரசகரும மொழியாக்கும் போது 2 மொழிகள் ஒருநாடு என்றும், ஒரு மொழி இரண்டு நாடு என்றும் கூறியிருந்தார்.

இந்நிலையில் 30 வருட யுத்தத்தின் பின்னரே இருமொழிகள் அரச கரும மொழியாக்கப்பட்டுள்ளது. 1956ல் செய்திருந்தால் 30 வருட யுத்தத்தை தடுத்திருக்கலாம். நாங்கள் சந்தர்ப்பவாத அரசியலில் இருந்து விடுபட வேண்டும். எதிர்கால சந்ததியினர் தொடர்பில் பார்க்க வேண்டும்.

இலங்கையிலிருந்து பல வருடங்களுக்கு முன்னர் வெளியேறி, பல நாடுகளில் வசிக்கும் புலம்பெயர்ந்தோரில் பிரிவினைவாத நிலைப்பாட்டில் இருப்பவர்களும் இருக்கின்றனர். அவர்கள் இப்போதும் ஈழம் தொடர்பில் கதைக்கின்றனர்.

இவர்களால் இலங்கைக்குள் பிரிவினைகள் ஏற்படலாம். இதனால் அவர்களை மறந்துவிட வேண்டும்.

## அலி சப்ரி ரஹீம் எம்.பியின்...

சமல் ராஜபக்ஷவினால் 2024 ஜனவரி 24 இல், பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் பரிந்துரைகளின் அடிப்படையில் இந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

## 'என்னை பதவியிலிருந்து...

தெரிவு செய்யப்பட்டது முதல் சில உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகள் தன்னை பதவியிலிருந்து அகற்றுவதில் தீவிரமாகயிருந்ததாக அவர் இந் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

உள்நாட்டு அரசியலில் வெளிநாட்டு தலையீடு என்பது இலங்கை அரசியலின் ஒரு பகுதியாகிவிட்டதென தெரிவித்துள்ள அவர், இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் முதல் 60 வருடங்களில் இந்நிலை காணப்படவில்லையெனவும் தெரிவித்துள்ளார்.

தன்னை அரசியலிலிருந்து அகற்றுவதற்கான அரசியல் பிரசாரம் இலங்கை அரசியலில் புதிய அம்சத்தை கொண்டுவந்ததெனவும் குறிப்பிட்டுள்ள கோட்டாபய ராஜபக்ஷ, சுதந்திரத்தின் பின்னர் இலங்கையில் ஆட்சிமாற்றங்கள் அமைதியான முறையிலேயே இடம்பெற்றுள்ளன எனவும் குறிப்பிட்டுள்ளார்.

2022 இல், இடம்பெற்ற சம்பவங்களால் நாட்டின் எதிர்காலத்துக்கு கடும் பாதிப்பென தெரிவித்துள்ள கோட்டாபய ராஜபக்ஷ, சர்வதேச அளவில் முன்னெடுக்கப்பட்ட ஆட்சிமாற்றத்துக்கான நடவடிக்கைகளின் நேரடி அனுபவங்களை தனது நூல் கொண்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

## பெறுமதி சேர் வரி திருத்த சட்டம் மூலம்...

ஆதரவாக 59 வாக்குகளும் எதிராக 35 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

பாராளுமன்றத்தில் நேற்று இடம் பெற்ற பெறுமதி சேர் வரி, சமூக அறவீட்டு வரி உள்ளிட்ட வரி சட்டமூலம் மீதான இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதம் இடம்பெற்றது.இதன்போது பெறுமதி சேர் வரி சட்டமூலத்துக்கு சபை அனுமதி வழங்குகிறதா? என சபாநாயகர் வினவிய போது ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன வாக்கெடுப்பை கோரினார்.

அதன் பிரகாரம் வாக்களிப்பு கோரப்பட்ட போது பெறுமதிசேர் வரி (திருத்தச் ) சட்டமூலத்துக்கு ஆதரவாக 59 வாக்குகளும்,எதிராக 35 வாக்குகளும் அளிக்கப்பட்டன.24 மேலதிக வாக்குகளால் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது.

## தீர்வுகளை வழங்கினாலும் பொலிஸ்...

காணிப்பிரச்சினைகளுக்கு ''லீசிங் ''அடிப்படையில் தாற்காலிகத்தீர்வு காண்பதற்கு ஜனாதிபதி முன்வைத்த யோசனையை தமிழ் தேசியக்கூட்டமைப்பு முற்றாக நிராகரித்தது.

இங்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தமிழ் மக்களின் காணிகள் விடுவிப்பு தொடர்பில் கருத்துரைத்தபோது,வலிகாமம் வடக்கிலுள்ள மக்களின் காணிகளை 'குத்தகை' (லீசிங்) அடிப்படையில் விடுவிப்பது தொடர்பில் ஆராய்வோம் எனக் கூறினார். இதனை கடுமையாக எதிர்த்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு, மக்களின் சொந்தக் காணிகளை எப்படி ''குத்தகை''அடிப்படையில் அவர்களுக்கு வழங்குவது?இது பெரும் அநீதியல்லவா? இதனை எமது மக்களோ, நாமோ எப்படி ஏற்றுக்கொள்வது என்று கேள்வி எழுப்பியுள்ளனர்.

இதற்கு ஜனாதிபதி பதிலளிக்கையில், காணிகள் விடுவிப்பு தொடர்பில் சகல பக்கங்களிலும் பிரச்சினைகள் உள்ளன. நான் , அனைத்து பிரச்சினைகளையும் பார்க்க வேண்டும். எனவே முதலில் வடக்கு மக்களின் காணிகளை ''குத்தகை ''அடிப்படையில் அம் மக்களுக்கு வழங்குவோம். பின்னர் அதனை அவர்களுக்கு முழுமையாக உரித்தாக்க நடவடிக்கை எடுப்போம் என்றார். எனினும் இதற்கு ஸ்ரீதரன் எம்.பி. உள்ளிட்டவர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர் .

அத்துடன் இந்த காணி விடுவிப்பு வடக்கில் மட்டுமல்ல கிழக்கு மாகாணத்திலும் பெரும் பிரச்சினையாகவுள்ளது. அங்கும் பெருமளவு காணிகள், மேய்ச்ச்சல் நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன அவையும் விடுவிக்கப்பட வேண்டும் என சாணக்கியன் எம்.பி. வலியுறுத்தினார். அதேவேளை மன்னார் மாவட்டத்திலுள்ள காணிப்பிரச் சினைகள் தொடர்பில் சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி.யும் ஜனாதிபதிக்கு சுட்டிக் காட்டினார்.

அதனைத்தொடர்ந்து கருத்துரைத்த ஜனாதிபதி 13 ஆவது திருத்த சட்டத்தின் மூலம் பல்கலைக்கழகங்களின் அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனக்கூறியபோது. தமிழ் மக்களின் பிரச்சினைகள் நீண்ட காலமாக தீர்க்கப்படாதுல்ல நிலையில் பல்கலைக்கழகங்களின் அதிகாரங்களை வழங்குவது ஒரு தீர்வா?முதலில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணுங்கள். அத்துடன் பொலிஸ் அதிகாரத்தின் நிலை என்னவென தமிழ் தேசியக்கூட்டமைப்பின் கேள்வி எழுப்பினர். இதற்கு ஜனாதிபதி பதிலளிக்கையில் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு 13 ஆவது அரசியலமைப்புத்திருத்தத்தின் மூலம் தீர்வுகளை வழங்க முடியும். ஆனால் அதிலுள்ள பொலிஸ் அதிகாரம் தொடர்பில் தற்போது பேச முடியாது. பேசினால் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது என்றார்.

## நாட்டின் பொருளாதாரம் வலுவடைவு...

சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர்,

"பொருளாதார நெருக்கடியால், கடந்த காலத்தில் எவ்விதமான அபிவிருத்தித் திட்டங்களும் செயல்படுத்தப்படவில்லை.

ஆனால், தற்போது பொருளாதாரம் ஓரளவு வலுவான நிலைமைக்கு திரும்புவதால் அவசியமான அபிவிருத்தி பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கொழும்பிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் சீன உதவியின் கீழ், 2000 வீடுகளை அமைப்பதற்கான திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. மேலும், மாடிக் குடியிருப்புகளில் வசிப்போருக்கு உரிமத்தை வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன், "மலைநாட்டு தசாப்தம்" அபிவிருத்தித் திட்டத்தின் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், கரையோர மற்றும் தாழ்நில அபிவிருத்தி நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதன் கீழ் நாடளாவிய ரீதியில் பிரதேச செயலக மட்டத்தில் பல அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

வர்த்தக நடவடிக்கைகளில் இருந்து விலகும் கொள்கையின் கீழ், கொழும்பு ஹில்டன் ஹோட்டலை தனியார் துறை முதலீட்டிற்காக வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.இதற்காக ஏற்கனவே நான்கு வர்த்தகர்கள் இதற்காக முன் வந்துள்ளனர்.

ஆனால் அரசாங்கம் எதிர்பார்க்கும் முதலீடு நிச்சயமாக அங்கு கிடைக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறோம் .மேலும் எமது அமைச்சின் கீழ் உள்ள ஹயாத் ஹோட்டலின் 50% பணிகள் நிறைவடைந்துள்ளன.

அதற்கான முதலீட்டாளரையும் தேடுகிறோம். டி.ஆர்.விஜேவர்தன மாவத்தையின் தாமரை கோபுரத்திலிருந்து லேக்ஹவுஸ் சுற்றுவட்டம் வரையிலான இரு பக்கங்களையும் அபிவிருத்தி செய்வதற்கு முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## அமைச்சர் டக்ளஸுடன்... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

மேலதிகமாக மட்டக்களப்பு வட்டவான் , கொக்கடிச் சோலை ஆகிய இடங்களில் இறால் பண்ணைகள் தொடர்பாகவும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் கலந்துரையாடினார்.

இக்கலந்துரையாடலின்போது திருகோணமலை நகரசபைச் செயலாளர் மற்றும் கிண்ணியா நகரசபைச் செயலாளர் ஆகியோருடன் அமைச்சின் செயலாளர், அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

## தமிழக மீனவர்களை அனுமதிக்கும்...

இரு நாடுகளுக்குமிடையிலான கடற்றொழில் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் வரை, குறிப்பிட்ட காலத்துக்கு இலங்கை கடற்பகுதியில் பிரவேசிப்பதற்கு அனுமதி வழங்குமாறு, தமிழக கடற்றொழில் அமைச்சர் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடலுக்குள் வரமாட்டார்கள் என தமிழக அரசு உறுதியளித்த பின்னரே மீன்பிடி விவகாரம் குறித்து விவாதிக்க முடியுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதன்போது திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

இந்தியஇலங்கை மீனவர் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பதற்கான கோரிக்கைக்கு இந்திய அரசு இன்னும் பதிலளிக்கவில்லையென வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

## கொழும்பில் காற்றின் மாசு...

இந்நிலை சுவாச நோய் பாதிப்புக்குள்ளானவர்களின் ஆரோக்கியத்தில் மோசமான விளைவை ஏற்படுத்தக்கூடும் எனவும் கூறப்பட்டுள்ளது.

காலி கராப்பிட்டியில் 90 ஆகவும், புத்தளத்தில் 88 ஆகவும், குருநாகல் மற்றும் அநுராதபுரத்தில் 86 ஆகவும் காற்று மாசு சுட்டெண் பதிவாகியுள்ளது. நாட்டின் காற்று மாசுக் குறியீடு 50 ஐ தாண்டியிருப்பதால், சுவாச நோய் பாதிப்புக்குள்ளானவர்கள் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது. இதனால், மக்கள் இது குறித்து கவனம் செலுத்துமாறு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

## முட்டைக்கான அதிகபட்ச...

கைத்தொழில் அமைச்சு தீர்மானித்துள்ளது.

ஒரு முட்டை உற்பத்திக்கான செலவு சுமார் 30 ரூபா எனவும், தற்போது நாட்டின் நாளாந்த முட்டை உற்பத்தி 5.8 மில்லியன் எனவும், நாளொன்றுக்கு 7.5 மில்லியன் முட்டைகள் தேவைப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது 1,30,000 தாய்க் கோழிகள் உள்ளது போதும் குஞ்சுகள் மற்றும் முட்டை உற்பத்தி அதிகரிக்கவில்லை.

இதற்கான காரணத்தை கண்டறியுமாறு விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

## இரண்டு ஆண்டு கால...

வெளிப்படுத்தும் "Press Vs. Prez" நூல் வெளியீட்டு விழா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் இன்று (07) மாலை 4.00 மணிக்கு கொழும்பு தாமரைத் தடாக அரங்கில் நடைபெறும்.

ஐக்கிய தேசியக் கட்சி தவிசாளரும்,பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தனவினால் இந்த நூல் தொகுக்கப்பட்டுள்ளது.

2021 ஜூன் (23) ரணில் விக்கிரமசிங்க 09ஆவது பாராளுமன்ற உறுப்பினராகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்ட தினம் முதல் தேசிய தலைமைத்துவ பயணம் வரை, பத்திரிகைகளில் வெளியான சுமார் 600 கார்டூன்களைத் திரட்டி இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

40 கேலிச்சித்திரக் கலைஞர்கள் மற்றும் சுமார் 20 பத்திரிகையாளர்கள் இந்நூலுக்கு பங்களித்துள்ளனர், கேலிச்சித்திரக் கலைஞர்கள் மற்றும் தொலைக்காட்சி தொகுப்பாளர்களும் இவ்விழாவில் கௌரவிக்கப்பட உள்ளனர்.

இவ்விழாவில் இந்திய கேலிச்சித்திரக் கலைஞர் நாலா பொன்னப்பா விசேட விருந்தினராக பங்கேற்பதுடன், சிறப்புரையும் ஆற்றுகிறார்.

பேராசிரியர் ரொஹான் நெத்தசிங்க நூலாய்வு நிகழ்த்தும் அதே வேளை, இந்நிகழ்விற்கு முன்னாள் ஜனாதிபதிகள், அமைச்சர்கள்,பாராளுமன்ற அமைச்சர்கள், வெளிநாட்டு தூதுவர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நெருங்கிய உறவினர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கு அகதிகளாக சென்று திரும்பிய

# இலங்கையரின் பிள்ளைகளுக்கு இலங்கை பிரஜாவுரிமை வழங்கல்

வவுனியா விசேட நிருபர்



யுத்தம் காரணமாக இலங்கையிலிருந்து அகதிகளாக இந்தியா சென்று அங்கிருந்து மீண்டும் இலங்கை திரும்பியவர்களின் பிள்ளைகளுக்கு இலங்கை பிரஜாவுரிமை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வவுனியா மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் யுத்தம் காரணமாக அகதிகளாக இந்தியா சென்ற இலங்கையர்கள், இந்தியாவில் தங்கியிருந்த போது அவர்களுக்கு பிறந்த பிள்ளைகளுக்கே இலங்கை பிரஜாவுரிமை வவுனியாவில் வழங்கி வைக்கப்பட்டது.

யுத்தம் முடிந்த பின்னர் மீண்டும் இலங்கை திரும்பிய அவர்களின் பிள்ளைகள், இலங்கை பிரஜாவுரிமையை பெறுவதில் சிக்கலை எதிர் நோக்கினர்.

# கோப்பாய் கலாசாலையில் மகளிர் தின சிறப்பு நிகழ்வு



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் மகளிர் தின சிறப்பு நிகழ்வு, அக்கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் நேற்று புதன்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் ச.லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கலாசாலையின் பழைய மாணவியும் யாழ்ப்பாணக் கல்வி வலய சேவைக்கால ஆசிரிய ஆலோசகருமான நளினி அகிலதாஸ் பிரதம விருந்தினராக கலந்துகொண்டார்.

இந்நிகழ்வை கணிதநெறி ஆசிரிய மாணவர் செல்வரட்ணம் சந்திரகுமார் நெறிப்படுத்தினார்.

ஆசிரிய மாணவர் உரையை ஆங்கிலநெறி ஆசிரிய மாணவி தினேஸ் கௌசியாவும் விரிவுரையாளர் உரையை முத்துக்குமாரு ஜெயக்குமாரியும் ஆற்றினர். பிரதம விருந்தினருக்கான அறிமுக உரையை விரிவுரையாளர் ரஜிதா சின்னத்துரை ஆற்றினார். கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் பெண்களின் கல்விக்கு வழங்கிய பங்களிப்புத் தொடர்பாக கலாசாலை அதிபர் ச.லலீசன் எடுத்துக்கூறி நிறைவுரை ஆற்றினார்.

# திருக்கேதீஸ்வரத்தில் சிவதீட்சை வழங்கல்

சாவகச்சேரி விசேட நிருபர்

மகா சிவராத்திரி தினமான நாளை (08) காலை 9.00 மணி தொடக்கம் மதியம் 12.30 மணிவரை மன்னார் திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் சிவதீட்சை வழங்கப்படவுள்ளதாக, சைவப்புலவர் சங்கத் தலைவர் சி.கா.கமலநாதன் தெரிவித்தார்.

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் ஏற்பாட்டில் சிவதீட்சை வழங்கப்படவுள்ளதாகத் தெரிவித்த அவர், சிவதீட்சை பெற விரும்புவோர் 0777197067 என்ற அலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு முன்பதிவு செய்யுமாறும் கேட்டுக்கொண்டார்.

இந்நிலையில் உரிய நேரத்துக்கு திருக்கேதீஸ்வரம் ஆலயத்தின் திருவாசக மடத்துக்கு வருகை தந்து சமயக் கிரியைகளில் பங்குபற்றி சிவதீட்சையை பெற்றுக் கொள்ள முடியுமெனவும், அவர் மேலும் தெரிவித்தார்.


## மீட்கப்படாத அடகுத் தங்க நகைகளை ஏலத்தில் விற்றல்

வ/ப இலங்கை கூட்டுறவு கிராமிய வங்கி மகா சங்கத்தின் அடகுப் பிரதிநிதிகளான வரையறுக்கப்பட்ட தெஹிபினிபலாத்த கூட்டுறவு கிராமிய வங்கி சங்கத்தினால் 2022.12.31ம் திகதி உட்பட அத்தினம் வரை அடகு வைக்கப்பட்டு 2024.03.29 வரை மீட்கப்படாத தங்க நகைகள் 2024.03.30,31ம் திகதிகளில் மு.ப. 9.30 இற்கு எடம்பிட்டிய, பதுளை வீதியில் அமைந்துள்ள கிராமிய வங்கி சங்க கட்டிடத்தில் மேல் மாடியில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**கௌரவ தலைவர்,**
**வ/ப தெஹிபினிபலாத்த கூட்டுறவு கிராமிய வங்கி சங்கம்,**
**பதுளை வீதி,**
**எடம்பிட்டிய.**


## சாவகச்சேரியில் மணல் கடத்தல்காரர் இருவர் கைது

யாழ்ப்பாணம் குறூப் நிருபர்

சாவகச்சேரியில் நேற்று புதன்கிழமை அதிகாலை 2.00 மணியளவில் பொலிஸார் மீது தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச்செல்ல முற்பட்ட குற்றச்சாட்டில் மணல் கடத்தல்காரர்கள் இருவரை பொலிஸார் கைது செய்துள்ளதுடன், இவர்களிடமிருந்து மணலுடன் டிப்பர் வாகனமொன்றையும், மோட்டார் சைக்கிளொன்றையும் கைப்பற்றியுள்ளனர்.

நுணாவிலிலிருந்து சாவகச்சேரி நோக்கிப் பயணித்த டிப்பர் வாகனத்தை போக்குவரத்துக் கடமையிலிருந்த சாவகச்சேரி பொலிஸார் வழிமறித்த போது, அவ்வாகனம் நிறுத்தாமல் சென்றது. இந்நிலையில் டிப்பர் வாகனத்தை துரத்திச்சென்ற பொலிஸார், சாவகச்சேரி சுற்றுவட்டத்தில் மீண்டும் வாகனத்தை வழிமறித்தனர். இதன்போது டிப்பர் வாகனச் சாரதி மற்றும் டிப்பர் வாகனத்துடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர், பொலிஸார் மீது இரும்புக் கம்பிகளால் தாக்க முற்பட்டதைத் தொடர்ந்து, இரு சந்தேகநபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

எனினும் டிப்பர் வாகனத்துக்கு வழிகாட்டிச்சென்ற ஒருவர் தப்பிச் சென்றுள்ளதாகவும் இவரைக் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்பின்னர் டிப்பர் வாகனம், மோட்டார் சைக்கிளை சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கு பொலிஸார் கொண்டு சென்றனர்.


අතුරුදහන් වූ තැනැත්තන් පිළිබඳ කාර්යාලය
காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்
OFFICE ON MISSING PERSON

## ஆட்சேர்ப்பு

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகமானது (OMP) 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (ஸ்தாபித்தல், நிர்வகித்தல் மற்றும் பணிகளை நிறைவேற்றுதல்) சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட ஓர் அலுவலகமாகும்.

OMP இன் பணிகளை நிறைவேற்றுவதற்காக ஆர்வமுள்ள மற்றும் அனுபவமுள்ள தொழில் நிபுணர்களை பின்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகமானது அழைக்கிறது.

I. பாதிக்கப்பட்டவர் மற்றும் குடும்ப ஆதரவு வழங்கல் தலைவர் (HM 1-1)
II. நிதி மற்றும் வழங்கல் பெறுகை பிரிவுத் தலைவர் (HM 1-1)
III. சபைச் செயலாளர் / சிரேஷ்ட சட்ட அலுவலர் (MM 1-1)
IV. முகாமைத்துவ உதவியாளர் (MA 1-1)

பதவி வெற்றிடங்கள் மற்றும் மேலதிக தகவல்களுக்காக,

https://www.moj.gov.lk என்ற இணைய பக்கத்தை அணுகவும்.

Home> Departments & Institutes> Institutions > Office on Missing Persons

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 2024 மார்ச் 28.

**தலைவர்**
**காணாமல் போன நபர்களின் அலுவலகம்**
**தொலைபேசி: 011-2861431 தொலைநகல்: 011-2861450**



**விலைமனுக்களுக்கான அழைத்தல்**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்**

**CLEANING OF DRAIN LINES, VALVE PITS, GREASE TRAPS & GROUND LEVELLING AT TRINCOMALEE 24 TANKS DEVELOPMENT PROJECT**
**B/12/2024**

Cleaning of drain lines, Valve pits, Grease Traps & Ground Levelling at Trincomalee 24 Tanks Development Project என்பதற்காக புகழ்வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக் கொள்வார்.

ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் விலைமனுக் கோரல் ஆவணத்தில் கூறப்பட்டுள்ள தகுதித் தன்மை மற்றும் தகைமை தகவுத்திறனுக்கு அமைந்தொழுகியிருத்தல் வேண்டும்.

விலைமனுக்கோரல் ஆவணங்களை 2024.03.28 ஆம் திகதியன்று வரையும் வார நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் கொழும்பு-09, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, 609 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன 1 ஆம் மாடியின் பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்திலிருந்து, மீளளிக்கப்படாத கட்டணமாக 2000 ரூபாவை (Rs.1653.58 + 2.5% SSCL + 18% VAT) இபெகூ இற்கு செலுத்துவதன் மூலம் அல்லது **http://ceypetco.gov.lk/public -tenders/** என்ற இபெகூ இன் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்வதன் மூலமும் பெற்றுக் கொள்ளாலாம்.

அனைத்து விலைமனுக்களும் 40,000 ரூபா பெறுமதியான விலைமனுப் பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

விலைமனுக்கள் 2024.04.01 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு மூடப்பட்டு கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியான இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்தில் மூடும் நேரத்தின் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம்.

தெளிவுறுத்தல்கள் ஏதுமிருப்பின், 011-5455288 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்) மே/பா.,**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,**
**1 ஆம் மாடி,**
**இல.: 609, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, கொழும்பு-09.**



Repeat Your Ad For Better Offers



**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**

## ரூ.270,000 மில்லியன் திறைசேரி முறிகளை வழங்கல்

11.25%2026 ‘A’ தொடர்களின் கீழ் ரூ.130,000 மில்லியனையும் 11.50%2028 ‘B’ தொடர்களின் கீழ் ரூ.110,000 மில்லியனையும் 11.25%2031 ‘A’ தொடர்களின் கீழ் ரூ.30,000 மில்லியனையும் கொண்ட திறைசேரி முறிகள் 2024 மார்ச் 12ஆம் திகதி இடம் பெறும் ஏலங்களின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

**இத்திறைசேரி முறிகளின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.**

| தொடர்கள் | 11.25%2026 ‘A’ | 11.50%2028 ‘B’ | 11.25%2031 ‘A’ |
|---|---|---|---|
| ISIN* | LKB00326L151 | LKB00528L152 | LKB01231C151 |
| முன்வைக்கப்பட்ட தொகை | ரூ.130,000 மில்லியன் | ரூ.110,000 மில்லியன் | ரூ. 30,000 மில்லியன் |
| நறுக்கு வீதம் | 11.25% ஆண்டொன்றிற்கு | 11.50% ஆண்டொன்றிற்கு | 11.25% ஆண்டொன்றிற்கு |
| வழங்கப்பட்ட திகதி | 2023 டிசெம்பர் 15 | 2023 டிசெம்பர் 15 | 2019 மார்ச் 15 |
| முதிர்வுத்திகதி | 2026 டிசெம்பர் 15 | 2028 டிசெம்பர் 15 | 2031 மார்ச் 15 |
| நறுக்கு கொடுப்பனவுகள் செலுத்தப்படும் திகதிகள் | 01 ஜீன் & 15 டிசெம்பர் | 15 ஜீன் & 15 டிசெம்பர் | 15 மார்ச் & 15 செப்டம்பர் |
| ஒன்று சேர்ந்த வட்டி வீதம் | ரூ. 100.00 இற்கு ரூ. 2.7971 | ரூ. 100.00 இற்கு ரூ. 2.8593 | ரூ.100 இற்கு ரூ. 0.0000 |
| ஏலவிற்பனைத் திகதி | 2024 மார்ச் 12, செவ்வாய்க்கிழமை | | |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | 2024 மார்ச் 12, செவ்வாய்க்கிழமை, மு.ப.11.00 மணி | | |
| தீர்ப்பனவுத் திகதி | 2024 மார்ச் 15 | | |
| விலைக்குறிப்பீட்டின் ஆகக் குறைந்த தொகை | ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ. 5,000,000/-) அத்துடன் ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ. 1,000,000/-) பெருக்கங்களிலிருந்து | | |

முதனிலை வணிகர்களிடமிருந்து உண்மையான விலைகளின் (இறுதி நறுக்குக் கொடுப்பனவுத் திகதியிலிருந்து தீர்ப்பனவு செய்யும் நாள் வரையான ஒன்றுசேர்ந்த வட்டி நீங்கலாக) அடிப்படையில் விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. விலைக்குறிப்பீடுகள் சமர்ப்பிக்கின்ற இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீடு வசதியினூடாக மாத்திரமே மேற்கொள்ளப்பட வேண்டும். முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் (பொதுமக்கள் அல்லது எவேரனும் வேறு முதலீட்டாளர்) மேலே குறிப்பிட்டவாறு விலைக்குறிப்பீடொன்றின் குறைந்தபட்ச தொகையுடன் இணங்கியொழுகி பின்வரும் முதனிலை வணிகர்களூடாக ஏலத்திற்கு விலைக்குறிப்பீடுகளை சமர்ப்பிக்கலாம்.

**முதனிலை வணிகர்களின் பட்டியல்**

அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் 2206297
இலங்கை வங்கி 2541938
கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி 2317777
கொமர்ஷல் பாங் ஒப் சிலோன் பிஎல்சி 2332319
ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி 2639883
என்எஸ்பீ பன்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் 2425010
மக்கள் வங்கி 2206783
சம்பத் வங்கி பிஎல்சி 2305842
செலான் வங்கி பிஎல்சி 2456340
வெல்த்றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் 2675096

ஒவ்வொரு தொடர்கள்/ஐஎஸ்ஐஎன் தொடர்பிலும், சந்தை நிலைமைகளுக்கமைய, இலங்கை மத்திய வங்கி, முன்வைக்கப்படுகின்ற தொகையினை விஞ்சாத ஏதேனும் தொகையினை ஏற்றுக்கொள்ளக்கூடும். முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் இரண்டாந்தரச் சந்தையில் முதனிலை வணிகர்களிடமிருந்தும் அல்லது ஏதேனும் வேறு உரிமம்பெற்ற வங்கியிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யலாம்.

* பன்னாட்டு பிணையங்கள் அடையாள இலக்கம்

**என். டி. வை. சி. வீரசிங்க**
**பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

**வழங்கும் அலுவலகம்,**
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம் : www.cbsl.gov.lk**



## Invitation for Bids (IFB)

**Democratic Socialist Republic of Sri Lanka**
**Valikamam East Pradeshiya Sabha, Puttur.**
**Northern Province**
**Bidding Documents for Procurement of Colored waste Bins**

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received a Grant from the European union towards the cost of Local development Support Project, and intends to apply part of the proceeds of this credit to payments under the Contract for the Good (s) stated in the Table below.
2. **The Chairman, Local Authority Procurement Committee** on behalf of the **Valikamam East Pradeshiya Sabha, Puttur,** Northern Province, invites sealed bids from eligible and qualified bidders for the Procurement of Coloured waste Bins as in table below **and all bids must be accompanied by a bid security and the validity periods of bid security are given in table below.**

| No | Bid No | Name of Item | Estimated Cost (Rs.Mn) | Contract Period (Days) | Bid Validity Period | Bid Security Amount (Rs) | Bid Security Validity Period |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | LDSP/NP/JAF/VEPS/PT-2 (Coloured waste Bins) /2023/01/R | Procurement of Coloured Waste Bins. | 3.70 | 45days | 63 Days | 37,000.00 | 27.06.2024 |

3. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
4. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the specialty mentioned in Schedule and have valid business registration
5. Qualification requirements include: included in Section II (Bidding Data Sheet) and Section III (Evaluation and Qualification Criteria) in the Bidding Document. Additional details are provided in the Bidding Documents
6. Interested eligible bidders may obtain further information on public working days between **09:00** hrs and **15:00** hrs from **7th March 2024 to 27th march 2024** from **Secretary, Valikamam East Pradeshiya Sabha, Puttur** and inspect the bidding documents at the same place on the above time. TP: **-021 205 8867,021 205 8983**, Email secveps@yahoo.com
7. A complete set of Bidding Document is English language may be purchased by interested bidders on submission of a written application to the address **Secretary, Valikamam East Pradeshiya Sabha-Puttur** from **7th March 2024 until 27th March 2024 from 09.00 hrs to 15.00 hrs** on public working days and upon payment of non-refundable fee of Rs 2,500.00 (Including all Taxes). The method of payment should be by cash.
8. Complete Bids must be delivered to the address below in two copies as original and the duplicate. The original and duplicate should be enclosed separately and mark “Original” and “Duplicate” respectively in sealed envelopes. Both envelopes should be marked the “**Bid number**” on top left-hand corner of the envelop. Complete Bids should be delivered to **Chairman, Local Authority Procurement Committee, Valikamam East Pradeshiya Sabha, Puttur** on or before **28th March 2024 at 14.00 hrs.** Electronic bidding will not be permitted. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders or their representatives who choose to attend in person.
9. The Pre-Bid Meeting will be held at **Valikamam East Pradeshiya Sabha-Puttur** on **14th March 2024** at 14.00 hrs, Interested Bidders May Participate in this meeting their own expenses.

Chairman,
Local Authority Procurement Committee,
Valikamam East Pradeshiya Sabha,
Puttur.

07.03.2024



**மின்வலு மற்றும் மின்சக்தி அமைச்சு**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**
**விலைமனு அறிவித்தல்**

**BID FOR THE TRANSPORTATION OF BITUMEN/ AND OTHER FCL CONTAINERS OF CPC FOR THE YEAR -2024-2025**
**B/13/2024**

மேலேயுள்ளவற்றை வழங்கக்கூடிய புகழ் பெற்ற போக்குவரத்து ஒப்பந்தக்காரர்களிடமிருந்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் விலைமனுக்களை அழைக்கின்றார்.

(a) Owning a minimum fleet of 10 Nos. of 20 ft. FCL Container Lorries and are in a Position to supply 25 or more Container Lorries at a time for the transport of 20 ft. containers of weight not exceeding 24 Metric Tons containing drums of Bitumen and other items ordered by the CPC.

and

(b) Owning a minimum fleet of 2 Nos. of 40 ft. FCL Container Lorries and are in a Position to supply 5 or more Container Lorries at a time for the transport of 40 ft. containers of weight not exceeding 35 Metric Tons containing drums of Bitumen and other items ordered by the CPC.

ஒவ்வொரு தொகுதிக்கும் மீளளிக்கப்படாத வைப்புக் கட்டணமான 2000 ரூபாவை (அதாவது 1653.58 + 2.5% தேகவ + 18% பெசேவ) செலுத்திய பின்னர் 2024.03.28 ஆம் திகதி வரை மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரை கொழும்பு-09, கலாநிதி டனிஸ்டர் த சில்வா மாவத்தை, 609 ஆம் இலக்கத்தின் 1 ஆம் மாடியிலுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கு பொறுப்பாகவுள்ள முகாமையாளருக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் அவரது அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.

விலைமனுக்கள் 2024.04.01 ஆம் திகதி பி.ப. 2 மணிக்கு மேலேயுள்ள முகவரியிலுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்தில் விலைமனுக்களின் மூடும் நேரம் முடிந்ததும் மூடப்பட்டு உடனடியாகவே திறக்கப்படும். அவ்வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவர்.

பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கு பொறுப்பாகவுள்ள முகாமையாளரிடமிருந்து தெளிவுறுத்தல்களை (ஏதுமிருப்பின்) கீழே வழங்கப்பட்டுள்ள தொலைபேசி மற்றும் தொலைநகல் எண்களினூடாக பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்) மே/பா.**
**பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள் செயற்பாடு,**
**1 ஆம் மாடி,**
**கலாநிதி டனிஸ்டர் த சில்வா மாவத்தை, கொழும்பு-09.**
**தொலைபேசி : 011 5455335**
**தொலைநகல்: 011 5455424**




# கிழக்கின் குரல்



வரலாற்று சிறப்புமிக்க பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றாக விளங்கும் திருக்கோணேஸ்வரம் ஆலயத்தில் சிவராத்திரி நிகழ்வை முன்னிட்டு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் ஏற்பாட்டில் இந்தியாவிலிருந்து ஆதீனங்கள் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். இந்நிகழ்வில் தமிழ்நாடு திருநெல்வேலி பெருங்குளம் திருக்கைலாய பரம்பரை செங்கோல் ஆதீனம், 103வது குருமகா சன்னிதானம், ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச சத்தியஞான தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் விசேட அழைப்பாளராக கலந்துகொண்டு ஆன்மீக சொற்பொழிவை வழங்கினார். பெருந்திரளான பக்தர்கள் இந்நிகழ்வுகளில் கலந்துகொண்டுள்ளனர்.

## இந்திய இழுவைமடி படகுகளால் எமது கடல்வளம் அழிந்துவருகின்றது

### கிண்ணியா மீனவ சங்கங்களின் சமாஜத் தலைவர் ரீஜால் பாயிஸ்

தம்பலகாமம் குறூப் நிருபர்)



இந்திய மீனவர்கள் அத்துமீறி இலங்கை கடற்பரப்புக்குள் நுழைந்து தடைசெய்யப்பட்ட இழுவைமடி படகுகளைப் பயன்படுத்தி மீன்வளத்தை அழித்துவருவதாக கிண்ணியா மீனவ சங்கங்களின் சமாஜத் தலைவர் ரீஜால் பாயிஸ் தெரிவித்தார்.

கிண்ணியாவில் அண்மையில் நடைபெற்ற ஊடகசந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

இலங்கை மீனவர்கள் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர். எனவே இச்செயற்பாடுகளை உடனடியாக நிறுத்த வேண்டும். வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் மீனவர்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தியா இராமேஸ்வரத்திலிருந்து இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீனவர்கள் நுழைகின்றனர். எமது கடலிலுள்ள அனைத்து வளங்களையும் இழுவைமடி படகை பயன்படுத்தி அழித்துவருகின்றனர்.

குறுகிய காலத்துக்குள் இதனை அவர்கள் அபகரித்து செல்கின்றனர். இன்று தொழில் இல்லாமல் பலர் வெளிநாடுகளுக்கு செல்கின்றனர். அங்கும் தொழில் இல்லாமல் கஷ்டப்படுகின்றனர். இவர்கள் சரியான முறையில் நடவடிக்கை எடுக்காவிட்டால் அனைத்து வளங்களும் பாதிக்கப்படுமென அவர் தெரிவித்தார்.

## நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறிய 70 வர்த்தகர்களுக்கு அபராதம்

ஒலுவில் விசேட நிருபர்

அம்பாறை மாவட்டத்தில் கடந்த பெப்ரவரி மாதம் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த 70 வர்த்தகர்களுக்கு நீதிமன்றங்களினால் 02 இலட்சத்தி 67 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட பொறுப்பதிகாரி எஸ்.என்.எம். சாலிய பண்டார தெரிவித்தார்.

கல்முனை, அக்கரைப்பற்று, சம்மாந்துறை, பொத்துவில், அம்பாறை, தெஹியத்தக்கண்டி ஆகிய நீதிமன்றங்களின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசங்களில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட சுற்றிவளைப்புகளில் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்ட 98 வர்த்தகர்கள் கண்டுபிடிக்கப்பட்டு, இதில் 70 வர்த்தகர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தன. இவ் வர்த்தகர்களுக்கு எதிராக 02 இலட்சத்தி 67 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஏனைய வர்த்தகர்களுக்கு நீதிமன்றங்களில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். கட்டுப்பாட்டு விலையை மீறி கூடுதலான விலைக்கு பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் செய்த முறைப்பாட்டையடுத்து பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் அப்பகுதியில் சுற்றிவளைப்புகளை மேற்கொண்டதாக அவர் தெரிவித்தார். அத்தியாவசியப் பொருட்களுக்கு அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட விலையை விட கூடுதலான விலைக்கு பொருட்களை விற்பனை செய்தமை, நுகர்வோர் நலன் கருதி வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியலை காட்சிப்படுத்தாமை, நுகர்வுக்குப் பொருத்தமில்லாத பொருட்களை காட்சிப்படுத்தியமை, காலாவதியான பொருட்கள் மற்றும் தரமற்ற பொருட்களை விற்பனை செய்து நுகர்வோரை ஏமாற்றுதல், மின் உபகரணங்களுக்கான கட்டுறுதிக் காலத்தை வழங்காமை போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்ட வர்த்தகர்களுக்கெதிராகவும் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ததாக அவர் தெரிவித்தார்.

## மண்முனை தென் எருவில்பற்றில் மகளிர் தின நிகழ்வுகள்




( பெரிய போரதீவு, புதிய காத்தான் குடி தினகரன் நிருபர்கள்)

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகத்தில் 'அவளுடைய பலம் நாட்டிற்கு முன்னேற்றம்' எனும் தொனிப்பொருளில் மகளிர் தின நிகழ்வுகள் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

முதலாம் நிகழ்வாக கலைகள் மற்றும் அரங்க விளையாட்டுகளின் மூலமாக 'மகளிர் மனவெழுச்சி ஆற்றுப்படுத்துகை' எனும் நிகழ்வு பிரதேச செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் ஆரம்பிக்கப்பட்டதுடன், கலந்துகொண்டிருந்த மகளிர் சங்க உறுப்பினர்களின் கலைப்படைப்புகள் மற்றும் கலை நிகழ்வுகளுடன் இனிதே நிறைவடைந்தது. இந்நிகழ்வில் பிரதேச செயலக பிரிவிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 45 மகளிர் கலந்துகொண்டிருந்தனர்.

இந்நிகழ்வின் வளவாளர்களாக ம. நிரோஷினிதேவி, வி.சிந்து உஷா (கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்) மற்றும் ப. ராஜதிலகன் (கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்) ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பான முறையில் நடாத்தியிருந்தனர். இந்நிகழ்வை பிரதேச செயலக சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவு உத்தியோகத்தர்கள்

## மட்டக்களப்பில் தேர்தல் முறைகள், சட்ட கட்டமைப்பு செயலமர்வு

கல்லடி குறூப்நிருபர்

மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் யுவதிகளுக்கு தேர்தல் முறைகள் மற்றும் சட்டகட்டமைப்பு தொடர்பான பயிற்சி செயலமர்வொன்று நேற்று மட்டக்களப்பில் நடைபெற்றது.

கிராமிய அபிவிருத்தி திட்டமிடல் அமைப்பின் (RDPO) ஏற்பாட்டில் அதன் பணிப்பாளர் வி.ரமேஷானந்தன் தலைமையில் வை.எம்.சி.ஏ மண்டபத்தில் நேற்று (06) திகதி நடைபெற்றது.

கிராமிய அபிவிருத்தி திட்டமிடல் அமைப்பின் (RDPO) ஏற்பாட்டில் வன் முறைகளை கண்காணிப்பதற்கான நிலையத்தின் (Centre for monintoring Election violence)பங்குபற்றுதலுடன் இச்செயலமர்வு நடைபெற்றது.

இச்செயலமர்வின் வளவாளராக ஓய்வுப் பெற்ற தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் எம்.எம்.முகமட், வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலைய தேசிய இணைப்பாளர் ஏ.எம்.என். விக்டர் உள்ளிட்டோர்



கலந்துகொண்டு வளவாண்மை மேற்கொண்டுள்ளனர்.

இச்செயலமர்வில் கிராமிய அபிவிருத்தி திட்டமிடல் அமைப்பின் கொள்வனவு உத்தியோகத்தர் பீ.மேகலநாதன், கள உத்தியோகத்தர் எஸ்.உபதாரணி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.கிராமிய அபிவிருத்தி திட்டமிடல் அமைப்பின் (RDPO) ஊடாக சிவில் சமூக செயற்பாடுகளில் ஈடுபடும் இளைஞர் யுவதிகளை வலுப்படுத்தும் செயற்றிட்டத்தின் கீழ் இச்செயலமர்வு நடைபெற்றதுடன், கிராமிய அபிவிருத்தி திட்டமிடல் அமைப்பானது சுமார் 21 வருடகாலமாக மாவட்டத்தில் சேவையாற்றி வருவதுடன், பாலூட்டும் தாய்மார்களுக்கு போசாக்கான சத்துமா வழங்குதல், போசணை குறைந்த சிறார்களுக்கு உணவு விநியோகம், வறுமைக்கோட்டின் கீழ் வாழும் தெரிவுசெய்யப்பட்ட மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் போன்ற பல்வேறுபட்ட செயற்றிட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## நந்தீச்சரர் திருக்கோவிலில் மகா சிவராத்திரி விழா

(ஆரையம்பதி தினகரன் நிருபர்)

வந்தாறுமூலை நந்தீச்சரர் திருக்கோவிலில் நாளை 8 ஆம் திகதி மகா சிவராத்திரி தினம் மிக சிறப்பான முறையில் நடைபெறவுள்ளது. முதல் சாம பூஜை இரவு 7.00 மணிக்கும், இரண்டாம் சாம பூஜை இரவு 10 மணிக்கும், மூன்றாம் கால சாம பூஜை இரவு 12 மணிக்கும் நான்காம் சாம பூஜை அதிகாலை 4 மணிக்கும் நடைபெறவுள்ளது. அத்துடன் அன்றைய தினம் நீர்முகப் பிள்ளையார் ஆலயத்திலிருந்து பாதயாத்திரையும் மற்றும் சைவ தீட்சை வழங்கும் நிகழ்வும், உருத்ராட்சம் வழங்குதலும் அதனை தொடர்ந்து அன்னதானம், தாக சாந்தி, மற்றும் கலாசார நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

நந்தீச்சரர் திருக்கோவிலின் தலைவர் சண்முகம் நல்லரெத்தினத்தின் நிதி அனுசரணையுடன் பக்தி ரசப் பாமாலை இறுவட்டு வெளியீடும் நடைபெறவுள்ளது.

## அட்டாளைச்சேனை அல் முனீறா பெண்கள் உயர் பாடசாலை தேசிய மட்டத்தில் சாதனை



(திராய்க்கேணி நிருபர்)

அரச பொதுப்பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று அக்கரைப்பற்று கல்வி வலயத்தில் முன்னணியில் திகழும் அல் முனீறா பெண்கள் உயர் பாடசாலையானது சமூக விஞ்ஞான போட்டியில் தேசிய மட்டத்தில் சாதனை புரிந்துள்ளார்.

மாகாண மட்டத்தில் நடைபெற்ற சமூக விஞ்ஞான போட்டியில் அல் முனீறா பாடசாலையிலிருந்து மூன்று மாணவிகள் பங்குபற்றி அம் மூவரும் அகில இலங்கை ரீதியில் வெற்றிப்பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர். தரம் 11 பிரிவில் அனீஸ் அலி அப்றோஸ் சஹானி, தரம் 8 பிரிவில் ஹனீஸ் ஆய்ஷா அனீகா, தரம் 6 பிரிவில் றஸூல்தீன் ஆறா அதுன் சாறா ஆகிய மாணவிகளே இவ்வாறு சாதனை படைத்துள்ளனர்.

## பல்லின மரக்கன்றுகள் நடுகை

மூதூர் தினகரன் நிருபர்

மூதூர் கல்வி கோட்டத்துக்குட்பட்ட உமர் பாறூக் வித்தியாலய வளாகத்தை பசுமையாக்கும் முகமாக கனிதரும் மற்றும் நிழல்தரும் மரங்கள் என்பன நடப்பட்டு வருகின்றன. கனிதரும் மா, பலா, கொய்யா, மாதுளை உள்ளிட்ட மரக்கன்றுகளுடன் நிழல்தரும் பல்லின மரக்கன்றுகளும் ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்களின் பங்குபற்றுதலுடன் நடப்பட்டு வருகின்றன.

இவ்வாண்டின் 'பாடசாலை பசுமை' செயற்றிட்டத்தின் ஒன்றாக மரநடுகை திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பாடசாலை அதிபர் எஸ். எம்.எம். சாஹிப் தெரிவித்தார்.

## இலங்கைக்கான 3 தூதுவர்கள் காத்தான்குடிக்கு விஜயம்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

இலங்கைக்கான ஜப்பான், தென்னாபிரிக்கா, சுவிட்சர்லாந்து நாட்டு தூதுவர்கள் நேற்று (6) மட்டக்களப்பு காத்தான்குடிக்கு விஜயம் செய்தனர்.

ஜப்பான் தூதுவர் மிசுகோஷி ஹிடேகி, இலங்கைக்கான தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர் சாண்டில் ஷால்க், இலங்கைக்கான சுவிட்சர்லாந்து தூதுவர் கலாநிதி சிறி வோல்ட் ஆகிய மூன்று நாட்டு தூதுவர்களும் மட்டக்களப்பு காத்தான்குடி பிரதேசத்துக்கு விஜயம் செய்து பல்வேறு தரப்பினருடனும் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

தூதுவர்கள் காத்தான்குடி பள்ளிவாசல்கள், முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன பிரதிநிதிகளை சம்மேளன அலுவலக மாநாட்டு மண்டபத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.

இச்சந்திப்பில் தற்போதைய நிலவரம், சம்மேளனத்தின் செயற்பாடுகள், சமூக நல்லிணக்க செயற்பாடுகள் போன்றவற்றை கேட்டறிந்து கொண்டனர்.



காணிப்பிரச்சினை உட்பட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக காத்தான்குடி பள்ளிவாசல் சம்மேளன பிரதிநிதிகள் தூதுவர்களுக்கு எடுத்துக்கூறியதாக காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன செயலாளர் சபீல் நழீமி தெரிவித்தார்

இச்சந்திப்பில் காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன தலைவர் ரவூக் ஏ மஜீத், சம்மேளன செயலாளர் சபீல் நழீமி சட்டத்தரணி ஏ.உவைஸ், காத்தான்குடி ஜம் இய்யத்துல் உலமா சபை தலைவர் மௌலவி ஹாரூன் உட்பட சம்மேளன பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# கொழும்பு, பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரியில் இன்று புதிய நான்கு மாடி கட்டட திறப்பு விழா

## பிரதம அதிதியாக மேல் மாகாண ஆளுநர் பங்கேற்பு

மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தில் கல்வித்துறையில் வீறுநடைபோடும் பாடசாலைகளிலொன்றாக கொழும்பு 12, பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரி காணப்படுகிறது. நூற்றாண்டு கண்ட பழம் பெருமை மிக்க பாத்திமா மத்திய கொழும்பின் புகழ்பெற்ற 1AB பாடசாலையாகும். 1918 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி இன்று 2500 இற்கும் மேற்பட்ட மாணவர் தொகையோடு முஸ்லிம் பெண் கல்விக்கு உயிரூட்டும் பாடசாலைகளில் குறிப்பிடத்தக்க ஒன்றாக இயங்கி வருகின்றமை பெருமைக்குரியதாகும்.

வறுமைக் கோட்டிற்குள் வாழுகின்ற, சமூகத்தால் ஒதுக்கப்பட்ட பல முஸ்லிம் பெண்களின் வாழ்வினை மாற்றியமைத்த பெருமை இக்கல்லூரியையே சாரும். இக்கல்லூரியில் புகழ் மேலோங்க முழுக்காரணம் இறைவனின் உதவியே. அல்ஹம்துலில்லாஹ்.

கல்வித்துறையில் பாத்திமா முஸ்லிம் கல்லூரி வெளிப்படுத்தி வரும் ஆர்வமும் தேடலும் வெளிப்பாடும் இக்கல்லூரியை நாடி பல மாணவிகளும் விரைந்து வர காரணமாகியது. ஒரு பாடசாலையின் கல்வித் தரத்தை தீர்மானிப்பதில் முக்கிய பங்கு வகிப்பது உயர் தரமாகும். பாத்திமாவின் உயர்தரத்திற்கான வெற்றிக்கு பல்கலைக் கழக மாணவர் தெரிவு எண்ணிக்கைகளே சான்று. எனினும் இக்கல்லூரியின் உயர்தர மாணவிகள் கல்வி கற்கும இடங்களோ ஒளியும் வளியும் நுழைய முடியாத கூடாரங்கள் என்பதே கசப்பான உண்மையாகும்.

பாத்திமா கல்லூரியின் உயர்தரத்தில் சுமார் 450 இற்கும் அதிகமான மாணவிகள் கல்வி கற்கின்றனர். எனினும் 250 பேருக்கும் அதிகமானோருக்கு கல்வி கற்பதற்கான வகுப்பறை பற்றாக்குறை நிலவுகின்றது. ஆண்டுதோறும் உயர்தரத்திற்காக 200 இற்கும் அதிகமான விண்ணப்பங்கள் பெறப்பட்ட போதிலும் அவர்களுக்கான அனுமதியை வழங்கமுடியாத துரதிஷ்டமே எமது உயர்தர கல்விக்கான பெரும் சவாலாக காணப்படுகின்றது எனலாம்.

ஒவ்வொரு கல்வியாண்டிலும் சுமார் 20 – 30 மாணவிகளுக்குக் குறையாத வண்ணம் பல்கலைக்கழக நுழைவு காணப்படுகின்ற போதிலும் அவர்கள் கல்வி கற்கும் இடங்களாக தற்காலிக கூடாரங்களும் நடைபாதைகளுமே காணப்படுகின்றன.

நவீன கல்வி முறையில் மாணவர்களை கல்வி சென்றடைய வேண்டும் என்ற கல்விக் கொள்கைகளுக்கு மாற்றமாக இங்கு ஒரே வகுப்பறையில் ஒரே சமயத்தில் இருபாட ஆசிரியர்கள் இருவேறு பாடங்களை கற்பிக்கின்றார்கள். கற்றலுக்காக பாடசாலைச் சூழலை மட்டுமே ஆதாரமாகக் கொண்ட வறுமைக்குள் வாடும் இக்கல்லூரி மாணவிகளின் கல்வித் தேவையை இந்நிலையிலான கல்விமுறை எவ்வாறு ஈடுசெய்யும் என்பது கவலைக்குரியதே.

இத்தகைய பாரிய இடப்பற்றாக்குறை எமது கல்லூரி உயர்தர மாணவிகள் சந்திக்கின்ற அதேவேளை, இங்கு உயர்தரத்தில் விஞ்ஞானப் பிரிவு வரை காணப்படுகின்றது. எனினும் தரம் 6 – 13 வரையான சகல மாணவிகளுக்கும் ஒரேயொரு சிறிய ஆய்வுகூட வசதியே காணப்படுகின்றது.

மேலும், இந்த நூற்றாண்டிற்குப் பொருத்தமான, சவால்கள் நிறைந்த நவீன உலகை சந்திப்பதற்கான தொழில்நுட்ப அறிவை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பும் அரிதாகவே காணப்படுகின்றது.

இக்கல்லூரி இத்தகைய பெரும் சவால்களைத் தாண்டியே தனது இலக்கில் வெற்றி நடை கண்டு வருகின்றது. இந்நிலை மாற வேண்டும் என்ற கனவின் விதையாக எமது முன்னாள் அதிபர் திருமதி ஏ.எஸ். ஸிஹானா அம்மையாரினால் விதைக்கப்பட்ட விதையே விருட்சமாக இன்று புது மெருகோடு காட்சியளிக்கின்றது.

இப்பாடசாலையின் பெருந்தேவையாக விளங்கிய இடப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்கில் அயராது பாடுபட்ட எமது முன்னாள் அதிபர் திருமதி ஸிஹானா அம்மையாரின் வேண்டுகோளிற்கிணங்க முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினர் நௌஸர் பௌஸியின் உதவியோடும் ஏனைய முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான மர்ஹூம் முகமட் பாயிஸ், முகமட் பைரூஸ், அர்ஷாட் நிஸாம்தீன், முகமட் அக்ரம் ஆகியோரின் ஒத்துழைப்போடும் மேல்மாகாண முன்னாள் முதலமைச்சர் இசுரு தேவப்பிரியவிடம் முன்வைக்கப்பட்ட வேண்டுதலின் நிமித்தமாக 60 மில்லியன் ரூபா பெறுமதியான நான்கு மாடிக் கட்டடத்திற்கான அனுமதி பெறப்பட்டது. இதற்கான அடிக்கல் நாட்டு விழா 27.10.2017 அன்று இடம்பெற்றது. இதற்கமைய, 12 வகுப்பறைகளைக் கொண்ட உயர்தர மாணவிகளுக்கான வகுப்பறைகள், நவீன வசதிகள் கொண்ட ஆய்வுகூடம், நவீன கணினி அறை எனும் வகையில் புதிய மாடிக்கட்டடம் நிர்மாணிக்கப்பட்டது.

இதன்படி ஆரம்பிக்கப்பட்ட இக்கட்டடத்திற்கான 35 மில்லியன் ரூபா பெறுமதியான முதலாம் கட்ட, இரண்டாம் கட்ட செயற்பாடுகள் நிறைவுற்ற நிலையில் கொரோனா தொற்றின் காரணமாகவும் பொருளாதார இடர்பாட்டினாலும் தொடர்ந்து மாகாண சபைகள் கலைக்கப்பட்டதனாலும் எமது கட்டட பணிகள் யாவும் மேற்கொண்டு தொடர முடியாதவாறு ஸ்தம்பிதம் அடைந்தன.

மாணவிகளின் கல்விக்கு இடம் ஒரு தடையாகி விடக்கூடாது என்ற நிலையில் பல நலன் விரும்பிகளையும் இடையறாது சந்தித்து உரையாடிய எமது முன்னாள் அதிபரின் அயராத முயற்சியினால் இடைநிறுத்தப்பட்டு பூரணப்படுத்தப்படாத நிலையிலிருந்த எமது புதிய நான்கு மாடிக் கட்டடத்திற்கான வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன.

Light For Life என்ற நிறுவனத்தின் ஸ்தாபகர் அல்ஹாஜ் எஸ்.எஸ்.யூ. ஜெய்னுலாப்தீன் மற்றும் அல்ஹாஜ் எம்.எஸ்.எம். ஷாஸில், அல்ஹாஜ் எஸ்.எஸ். யெஹ்யா ஸாதிக், அல்ஹாஜ் அப்துல் கபூர் நஸ்ரூன், அல்ஹாஜ் எம்.எஸ்.எம். ஸஹ்ரி ஆகியோரின் மனமுவந்த நன்கொடையின் மூலமாக இக்கட்டடத்திற்கான ரூபா. 15 மில்லியன் பெறுமதியான வேலைத்திட்டத்திற்கமைய முதலாம் மாடிக்குரிய வகுப்பறைகளை மட்டுமே பூரணப்படுத்தித் தருவதாகக் கூறி வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் இக்கல்லூரி மாணவிகள் கல்வியில் காட்டி வரும் ஈடுபாட்டையும் சாதனைகளையும் கண்ணுற்ற இந்நிறுவனம், இரண்டாம், மூன்றாம் மாடிகள் அனைத்தையும் பூரணப்படுத்தித் தர முன்வந்தமை பெரு மகிழ்ச்சிக்குரியதும் பாராட்டுக்குரியதுமாகும்.

4. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall should possess required valid CIDA Registration in Buildings Construction for the Grade mentioned in the table above and possess valid Business or Company Registration.

5. Qualification requirements to qualify for contract award is given in Section 4 of the Qualification Information and Section 5 of the Schedule in the Bidding Document.

6. Interested bidders may obtain further information from Chairman, Mannar Pradeshiya Sabha [Telephone No: 0232050001 / Fax No: 0232050002 / Email ID: **mnps2006@gmail.com**] and inspect the Bidding Documents at the address Mannar Pradeshiya Sabha, Kattaspathiri, Mannar from 08:30 hrs to 16:15 hrs.

7. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Chairman, Mannar Pradeshiya Sabha from 7th of March 2024 until 28th of March 2024 from 09:00 hrs to 15:00 hrs on normal working days upon payment of a non-refundable fee of Rupees Four Thousand (Rs. 4,000.00). The method of payment will be by Cash.

8. Bids shall be delivered with duplicate to the address at Chairman, Mannar Pradeshiya Sabha, Kattaspathiri, Mannar on or before 01st April 2024 at 10:30 hrs. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.

9. Bids shall be valid upto 30th of May 2024.

10. All bids shall be accompanied by a Bid-Security, as mentioned in the table above. Bid Security shall be valid up to the date mentioned in the table above, shall be same as Schedule Clause 16.

11. The Pre-Bid Meeting will be held on 21st of March 2024 at 10:30 hrs at the Main Office of Mannar Pradeshiya Sabha, Kattaspathiri, Mannar.

The address(es) referred to above is(are):

**Chairman,**
**Local Authority Procurement Committee (LAPC)**
**Mannar Pradeshiya Sabha Kattaspathiri, Mannar.**
**Tel No: 0232050001**
**Fax No: 0232050002**
**Email ID: mnps2006@gmail.com**

# இலங்கை மின்சார சபை

## மின் கட்டணத் திருத்தம் - மார்ச் 2024

கீழ்க்காணும் இறுப்பனவுகளுக்குரிய மின் கட்டணமானது, அனைத்து நுகர்வோர் வகைகளுக்கும் 2024 மார்ச் 5 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவினால் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் 30 நாட்கள் கொண்ட நுகர்வுக் காலப்பகுதிக்கான மின் கட்டணமுறைமை பின்வருமாறு திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

**மின் கட்டணத் திருத்தம் - மார்ச் 2024**

| **அமுலாகும் திகதி** (30 நாட்கள் கொண்ட நுகர்வுக் காலப்பகுதிக்குரியது) | **2024-03-05** | |
|---|---|---|
| **வீட்டுபயோக அறவீடு** | **அலகுக்குரிய கட்டணம் (ரூ./ கி. வொ. மணி)** | **மாதாந்த நிலையான கட்டணம் (ரூ./ மாதம்)** |
| **நுகர்வோர் வகைகள்** | | |
| ***மாதாந்த நுகர்வு அலகு கி.வொ.மணி. 0 - 60*** | | |
| பகுதி 1 : கி. வொ. மணி 0 - 30 | 8.00 | 150.00 |
| பகுதி 2 : கி. வொ. மணி. 31 - 60 | 20.00 | 300.00 |
| ***மாதாந்த நுகர்வு அலகு கி.வொ.மணி. 60 இற்கு மேல்*** | | |
| பகுதி 1 : கி. வொ. மணி 0 - 60 | 25.00 | N/A |
| பகுதி 2 : கி. வொ. மணி 61 - 90 | 30.00 | 400.00 |
| பகுதி 3 : கி. வொ. மணி 91 - 120 | 50.00 | 1,000.00 |
| பகுதி 4 : கி. வொ. மணி 121 - 180 | 50.00 | 1,500.00 |
| பகுதி 5 : கி. வொ. மணி 180 இற்கு மேல் | 75.00 | 2,000.00 |
| **பாவனை நேரத்தை அடிப்படையாகக் கொண்ட (ToU) இறுப்பனவை தெரிவுசெய்து கொண்ட வீட்டுபயோக நுகர்வோர்** | | |
| பகல் (05:30 – 18:30) | 70.00 | 2,000.00 |
| உச்ச பயன்பாட்டு நேரம் (18:30 – 22:30) | 90.00 | |
| உச்சமற்ற பயன்பாட்டு நேரம் (22:30 – 05:30) | 30.00 | |
| **சமய மற்றும் தொண்டூழிய அமைப்புகள் வகைகள்** | | |
| பகுதி 1 : கி. வொ. மணி 0 - 30 | 8.00 | 150.00 |
| பகுதி 2 : கி. வொ. மணி 31 - 90 | 9.00 | 250.00 |
| பகுதி 3 : கி. வொ. மணி 91 - 120 | 18.00 | 600.00 |
| பகுதி 4 : கி. வொ. மணி 121 - 180 | 32.00 | 1,500.00 |
| பகுதி 5 : கி. வொ. மணி 180 இற்கு மேல் | 43.00 | 2,000.00 |

| **இதர நுகர்வோர் வகைகள்** | | அலகுக்குரிய கட்டணம் (ரூ./ கி.வொ.மணி) | | | மாதாந்த நிலையான கட்டணம் (ரூ./ மாதம்) | உச்சக் கேள்விக் கட்டணம் (ரூ./கி.வோ. அம்.) |
|---|---|---|---|---|---|---|
| | | பகல் (05:30 – 18:30) | **உச்ச பயன்பாட்டு நேரம் (18:30 – 22:30)** | **உச்சமற்ற பயன்பாட்டு நேரம் (22:30 – 05:30)** | | |
| **கைத்தொழில் கட்டண வகை 1** | கைத்தொழில் நோக்கம் 1-1கி. வொ. மணி. 0 – 300 வரை | 13.50 | | | 300.00 | - |
| | கைத்தொழில் நோக்கம் 1-2 கி. வொ. மணி. 300 இற்கு மேல் | 21.50 | | | 1,000.00 | - |
| **கைத்தொழில் கட்டண வகை 2** | | 30.50 | 37.00 | 25.50 | 5,000.00 | 1,500.00 |
| **கைத்தொழில் கட்டண வகை 3** | | 30.00 | 36.00 | 24.50 | 5,000.00 | 1,400.00 |
| **ஹோட்டல் கட்டண வகை 1** | ஹோட்டல் 1-1 கி. வொ. மணி. 0 – 300 வரை | 13.50 | | | 300.00 | - |
| | ஹோட்டல் 1-2 கி. வொ. மணி. 300 இற்கு மேல் | 21.50 | | | 1,000.00 | - |
| **ஹோட்டல் கட்டண வகை 2** | | 30.50 | 37.00 | 25.50 | 5,000.00 | 1,500.00 |
| **ஹோட்டல் கட்டண வகை 3** | | 30.00 | 36.00 | 24.50 | 5,000.00 | 1,400.00 |
| **பொதுப்பயன்பாட்டு நோக்கம் 1** | பொதுப்பயன்பாட்டு நோக்கம் 1-1 கி. வொ. மணி. 0 – 180 வரை | 33.00 | | | 600.00 | - |
| | பொதுப்பயன்பாட்டு நோக்கம் 1-2 கி. வொ. மணி. 180 இற்கு மேல் | 43.00 | | | 1,500.00 | - |
| **பொதுப்பயன்பாட்டு நோக்கம் 2** | | 45.00 | 55.00 | 37.00 | 5,000.00 | 1,500.00 |
| **பொதுப்பயன்பாட்டு நோக்கம் 3** | | 44.00 | 54.00 | 36.00 | 5,000.00 | 1,400.00 |
| **அரச நிறுவனம் கட்டண வகை 1** | அரச நிறுவனம் 1-1 கி வொ. மணி. 0 – 180 வரை | 33.00 | | | 600.00 | - |
| | அரச நிறுவனம் 1-2 கி. வொ. மணி. 180 இற்கு மேல் | 43.00 | | | 1,500.00 | - |
| **அரச நிறுவனம் கட்டண வகை 2** | | 45.00 | 55.00 | 37.00 | 5,000.00 | 1,500.00 |
| **அரச நிறுவனம் கட்டண வகை 3** | | 44.00 | 54.00 | 36.00 | 5,000.00 | 1,400.00 |
| **வீதி விளக்கு** | | 45.00 | | | - | - |
| **மின்சார வாகனங்களுக்கான இலங்கை மின்சார சபையின் மின்கல மின்னேற்றும் நிலையங்களின் இறுப்பனவு** | | | | | | |
| **நேரோட்ட விரைவு மின்னேற்றம்** | | 109.00 | 139.00 | 66.00 | - | - |
| **நிலை 2 ஆடலோட்ட மின்னேற்றம்** | | 87.00 | 112.00 | 50.00 | - | - |
| **பாவனை நேரத்தை அடிப்படையாகக் கொண்ட (ToU) இறுப்பனவை தெரிவுசெய்து கொண்ட விவசாய நுகர்வோர்** | | 33.00 | 37.00 | 28.00 | 1,000.00 | - |

**குறிப்பு:**

— கட்டண வகை 1: ஒப்பந்தக் கேள்வி கி. வோ. அம். (kVA) 42 இற்குக் குறைவான அல்லது சமனான, வோல்ட் அளவு 400/230 கொண்ட வழங்கல்.

— கட்டண வகை 2: ஒப்பந்தக் கேள்வி கி. வோ. அம். (kVA) 42 இற்கு அதிகமான, வோல்ட் அளவு 400/230 கொண்ட வழங்கல்.

— கட்டண வகை 3: வோல்ட் அளவு கி. வோ. (kV) 11 இற்குக் கூடிய அல்லது சமனான வழங்கல்.

- 2022 ஐப்பசி 1ம் திகதி முதல் அமுலாகும் வகையில் 2022 ஆம் ஆண்டின் 25ம் இலக்க சமூகப் பாதுகாப்பு உதவித்தொகை அறவீட்டு சட்டத்தின்படி மாதாந்த சமூகப் பாதுகாப்பு உதவித்தொகை அறவீடு இலங்கை மின்சார சபையின் மாதாந்த மின்சார கட்டணத்தின் நூற்றுக்கு 2.5 வீதமாகும்.
- 2009 வருட 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சபைச் சட்டத்தின் 30 (2) (ш) பிரிவிற்கு அமைவாக இலங்கை மின்சார சபையினால் மேற்குறித்த திருத்தங்கள் வெளியிடப்படுகின்றன.

**பதில் பொது முகாமையாளர்**
**இலங்கை மின்சார சபை**

# ஜய கன்டேனர் டர்மினல்ஸ் லிமிடெட்

## துறைமுகங்கள், கப்பற்சேவைகள் மற்றும் விமான சேவைகள் அமைச்சு

### விலைமனுக்களுக்கான அழைத்தல்

இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையினால் முழுவதுமான உரித்துள்ள ஜய கன்டேனர் டர்மினல்ஸ் லிமிடெட் ஆனது பின்வரும் அம்சத்திற்காக இலங்கையிலுள்ள தகுதியும் புகழ்வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றது.

| வகுதிகளின் பெயர்கள் | விலைமனு உத்தரவாத பெறுமதி | மீளளிக்கப்படாத வைப்புத் தொகை |
|---|---|---|
| பதவிநிலை அலுவலர்களின் சீருடைகளை வழங்கல், தைத்தல் | 15000 ரூபா | 2000 ரூபா |
| பாதுகாப்பு சப்பாத்துக்களை வழங்கல் மற்றும் ஒப்படைத்தல் | 7500 ரூபா | |

2024.03.07 ஆம் திகதியிலிருந்து 2024.03.27 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் அலுவலக நேரங்களில் கொழும்பு-15, வோல்ஸ் ஒழுங்கை, 69 ஆம் இலக்கத்திலுள்ள ஜய கன்டேனர் டர்மினல்ஸ் லிமிடெட்டின் நிதிப் பிரிவினால் விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும். 2024.03.28 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் விரைவாகவே திறக்கப்படும். 2024.03.18 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு இந்த அலுவலகத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.

மேலதிக தகவலுக்காக www.jctltd.lk என்ற ஜய கன்டேனர் டர்மினல்ஸ் லிமிடெட்டின் இணையதளத்தை பார்வையிடவும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**ஜய கன்டேனர் டர்மினல்ஸ் லிமிடெட்,**
**இல.: 69, வோல்ஸ் ஒழுங்கை,**
**கொழும்பு-15.**

தொடர்பெண்கள்: 2540045/6-0701327648

# நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

## இலங்கை சுங்கம்

### விலைமனுக்களுக்கான அழைத்தல்

**Procurement of Endpoint Detection and Response (EDR) and Privilege Access Management (PAM) Solution for Sri Lanka Customs**

**IFB No.: Cus/Log/S/09/EDR Solution/2024**

1. விலைமனு ஆவணத்தில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளவாறு Endpoint Detection and Response (EDR) and Privilege Access Management (PAM) Solution என்பதனை இலங்கை சுங்கத்திற்கு பெறுவதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

   ஒப்பந்தக் காலப்பகுதி: ஒப்படைத்தல் மற்றும் நிறுவுதலுக்கான காலப்பகுதியானது 3 வருட சந்தாப்பண வழங்கல், ஆதரவு மற்றும் பராமரிப்பு ஆகியவற்றுடன் ஒப்பந்தத்தில் கையொப்பமிடும் திகதியிலிருந்து 2 வாரங்களில் ஒப்படைத்தல் மற்றும் நிறுவுதல்.

2. விலைமனுதாரர் பின்வரும் ஆகக் குறைந்த தகைமை தகவுத்திறனை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
   - கடந்த 5 நிதியிடல் வருடங்களில் ஆகக் குறைந்தது மூன்று (03) EDR செயற்றிட்டங்களை சித்திகரமாக நிறைவேற்றிய அனுபவத்தை விலைமனுதாரர் கொண்டிருத்தல். இந்த மூன்று (3) செயற்றிட்டங்களில் ஆகக் குறைந்தது ஒரு (1) செயற்றிட்டத்திற்காவது ஆகக் குறைந்தது 1000 இறுதிப்புள்ளிகளை பெற்றிருத்தல் வேண்டும். (2018-2019, 2019-2020, 2020-2021, 2021-2022, 2022-2023)
   - விலைமனுதாரர் கடந்த 5 நிதிசார் வருடங்களில் ஆகக் குறைந்தது மூன்று (3) PAM செயற்றிட்டங்களை சித்திகரமாக நிறைவேற்றிய அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். (2018-2019, 2019-2020, 2020-2021, 2021-2022, 2022-2023)
   - கடந்த 3 நிதிசார் வருடங்களில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் அல்லது பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தங்களுக்காக பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்த சான்றழிக்கப்பட்ட பணக்கொடுப்பனவுகளாக கணக்கிடப்பட்ட ஆகக் குறைந்த வருடாந்த சராசரி நிதிப்புரள்வு 100 மில்லியன் இலங்கை ரூபாவாகவிருத்தல். (2020-2021, 2021-2022, 2022-2023)
3. தேசிய பெறுகை வழிகாட்டிகளில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ள விலைமனுக்கோரல் மூலம் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடத்தப்படுமென்பதுடன் வழிகாட்டிகளில் நிருணயிக்கப்பட்டவாறு அனைத்து தகுதியுள்ள விலைமனுதாரர்களும் இதில் பங்குபற்றலாம்.
4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை 2024.03.07 ஆம் திகதியிலிருந்து ஆரம்பிக்கும் வகையில் சுங்கப் பணிப்பாளர் Ms ஏச்.டி. அனீஷா ருக்ஷினி இடமிருந்து +94112221680 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக, **dc.logistics@customs.gov.lk** என்ற மின்னஞ்சலூடாக வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் பெற்றுக் கொள்ளலாம்.
5. மீளளிக்கப்படாத கட்டணமாக 5000 இலங்கை ரூபாவை செலுத்திய பின்னர், வியாபார தலைப்புக் கடிதமொன்றில் எழுத்துமூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறையானது ரொக்கப்பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள் 2024.03.22 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு முன்னராக கொழும்பு-11, பிரதான வீதி, 40 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை சுங்கம், 6 ஆம் மாடியின் லொஜிஸ்டிக்ஸ் பணியகத்தில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், 2024.03.22 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு சமுகமளித்திருக்கும் விலைமனுதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் வங்கி உத்தரவாதமொன்றின் பாங்கில் ஆறு இலட்சம் இலங்கை ரூபாவிற்கு குறையாத தொகையில் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் (600,000 இ.ரூபா)

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை சுங்கத் திணைக்களம்,**
**இல.: 40, பிரதான வீதி, கொழும்பு-11.**

The Housewives' companion
Classifieds on
Daily News

# வரையறுக்கப்பட்ட ருவன்வெல்ல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் – ருவன்வெல்ல

## மீட்கப்படாத அடகுப் பொருட்களை பகிரங்க ஏலத்தில் விற்றல்

மக்கள் வங்கியின் அடகுப் பிரதிநிதிகளான வரையறுக்கப்பட்ட ருவன்வெல்ல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ருவன்வெல்ல, தெஹிஓவிட்ட, நாபாவல, அமிதிரிகல, அட்டுலுகம, தல்தூவ, கலபிட்டமட, வஹரக்க, பட்டுவிட்ட மற்றும் கன்னத்தொட்ட ஆகிய கிராமிய வங்கிக் கிளைகளில் 2023.01.31 வரை அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத தங்க நகைகள் **2024 மார்ச் 23 மு.ப. 9.00 முதல் வ/ப - ருவன்வெல்ல பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமையக கூட்ட மண்டபத்தில்** பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என தெரிவித்துக் கொள்கிறேன்.

**கூட்டுறவாளர்,**
**பொது முகாமையாளர்,**
**வ/ப - ருவன்வெல்ல ப.நோ.கூ. சங்கம்**
**ருவன்வெல்ல - 2024.03.06**
**தொ.பேசி - 036 - 2266392 / 036 - 2267345**
**பெக்ஸ் - 036 - 2266428**

# இலங்கை துறைமுகங்கள அதிகாரசபை

## ஏலவிற்பனை அறிவித்தல்

### இலகுவில் அழிவுறக்கூடிய கப்பற் சரக்கின் விற்பனை

### விற்பனைத் திகதி: 13.03.2024

**My No.: LD/S/SAGT/2023/11/PC-09 & LD/S/CICT/2023/08/PC-11**

2024.03.13 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு பண்டாரநாயக்க வாசல் (BQ) நலவுதவி கட்டிடத்தில் விற்பனை செய்யப்படவுள்ள தடையகற்றப்படாத இலகுவில் அழிவுறக்கூடிய கப்பற் சரக்குகளான உறைந்த கடல் மீன் மற்றும் **Hydrogenerated Vegetable Fat** ஆகியவற்றை அடக்கியுள்ளதும் SAGT&JCT திறந்த வெளிகளில் வைக்கப்பட்டுள்ளதுமான கொள்கலன்கள் ஆகியவை ஏலவிற்பனை மூலம் விற்கப்படும்.

2024.03.11 ஆம் திகதியன்று மு.ப. 08.30 மணியிலிருந்து மு.ப. 11 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமான 1,000 ரூபாவையும் (அத்துடன் பெசேவ) மீளளிக்கப்படும் கட்டணமாக 200,000 ரூபாவையும் செலுத்திய பின்னர், கொழும்பு-01, லோட்டஸ் வீதி, 15 ஆம் இலக்கத்திலுள்ள கெனல் யாட், இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் லொஜிஸ்டிக்ஸ் பிரிவு, விற்பனை பிரிவின் அலுவலகத்திலிருந்து (One-Stop ஆவணமாக்கல் நிலையம்) ஏலவிற்பனை ஆவணங்கள் மற்றும் கேட் உட்செல்லல் அனுமதிப்பத்திரங்கள் ஆகியவற்றை பெற்றுக் கொள்ளலாம்.

விற்பனைக்காக பட்டியலிடப்பட்டுள்ள பொருட்கள் 2024.03.12 ஆம் திகதியன்று மதியம் 12 மணியிலிருந்து பி.ப. 1 மணி வரையும் உரித்தான திறந்த வெளியில் பரீட்சிக்கப்படலாம்.

மேலதிக விபரங்கட்கு **www.slpa.lk** என்பதனை பார்வையிடவும்.

**பிரதான முகாமையாளர் (லொஜிஸ்டிக்ஸ்),**
**07.03.2024**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**லொஜிஸ்டிக்ஸ் பிரிவு,**
**இல.: 15, லோட்டஸ் வீதி,**
**கொழும்பு-01.**




# கொழும்பில் உள்ள மேல் மாகாணத்தின் வர்த்தக மேல் நீதிமன்றத்தில் (அதன் குடியியல் அதிகாரத்தை நியாயாதிக்கத்தை கொண்ட)

**வழக்கு இலக்கம்:** CHC/14/2024/CO

**இயல்பு:** வைண்டிங் அப் [ஒடுக்கப்படுதல்] (நிறுவனம்)

மாத்தளை, வரகாமுர, வரகந்த தோட்டம், 07 லில் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்ட MAAM BISCUITS LANKA (PRIVATE) LIMITED (PV 95313) இன் 2007 ஆம் ஆண்டின் இலக்கம் 07 (திருத்தப்பட்ட) சட்டத்தின் பிரிவு 270 இன் கீழ் மற்றும் அதன் அடிப்படையில் நீதிமன்றத்தால் முடிவடைவதற்கான விண்ணப்பம் விடயத்தில்.

Manchester Foods (Private) Limited [மன்செஸ்டர் ∴புட்ஸ் (பிரைவேட்) லிமிடெட்]

இல. 179/1, வத்தேகம வீதி, உகுவெல.

**மனுதாரர்**

கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றத்தினால் மேற்கூறிய பெயரிடப்பட்ட நிறுவனத்தை முடக்குவதற்கான மனு 2024 பெப்ரவரி (February) 15 ஆம் திகதி இல. 179/1, வத்தேகம வீதி, உகுவெல மன்செஸ்டர் ∴புட்ஸ் (பிரைவேட்) லிமிடெட்டால் மேற்படி நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது என்பதை இதன்மூலம் அறிவிக்கின்றோம். வத்தேகம வீதி, உக்குவெல, மேலும் அந்த மனு 2024 ஆண்டு மே (May) 10 ஆம் திகதிக்கு முன்னர் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும் மற்றும் அந்த நிறுவனத்தின் எந்தவொரு கடனாளி அல்லது பங்களிப்பாளரும் (contributory), மேற்படி மனு மீதான கட்டளையை (order) ஆதரிப்பதற்கோ அல்லது எதிர்க்க விரும்புவோர், விசாரணையின் போது தனிப்பட்ட ரீதியாக அல்லது அந்த புறநிலைக்காக அவரது வழக்கறிஞர் அல்லது சட்டத்தரணி மூலம் ஆஜராகலாம் மேலும் மனுவின் பிரதி, அதற்கான நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை செலுத்தினால் அந்த நிறுவனத்தின் எந்தக் கடனாளி அல்லது பங்களிப்பாளருக்கும் கீழே கையொப்பமிடுபவரால் அளிக்கப்படும்.

**கையொப்பமிடப்பட்டது:**

**துஷாரா சமன்பாலி அமரசிறி,**
**இல. 58/2B, 3வது லேன்,**
**சோம தலகல மாவத்தை,**
**கங்கொடவில, நுகேகொட.**

குறிப்பு : மேற்படி மனுவின் விசாரணைக்கு ஆஜராக விரும்புகின்ற எவரேனும் மேற்படி துஷாரா சமன்பாலி அமரசிறிக்கு தபால் மூலம் அனுப்பிவைக்க வேண்டும். அறிவிப்பில் நபரின் பெயர் மற்றும் முகவரியைக் குறிப்பிட வேண்டும் அல்லது ஒரு நிறுவனம் என்றால், நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரியைக் குறிப்பிட வேண்டும். மேலும் அந்த நபர் அல்லது நிறுவனம், அல்லது அவரது அல்லது அவர்களின், சட்டத்தரணி (ஏவரே னும் இருந்தால்) கையொப்பமிடப்பட்டு வழங்கப்பட வேண்டும் அல்லது தபால் மூலம் அனுப்ப விரும்பினால், 2024 ஆண்டு மே மாதம் (May) 09ம் திகதி மாலை 6 மணிக்கு மேல் மேலே குறிப்பிடப்பட்டுள்ளதை அடைய போதுமான நேரத்தில் அஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும்.

**துஷாரா சமன்பாலி அமரசிறி,**
**இல. 58/2B, 3வது லேன்,**
**சோம தலகல மாவத்தை,**
**கங்கொடவில, நுகேகொட.**
**06/03/2024**

# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்

### 106 கார்கள் விற்பனைக்கு

NC JK-4276 KIA RIO CAR அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிளஸ்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 016247

WP JO-2321 TATA INDICA CAR அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிளஸ்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 016266

### 107 டொயோட்டா கார்கள் விற்பனைக்கு

WP-CAG-1229 - TOYOTA- DAA-NHP10 AQUA - MOTOR CAR - 2014 - WHITE கூடிய விலைக் கோரிக்கைக்கு. CBC பினான்ஸ் லிமிட்டட் 187, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி. தொ.பே. 081 2 081033. 016316

### 108 நிஸான் கார் விற்பனைக்கு

17-8737 NISSAN MARCH CAR அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிளஸ்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 016273

### 117 வேன்கள் விற்பனைக்கு

EP JW-7996 HYUNDAI GRACE H100 VAN அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிளஸ்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 016271

### 119 பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு

CP RS-0752 JCB 3CX BACKHOE LOADER அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிளஸ்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 016284

EP LI-5068 TATA 1615 DUMP TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிளஸ்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 016225

EP LN-0482 TATA 1615 DUMP TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிளஸ்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 016275

EP PT-2855 MAHINDRA MAXXIMO TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிளஸ்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 016285

EP PW-2887 MAHINDRA MAXXIMO PLUS TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிளஸ்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 016232

EP PW-7640 MAHINDRA MAXXIMO TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிளஸ்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 016308

NW LK-7378 LANKA ASHOK LEYLAND 1613 அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிளஸ்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 016243

SG JD-8194 JCB 3CX BACKHOE LOADER அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிளஸ்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 016296

SG LJ-7604 TATA 709 TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிளஸ்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 016287

SP PV-4253 MAHINDRA MAXXIMO TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிளஸ்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 016262

WP DAC-7136 MAHINDRA MAXXIMO PLUS VX அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிளஸ்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 016235

WP LH-8926 TATA 709 F/ B TRUCK அதியுய ர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிளஸ்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 016310

WP PT-3478 MAHINDRA MAXXIMO TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிளஸ்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 016220

68-6108 NISSAN ATLAS TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிளஸ்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 016302

68-7053 MAZDA TITAN TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிளஸ்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 016238

### 121 வாகனங்கள் தேவை தேவை

WP YI-0620 BAJAJ THREE WHEELER அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிளஸ்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 016217

### 122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

QV-4730 BAJAJ, 2009, THREE WHEELER அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலை பேசி. 071121081 0. 016182

SP YP-2925 BAJAJ THREE WHEELER அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிளஸ்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 016252

WP YP-6955 BAJAJ THREE WHEELER அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிளஸ்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 016291

WP YQ-1512 BAJAJ THREE WHEELER அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிளஸ்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 016258

Daily News Classifieds, the Housewives' companion

## பெயர் மாற்றம்

கல்முனை பிரதேசத்தில் வசித்து வரும் வேலாயுதம் திருச்செல்வி (818290039v) ஆகிய நான், 2023.12.09 ஆம் திகதி முதல் புனித இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவி எனது பெயரை **வேலாயுதம் பாத்திமா சபா** என மாற்றியுள்ளேன் என்பதை இத்தால் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

**வேலாயுதம் பாத்திமா சபா**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

## பொருட்கொள்வனவு அறிவித்தல்
### அரசாங்க அச்சுத் திணைக்களம்

N-36

அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் கொள்முதல் சபையின் தலைவர் பின்வரும் பொருட்களை வழங்குவதற்காக இலங்கையில் உள்ள உள்ளூர் உற்பத்தியாளர்கள் வழங்குநர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகிறது. இருப்பு வைத்திருப்பவர்கள் அல்லது ஆர்டர் செய்து 45 நாட்களுக்குள் பொருட்களை வழங்கக் கூடியவர்கள் விலைமனுக்களை சமர்ப்பிக்க முடியும்.

**பொருட்கள் :** Bond Paper 17" - 60gsm ± 3.5% (Colour)
Bond Paper Green 17"-60 gsm ± 3.5% - 25 M/T±10%
Bond Paper Pink 17"-60 gsm ± 3.5% - 25 M/T±10%
Bond Paper Yellow 17"-60 gsm ±3.5% -25 M/T±10%

**குறிப்பு எண் :** SI/LP/BP/2024/13

**விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதி தினம் :** 2024/03/28 பி.ப. 2.00 **மணி.**

**மீளளிக்கப்படாத கட்டணம் :** ரூபா 10,000.00

**ஏலபாதுகாப்பு :** ரூபா 600,000.00

2024/03/28 ஆந் திகதி பி.ப.2.00 மணிக்கு விலைமனுக் கோரல் முடிவுறு அவ்வேளையிலேயே விலைமனுக்கள் திறந்து வைக்கப்படும்.

அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் வெளிநாட்டு வழங்கல் பிரிவில் கடமை நாட்களில் 2024/03/07 இலிருந்து 2024/03/27 வரையிலான காலப்பகுதியில் கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை விலை மனு தொடர்பான ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு ஏலத்திற்கும் மேற்குறிப்பிட்ட மீளளிக்கப்படாத கட்டணம் செலுத்தப்படுவதோடு மேலும் அதற்கான எழுத்து மூலமான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மேலதிக விபரங்களிற்கு வேலை நாட்களில் மு.ப. 8.30 மணிமுதல் பி.ப. 4.15 மணிவரை வெளிநாட்டு வழங்கல் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பொருட்கொள்வனவு குழு**
**அரசாங்க அச்சுத் திணைக்களம்,**
**இல. 118, டாக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு 08.**
**தொலைபேசி/ பெக்ஸ் :- 011-2694172 / 011-2694898**
**இணையதளம் :www.documents.gov.lk**
2024.02.27

## பொருட்கொள்வனவு அறிவித்தல்
### அரசாங்க அச்சுத் திணைக்களம்

N-39

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் கொள்வனவுக் குழுத் தலைவரால் வெளிநாட்டு உற்பத்தியாளர்கள்/அவர்களின் பிரதிநிதிகளின் அங்கீகாரம் பெற்ற இலங்கையில் உள்ள உள்ளூர் முகவர்களிடமிருந்து கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொரு(ள்)ட்கள் கொள்வனவு தொடர்பில், விலை மனுக்கள் கோரப்படுகின்றன.

குறிப்பு எண் :- SI 2024/09

பொருட்கள் :- White Printing Paper-24" - 70gsm ± 3.5%

எண்ணிக்கை :- 200 MT±10%

விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதி தினம் :- 2024/03/28 பி.ப. 2.00 மணி

மீளளிக்கப்படாத கட்டணம் :- ரூபா 18,125.00

ஏல பாதுகாப்பு :- ரூபா 1,270,000.00

2024/03/28 ஆந் திகதி பி.ப. 2.00 மணிக்கு விலைமனுக்கோரல் முடிவுறு அவ்வேளையிலேயே மனுக்கள் திறந்து வைக்கப்படும்.

அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் வெளிநாட்டு வழங்கல் பிரிவில் கடமை நாட்களில் 2024/03/07 இலிருந்து 2024/03/27 வரையிலான காலப்பகுதியில் கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை விலைமனு தொடர்பான ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு ஏலத்திற்கும் மேற்குறிப்பிட்ட மீளளிக்கப்படாத கட்டணம் செலுத்தப்படுவதோடு மேலும் அதற்கான எழுத்துமூலமான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மேலதிக விபரங்களிற்கு வேலை நாட்களில் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 4.15 மணி வரை வெளிநாட்டு வழங்கல் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பொருட்கொள்வனவு தலைவர்,**
**அரசாங்க அச்சுத் திணைக்களம்,**
**இல. 118, டாக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு - 08.**
**தொலைபேசி / பெக்ஸ் :- 011-2694172 / 011-2694898**
**இணையதளம் :- www.documents.gov.lk**
**2024/02/27**

## இலங்கை மக்களிடம் மன்னிப்புக் கோரல்

372, டேசிமவுன்ட் வத்த, பிலெஸ்ஸவில் அமைந்துள்ள மீன் விற்பனை நிலையத்தின் உரிமையாளரான கே.கே.டி.கே. சிரிந்த ஆனந்த ஆகிய நான்,

துப்புரவேற்பாட்டுக்கு பாதிப்பான நிலையின் கீழ் மீன் விற்பனை நிலையமொன்றை நடத்திச் செல்லல், மருத்துவ பரிசீலனை அறிக்கை இன்றி ஊழியர்களை சேவையில் ஈடுபடுத்துதல், கழிவு நீரை சரியாக அகற்றாமை, விற்பனை நிலையத்திற்குள் முறையற்ற விதத்தில் கழிவுப் பொருட்கள் ஒன்று சேருவதற்கு இடமளித்தமை, உத்தரவுபெற்ற அதிகாரி உணவு மாசடைவதை தவிர்ப்பதற்கு வழங்கியுள்ள அறிவுறுத்தல்களை பின்பற்றாமை போன்ற குற்றச்சாட்டுக்கள் சம்பந்தமாக பிலெஸ்ஸ நீதவான் நீதிமன்றத்தில் இல. 99341/20223/PHI இன் கீழ் வழக்கு தொடரப்பட்டுள்ளது மேற்படி குற்றச்சாட்டு/சாட்டுகளுக்கு குற்றத்தை ஒப்புக் கொண்டமையினால் கௌரவ நீதிமன்றம் 2024 பெப்ரவரி 13ம் திகதி எனக்கு மேற்படி குற்றச்சாட்டுகளுக்கு ஐம்பதாயிரம் (ரூ. 50,000/-) தண்டத் தொகை தீர்மானிக்கப்பட்டதாக பொதுமக்களுக்கு அறிவித்துக்கொள்கிறேன்.

**2015 இல. 5 தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை சட்டத்தின் 131ம் பிரிவின் கீழ் மற்றும் கௌரவ நீதிமன்றத்தின் கட்டளை பிரகாரம்.**

## இலங்கை மக்களிடம் மன்னிப்புக் கோரல்

**வாரியபொல, புத்தளம் வீதியில் அமைந்துள்ள "விஷாக்கா பார்மசியின்" உரிமையாளரான குருவிட்ட ஆரச்சிகே மலிந்த காஷ்யப்ப குருவிட்ட ஆகிய நான்.**

மேற்படி மருந்தகத்தில் சட்டவிரோதமான போலியனா அல்லது பலவந்தமாக நாட்டிற்கு கொண்டுவரப்பட்ட Cosmelite Cream (20g) எனும் மருந்து பெக்கற்கள் 06ஐ களஞ்சியப்படுத்துதல் என்ற குற்றச்சாட்டு சம்பந்தமாக குருநாகல் மாவட்ட உணவு மற்றும் ஔடத பரிசோதகர் திரு. ஆர்.எஸ்.பீ.பீ.கே. ராஜபக்ஷவினால் வாரியபொல நீதவான் நீதிமன்றத்தில் இல. B36528/23 இன் கீழ் வழக்கு தொடரப்பட்டது.

மேற்படி குற்றச்சாட்டுக்கு குற்றத்தை ஒப்புக்கொண்டதனால், கௌரவ நீதிமன்றம் 2024 ஜனவரி 12ம் திகதி எனக்கு ரூபா ஒரு இலட்சம் (100,000/=) தண்டத்தொகையை விதித்ததாக மக்களுக்கு தெரிவித்துக்கொள்கின்றேன்.

இக்குற்றம் என்னால் மீண்டும் இடம்பெறமாட்டாது எனத் தெரிவித்து இடம்பெற்ற குற்றம் சம்பந்தமாக முழு இலங்கை வாழ் மக்களிடமும் மன்னிப்புக் கோருகிறேன்.

## இலங்கை வங்கி
### மீட்கப்படாத அடகு நகைகளின் ஏலவிற்பனை

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகளின் பெயர்களுக்கு எதிரேயுள்ள திகதிகளில் அடகு வைக்கப்பட்டு அதற்கடுத்த கூட்டிலுள்ள திகதிகள் வரை மீட்கப்படாதுள்ள நகைகள் அட்டவணையின் இறுதிக் கூட்டிலுள்ள திகதியிலும் அதே கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள கிளையிலும் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். (ஏலங்கள் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.)

| இலங்கை வங்கி | நகைகள் அடகு வைக்கப்பட்டுள்ள காலப்பகுதி | மீட்பதற்கான இறுதித் திகதி | ஏலவிற்பனைத் திகதியும் இடமும் |
|---|---|---|---|
| நுகேகொட மேற்தரக் கிளை<br>தெஹிவளை மேற்தரக் கிளை<br>மஹரகமை மேற்தரக் கிளை<br>மொரட்டுவை மேற்தரக் கிளை<br>பத்தரமுல்லை மேற்தரக் கிளை<br>கட்டுபெத்த மேற்தரக் கிளை<br>விஜேராம சந்தி கிளை<br>தலவத்துகொட<br>ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலைக் கிளை<br>பிட்டகோட்டே<br>கடுவெல<br>பாராளுமன்றக் கிளை<br>பொரலஸ்கமுவை<br>பெலவத்தை<br>ராஜகிரிய மேற்தரக் கிளை<br>அத்துருகிரிய<br>மாலபே<br>இரத்மலானை மேற்தரக் கிளை<br>கல்கிசை<br>கொத்தலாவலை பாதுகாப்புப் பல்கலைக்கழகக் கிளை<br>மொரட்டுமுல்லை | 2022.12.22ஆம் திகதி வரை 12 மாதங்களுக்கும் 2023.03.22 வரை 06 மாதங்களுக்கும் அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாதுள்ள நகைகள் | 2024.03.22 | கடுவெல கிளை 2024.03.23 மற்றும் 2024.03.24 |
| ஹொரனை மேற்தரக் கிளை<br>ஹோமாகம மேற்தரக் கிளை<br>ஹோமாகம - ITUM உப கிளை<br>மத்தேகொட<br>மீகொட<br>இங்கிரிய<br>கெஸ்பேவ<br>கோனபொல<br>பண்டாரகமை<br>பாணந்துறை மேற்தரக் கிளை<br>பாதுக்க<br>பாணந்துறை நகரக் கிளை<br>பிலியந்தலை மேற்தரக் கிளை<br>ஹன்வெல்ல<br>கொட்டாவ<br>கெசல்வத்த | 2022.12.22ஆம் திகதி வரை 12 மாதங்களுக்கும் 2024.03.22 வரை 06 மாதங்களுக்கும் அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாதுள்ள நகைகள் | 2024.03.22 | ஹொரனை மேற்தரக் கிளை 2024.03.23 மற்றும் 2024.03.24 |
| களுத்துறை மேற்தரக் கிளை<br>பேருவளை<br>தொடன்கொட<br>மத்துகமை மேற்தரக் கிளை<br>தர்கா நகர்<br>வாத்துவ<br>கட்டுகுருந்தை<br>பொம்புவலை<br>அகலவத்தை<br>பதுரலிய<br>புலத்சிங்கள<br>அளுத்கமை<br>பெலவத்தை நகரக் கிளை<br>களுத்துறை மாவட்டச் செயலகம் - துணைக் கிளை | 2022.12.22ஆம் திகதி வரை 12 மாதங்களுக்கும் 2024.03.22 வரை 06 மாதங்களுக்கும் அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாதுள்ள நகைகள் | 2024.03.22 | களுத்துறை மேற்தரக் கிளை 2024.03.23 மற்றும் 2024.03.24 |

மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஏலவிற்பனைகளை இரத்துச் செய்யும்,பிற்போடும், ஒன்றிணைக்கும் உரிமை இலங்கை வங்கிக்குண்டு.

இலங்கை வங்கி
பிரதிப் பொது முகாமையாளர் (அபிவிருத்தி வங்கியியல் மற்றும் கிளைக் கடன் செயற்பாடுகள் - பிரிவு II)

**தலைமை அலுவலகம், கொழும்பு 01**
**தொலைபேசி - 0112399568/ 0112204545**

1975 BOC CALL CENTRE www.boc.lk
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

## அரச அறிவித்தல்

**1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ சட்டத்தின் 12(3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்.**

**திருத்தப்பட்ட கரையோர வலயங்கள் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திட்டம் தொடர்பாக பொது மக்கள் கருத்துக்களுக்கான அழைப்பு**

1988 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க மற்றும் 2011 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ சட்டத்தின் 12(3)ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக திருத்தப்பட்ட கரையோர வலயங்கள் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திட்டமானது பொது மக்கள் பரிசீலனைக்காக கீழ் குறிப்பிடப்படும் இடங்களில் தினமும் மு.ப.8.30 மணி முதல் பி.ப.4.15 மணி வரை 2024/03/07 ஆம் திகதி முதல் 60 நாட்களுக்கு வைக்கப்பட்டிருக்கும். (வார இறுதி மற்றும் அரச விடுமுறை நாட்களைத் தவிர)

இதற்கு மேலதிகமாக கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையதளமான www.coastal.gov.lk இல் அத்திட்டம் மும்மொழிகளிலும் தரப்பட்டுள்ளது.

1. நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு, செத்சிரிபாய, 11 ஆம் கட்டம்,12 ஆம் மாடி, பத்தரமுல்ல
2. கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம், 04 ஆம் மாடி, புதிய செயலகக் கட்டிடம், மாளிகாவத்தை, கொழும்பு 10
3. பிரதேச அலுவலகம், கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம், மொரட்டு மோதர, மொரட்டுவ.
4. பிரதேச அலுவலகம், கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூல வள முகாமைத்துவ திணைக்களம், இல. 274, பீல்லகொட, உனவட்டுன, காலி
5. பிரதேச அலுவலகம், கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம், இல. 64, புராணவெல்ல வீதி,தெவிநுவர, மாத்தறை
6. பிரதேச அலுவலகம், கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம், ருஹுணு மாகம்புர நிர்வாக வளாகம், கீழ்த்தளம், சிரிபோபுர, ஹம்பாந்தோட்டை
7. பிரதேச அலுவலகம், கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம்,மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்
8. பிரதேச அலுவலகம், கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம், சுங்க வீதி, நீர்கொழும்பு
9. பிரதேச அலுவலகம், கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம்,இல. 303, நொச்சிமுனை, மட்டக்களப்பு
10. பிரதேச அலுவலகம், கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம், 19/B,விபுலானந்தர் வீதி, பாக்கியவத்த,பொத்துவில் 01
11. பிரதேச அலுவலகம், கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம்,கிராம அலுவலர் கட்டிடம்,காக்கபள்ளி,சிலாபம்
12. பிரதேச அலுவலகம், கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம், வோட் இல. 02, Mpcs மாவத்த,வெள்ளூர், நிலாவெளி, திருகோணமலை
13. மாவட்ட செயலகம், கொழும்பு
14. மாவட்ட செயலகம், களுத்துறை
15. மாவட்ட செயலகம், காலி
16. மாவட்ட செயலகம், மாத்தறை
17. மாவட்ட செயலகம், ஹம்பாந்தோட்டை
18. மாவட்ட செயலகம், அம்பாறை
19. மாவட்ட செயலகம், மட்டக்களப்பு
20. மாவட்ட செயலகம், திருகோணமலை
21. மாவட்ட செயலகம், முல்லைத்தீவு
22. மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்
23. மாவட்ட செயலகம், கிளிநொச்சி
24. மாவட்ட செயலகம், மன்னார்
25. மாவட்ட செயலகம், புத்தளம்
26. மாவட்ட செயலகம், கம்பஹா

இந்த திருத்தப்பட்ட கரையோர வலயங்கள் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திட்டம் தொடர்பான பொது மக்கள் அபிப்பிராயங்களை 2024/03/07 ஆம் திகதியிலிருந்து 60 நாட்களினுள் கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களப் பணிப்பாளருக்கு எழுத்துமூலம் முன்வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொறியியலாளர் ஆர்.ஏ.எஸ். ரணவக**
**பணிப்பாளர் நாயகம்**
**கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம்.**

**கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம் புதிய செயலகம்**
**4 ஆம் மாடி, மாளிகாவத்தை, கொழும்பு 10**

**தொலைபேசி இலக்கம் - 011 2449754,011 2387922, 011 2449197**
**பெக்ஸ் இலக்கம் - 011 2438005, 011 2472623**
**ஈ மெயில் - dg.ccd.lk@gmail.com**

## பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்தல்
### கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில்

1. தசநாயக்க முதியன்செலாகே லுவிநோனா (காலஞ்சென்றவர்)
2. (A) அமரசிங்ஹ முதலிகே ஸ்ரீமதி அமரசிங்ஹ
   (B) அமரசிங்ஹ முதலிகே ஸ்ரீமதி அமரசிங்ஹ இருவரும் இல. 272/3, சுதர்ஷன மாவத்தை, மாலபே

**வழக்காளிகள்**

**வழக்கு இல. 14999/P**

**எதிராக**

01. ஏ.எம் ஹென்றி எட்வர்ட் (காலஞ்சென்றவர்) இல. 84/1, ஏ.ஜி. ஹின்னி அப்புஹாமி மாவத்தை, கொழும்பு -13
01. ஆ.ஏ.எம். க்லேரன்ஸ் ஜானக (காலஞ்சென்றவர் இல. 82, ஏ.ஜி. ஹின்னி அப்புஹாமி மாவத்தை, கொழும்பு -13
01 (A) அமரசிங்ஹ முதலிகே ட்ரிக்சி ஜானக இல. 271/50, ரொஸ்டா கார்டன்ஸ், கெரவலபிட்டிய, ஹெந்தல, வத்தளை
02. லியனகே பிரின்ஸி இலா. 287, கொதலாவல, கடுவளை, தற்போது இல. 261/4/3, விமுக்தி மாவத்தை, பீட்டுகல, மாலபே
03. லியனகே ஜோயிஸ் இல. 84/1, ஏ.ஜி. ஹின்னி அப்புஹாமி மாவத்தை, கொழும்பு -13 தற்போது இல. 163/61, விமுக்கதி மாவத்தை, பிட்டுகல, மலபெ
04. ஹேவகே அலெக்ஸான்டர் பெரேரா (காலஞ்சென்றவர்) இல. 85, ஏ.ஜி. ஹின்னி அப்புஹாமி மாவத்தை, கொழும்பு -13
   04 (அ) ஹேவகே மஹேஷ் நலின் பெரேரா இல. 84/1, ஏ.ஜி. ஹின்னி அப்புஹாமி மாவத்தை, கொழும்பு -13
05. ஹேவகே மார்கரட் பெரேரா (காலங்சென்றவர்) இல. 85, ஏ. ஜி. ஹின்னி அபபுஹாமி மாவத்தை, கொழும்பு -13
   05 (அ) ஏ.எம். க்லேரன்ஸ் ஜானக (காலஞ்சென்றவர் இல. 82, ஏ.ஜி. ஹின்னி அப்புஹாமி மாவத்தை, கொழும்பு -13
   05 (A) ஜயலத் யக்கல முல்லகே இனிட் ஜசிந்தா தி சில்வா இல. 271/52, ரொஸ்டா கார்டன், கெரவலபிட்டிய வீதி, ஹெந்தளை, வத்தளை
06. ஹேவகே சிறில் பெரேரா இல. 268/1, தளபிடிய, கடவத்தை
07. ஹேவகே அலோசியஸ் பெரேரா (காலஞ்சென்றவர்)
   07 (A) முல்லகந்த ஆரச்சிகே மேரி பிரிட்ஜட், W1, தவடகஹவத்த, கொங்கிதொட, வத்தளை
08. ஹேவகே ஜோசப் பெரேரா (காலஞ்சென்றவர்) இல. 01 தவடகஹவத்த, கொங்கிதொட, வத்தளை,
   08 (அ) விக்ரமசிங்ஹ முதியன்செலாகே பிரிட்ஜட், இல. 01 தவடகஹவத்த, கொங்கிதொட, வத்தளை,
   08 (A) ஹேவகே புத்திக பிரசாத் பெரோா, இல. 55, பாடசாலை பின்புறம் கொங்கிதொட, எந்தேரமுல்லை, வத்தளை
09. எஸ்.ஏ. நாகராஜா ஹின்னி அப்புஹாமி மாவத்தை, கொழும்பு -13
10. ரனிரேசன் நடராஜா இல. 84, ஏ.ஏ.ஜி. ஹின்னி அப்புஹாமி மாவத்தை,

**எதிராளிகள்**

மேற்படி இலக்கம் கொண்ட வழக்குடன் தொடர்பான காணிக்கு மற்றும் அமைவிடத்திற்கு மேற்படி பெயர் குறிப்பிடப்பட்ட வழங்காளிகளுக்கு மற்றும் எதிராளிகளுக்கு குறித்த வழக்கில் அறிக்கையிடப்பட்டுள்ள 2003.09.03ஆம் திகதி கொண்ட தீர்வின் படியாக அதில் காட்டப்பட்டுள்ள பிரிவின் படியாக உரித்து உள்ளது என்றும் குறித்த தீர்வு பிரகடனத்தின் மிகவும் பரிபூரணமான விபரத்துடன் குறித்த காணி மற்றும் அமைவிடத்தின் பாகப் பிரிவினை வழங்குச் சட்டத்தின் 27ஆம் பிரிவின் படி விற்பனை செய்யப்பட்டு கிடைக்கப்பெறும் தொகை வழக்கில் வைப்பிலிடப்பட வேண்டும் என்று கட்டளையிடப்பட்டுள்ளது என்பதுடன் இங்கு கீழுள்ள அட்டவணையில் விபரமாக காட்டப்பட்டுள்ள காணி மற்றும் அமைவிடம் கௌரவ நீதிமன்றத்தின் ஊடாக அனுமதிக்கப்பட்டுள்ள விற்பனை ஒப்பந்தங்களின் கீழ், குறித்த வழக்கிலிருந்து எனக்கு வழங்கப்பட்டுள்ள விற்பனை அதிகார பத்திரத்தின் அதிகாரத்துடன் 2024ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 02ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு குறித்த ஆதனம் அமைந்துள்ள இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**மேற்படி கூறப்பட்ட பிராதில் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணை**

மேல் மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்தில் கொழும்பு நகர சபை அதிகார எல்லைக்குள் எச். டி. டயஸ் பகிரங்க அளவையாளர் அவர்களினால் 17.05.1916ஆம் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இல. 1822 எனும் வரைபடத்தின் படியாக புதிய செட்டித்தெரு வரி இலக்கம் 67, 68 எனும் ஆதனம் (பர்ச்சஸ் 09.25) விசாலமனா சீ பிரிவுக்கான எல்லைகள் **வடக்காக** வென்ரொயன் பாதைக்கு ஒதுக்கப்பட்ட பிரிவும், **கிழக்காக** எச். பெரேராவின் இல. 9ஏ எனும் காணி (தற்போது வென்ரோயன் வீதி) யும், **தெற்காக** ஜே. குணமுத்துவின் இல. 69 எனும் காணியும், **மேற்காக** மரிய பெரேராவின் காணி.

**மேற்படி கூறப்பட்ட காணி ஆரம்ப வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணை**

மேல் மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்தில் கொழும்பு நகர சபை அதிகார எல்லைக்குள் என்.டீ.ஜே.வீ. பெரேரா அனுமதி பெற்ற அளவையாளரினால் 1991.07.28ஆம் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இல. 12159 எனும் வரைபடத்தின் பிரகாரம் ஏ.ஜி. ஹின்னி அப்புஹாமி மாவத்தையில் அமைந்துள்ள வரி இலக்கம் 82, 82ஏ, 82பீ. 84 மற்றும் 86 எனும் பர்ச்சஸ் 09.60 விசாலமான காணிக்கான எல்லைகள் **வடக்காக:** ஏ.ஜி. ஹின்னிஅப்புஹாமி மாவத்தையும், **கிழக்காக:** எச். பெரேராவின் இல. 9ஏ எனும் காணி (தற்போது வென்ரோயன் வீதி) யும், **தெற்காக:** ஜே. குணமுத்துவின் இல. 69, எனும் காணியும், **மேற்காக:** மரிய பெரேராவின் காணி.

**ஆதனத்தினுள் நுழைதல்**: கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் அண்மை தொட்டு நீர்த்தாங்கி வீதியில் 1 கிலோ மீட்டர் அளவு செல்லும் போது ஏ.ஜி. ஹின்னி அப்புஹாமி மாவத்தையில் இடப்புறமாக இவ்வாதனம் அமைந்துள்ளது.

**செலுத்தும் முறை:** ஏலம் முடிவுற்றதும் உடனடியாக கொள்வனவாளரினால் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள செலுத்தப்பட்ட தொகையில் செலுத்தப்படல் வேண்டும். காசோலை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

1. கொள்வனவாளரினால் விற்பனை விலையில் 25% அவ்வாறே செலுத்தப்படல் வேண்டும்
2. சிவில் வழக்கு கட்டளைக் கோவையில் 258 பிரிவின் கீழான அறிவிடலும்
3. உள்ளூராட்சி கட்டணமாக 1%
4. எஞ்சிய 75% தொகை ஏலமிட்ட தினம் தொடக்கம் 30 நாட்களுக்குள் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கிற்கு வைப்பிடப்படல் வேண்டும்.
5. அனைத்து செலவுகளும் கொள்வனவாளரினால் ஏலம் முடிவுற்றதுமே செலுத்தப்படல் வேண்டும்.

**நீதிமன்றத்தின் கட்டளைப்படி**

2024ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி
**கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில்.**

.................................................
**பதிவாளர்/ பிரதி பிஸ்கால்**
**மாவட்ட நீதிமன்றம்**
**கொழும்பு.**

Daily News Classifieds, the Housewives' companion

# அசித்த பெர்னாண்டோவுக்கு காயம்



இலங்கை அணியின் வலது கை வேகப்பந்து வீச்சாளர் அசித்த பெர்னான்டோ உபாதைக்கு உள்ளான நிலையில் பங்களாதேஷுக்கு எதிரான ஒருநாள் மற்றும் டெஸ்ட் தொடர்களில் அவர் பங்கேற்பதில் சந்தேகம் எழுந்துள்ளது

இலங்கை ஒருநாள் மற்றும் டெஸ்ட் அணிகளில் அண்மைக் காலமாக சிறப்பாக செயற்பட்டு வரும் அசித்த பெர்னாண்டோ உள்ளூர் போட்டியான தேசிய சுப்பர் லீக் தொடரின்போது தொடை எலும்புக் காயத்திற்கு முகம்கொடுத்துள்ளார்.

இதனால் அவர் பங்களாதேஷ்; தொடரை இழந்திருப்பதாக தெரியவருகிறது. அவருக்கு பதிலான வலது கை வேகப்பந்து வீச்சாளர் லஹிரு குமாரவை அணிக்கு அழைக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

பங்களாதேஷ் சுற்றுப்பயணம் மேற்கொண்டு தற்போது டி20 தொடரில் ஆடி வரும் இலங்கை தொடர்ந்து மூன்று ஒருநாள் மற்றும் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்கவுள்ளது.

ஒருநாள் தொடர் எதிர்வரும் மார்ச் 13 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் போட்டிகள் மார்ச் 22 மற்றும் மார்ச் 30 ஆம் திகதிகளில் ஆரம்பமாகவுள்ளன.

# மகளிர் கிரிக்கெட்டில் அதிவேக பந்து வீசி இஸ்மைல் சாதனை



மகளிர் கிரிக்கெட்டில் அதிவேக பந்தை வசி தென்னாபிரிக்க வேகப்பந்து வீராங்கனை ஷப்னிம் இஸ்மைல் சாதனை படைத்துள்ளார்.

இந்தியாவில் நடைபெற்று வரும் மகளிர் பிரீமியர் லீக் தொடரில் நேற்று முன்தினம் (05) நடந்த டெல்லி கெப்பிட்டல்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் மும்பை இந்தியன்ஸ் சார்பில் பந்து வீசிய ஷப்னிம் ஒரு பந்தை மணிக்கு 132.1 கிலோ மீற்றர் வேகத்தில் போட்டார்.

அந்தப் பந்து அவுஸ்திரேலிய முன்னாள் அணித் தலைவி மெக் லன்னின் காலில் பட்ட நிலையில் எல்.பி.டபிள்யு. ஆட்டமிழப்பு கோரப்பட்டபோதும் நடுவர் மறுத்து விட்டார்.

மகளிர் கிரிக்கெட் வரலாற்றில் மணிக்கு 130 கிலோமீற்றர் வேக வரம்பு தாண்டப்பட்டது இதுவே முதல் முறையாகும்.

சர்வதேச மகளிர் கிரிக்கெட்டிலும் அதிவேக பந்து வீச்சை வெளிப்படுத்திய சாதனை 35 வயது இஸ்மைல் வசமே உள்ளது. 2016 இல் மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான மணிக்கு 128 கிலோமீற்றர் வேகத்தில் வீசியதே சாதனையாக உள்ளது.

# இலங்கை மகளிர் அணி தென்னாபிரிக்கா பயணம்



இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி ஒருநாள் மற்றும் டி20 சர்வதேச போட்டிகளில் ஆடுவதற்காக எதிர்வரும் மார்ச் கடைசியில் தென்னாபிரிக்கா சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளது.

இதன்போது இலங்கை அணி தென்னாபிரிக்க மகளிர் அணியுடன் தலா மூன்று டி20 மற்றும் மூன்று ஒருநாள் சர்வதேச போட்டிகளில் ஆடும். இதில் நடைபெறும் ஒருநாள் தொடர் ஐ.சி.சி. மகளிர் சம்பியன்சிப்பின் ஓர் அங்கமாக இடம்பெறவுள்ளது.

இரு அணிக்கும் இடையிலான மூன்று டி20 போட்டிகளும் எதிர்வரும் மார்ச் 27, 30 மற்றும் ஏப்ரல் 3 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

தொடர்ந்து இரு அணிகளும் மோதும் ஒருநாள் சர்வதேச போட்டிகள் எதிர்வரும் ஏப்ரல் 9, 13 மற்றும் 17 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

# விவேகானந்தா அணி வெற்றி

**மாளிகைக்காடு குறூப் நிருபர்**



சாய்ந்தமருது சன் பிளவர் கழகத்திற்கு எதிரான சினேகபூர்வ டி20 கிரிக்கெட் போட்டியில் காரைதீவு விவேகானந்தா கழகம் 44 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

காரைதீவு விபுலானந்தா மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய விவேகானந்தா அணி 6 விக்கெட் இழப்புக்கு 181 ஓட்டங்களை பெற்ற நிலையில் பதிலெடுத்தாடிய சன் பிளவர் 137 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது. சகல துறை ஆட்டத்தை வெளிப்படுத்திய விவேகானந்தா அணியின் சஞ்சேய் துடுப்பாட்டத்தில் 60 ஓட்டங்களையும் பந்துவீச்சில் 5 விக்கெட்டுகளையும் வீழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்: டிரம்ப்–பைடன் போட்டி உறுதி



அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கு மாநில அளவில் வேட்பாளரை தேர்வு செய்யும் முக்கிய நாளான கடந்த செவ்வாய்க்கிழமைய முன்னோடி தேர்தல்களில் ஜனநாயக கட்சியில் பதவியில் உள்ள ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் குடியரசுக் கட்சியில் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் வெற்றியீட்டிய நிலையில் இந்த இருவருமே எதிர்வரும் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இதில் குடியரசுக் கட்சி வேட்பாளருக்கான போட்டியில் கலிபோர்னியா மற்றும் டெக்ஸாஸ் உட்பட ஒரு டஜன் மாநிலங்களில் டிரம்ப் வெற்றியீட்டியுள்ளார். அவரை எதிர்த்துப் போட்டியிடும் ஐ.நாவுக்கான முன்னாள் அமெரிக்கத் தூதுவர் நிக்கி ஹேலி தோல்விகளை சந்தித்து பின்னடைவை எதிர்கொண்டார்.

அவர் தொடர்ந்து போட்டியில் இருந்தபோதும் குடியரசுக் கட்சியின் வேட்பாளர் வாய்ப்பை பெற சாத்தியம் இல்லை என்று கூறப்படுகிறது. செவ்வாய் முன்னோடித் தேர்தலில் அவர் வெர்மொன்டில் மாத்திரமே வெற்றியீட்டினார்.

மறுபுறம் பைடன், மினிசோட்டா உள்ளிட்ட 15 மாநிலங்களில் வெற்றிபெற்றுள்ளார். ஜனநாயகக் கட்சி பலமாக இருக்கும் மாநிலங்களில் அவர் எளிதில் வெல்வார் என்று எதிர்பார்க்கப்பட்டது. எனினும், காசா போரில் பைடன் அரசு இஸ்ரேலுக்கு வலுவான ஆதரவு வழங்குவதையடுத்து அவருக்கு எதிர்ப்பு இருந்தது.

## சர்வதேச செய்திகள்

# 217 தடவைகள் கொவிட் தடுப்பூசி போட்ட ஆடவர்



ஜெர்மனியைச் சேர்ந்த 62 வயது ஆடவர் ஒருவர் மருத்துவ ஆலோசனையை மீறி 217 தடவைகள் கொவிட் தடுப்பூசியை போட்டுக் கொண்டுள்ளார் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த அபூர்வமான சம்பவம் தொடர்பில் மருத்துவ சஞ்சிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. அந்த ஆடவர் 29 மாத இடைவெளியில் தனிப்பட்ட முறையில் தடுப்பூசியை வாங்கி உடம்பில் செலுத்தியுள்ளார். அந்த ஆடவருக்கு நோய் எதுவும் இல்லை என்று ஏர்லகன் நியுரம்பர்க் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நாளிதழ்கள் வாயிலாக அந்த ஆடவர் குறித்த தகவலை அறிந்து கொண்டதாக டொக்டர் கிலியன் ஸ்கோபர் கூறினார். அதன் பின் அந்த ஆடவர் சில பரிசோதனைகளுக்காக அழைக்கப்பட்டார்.

அவரது இரத்தம், உமிழ்நீர் மாதிரிகள் சோதனைக்கு எடுக்கப்பட்டன. அந்த ஆடவர் கொவிட்–19 நோய்த் தொற்றால் பாதிக்கப்படவில்லை என்பது தெரியவந்தது.

# இஸ்ரேலிய தாக்குதலில் லெபனானில் மூவர் பலி



லெபனானின் தெற்கு எல்லை கிராமமான ஹுலாவில் உள்ள வீடு ஒன்றின் மீது இஸ்ரேல் நேற்று முன்தினம் (05) நடத்திய வான் தாக்குதல் ஒன்றில் ஒரு தம்பதி மற்றும் அவர்களின் மகன் கொல்லப்பட்டதாக லெபனான் தேசிய செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இந்தத் தாக்குதல் இடம்பெற்ற விரைவில் இஸ்ரேல் மீது பல டஜன் ரொக்கெட் குண்டுகளை வீசியதாக லெபனானின் ஹிஸ்புல்லா அமைப்பு தெரிவித்துள்ளது. இஸ்ரேலின் கைரியத் ஷ்மோனா நகரில் உள்ள கட்டடம் ஒன்றை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தியதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. காசாவில் போர் வெடித்தது தொடக்கம் ஈரான் ஆதரவு ஹிஸ்புல்லா அமைப்புக்கும் இஸ்ரேலுக்கும் இடையே தொடர்ந்து மோதல் நீடித்து வருகிறது.

கடந்த திங்கட்கிழமை லெபனானில் இருந்து நடத்தப்பட்ட ஏவுகணை தாக்குதல் ஒன்றில் இஸ்ரேலில் வெளிநாட்டுத் தொழிலாளர் ஒருவர் கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த மோதல்களில் லெபனானில் குறைந்தது 302 பேர் கொல்லப்பட்டிருப்பதோடு பெரும்பாலானவர்கள் ஹிஸ்புல்லா போராளிகள் ஆவர்.

# காசா போர் நிறுத்தம்: ரமழானை நெருங்கும் நிலையில் இழுபறியுடன் தொடர்ந்தும் பேச்சு



## வடக்கு காசாவுக்கான உதவி வாகனங்களுக்கு முட்டுக்கட்டை

காசாவில் இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடர்ந்து நீடிப்பதோடு, போர் நிறுத்தம் ஒன்றுக்கான பேச்சுவார்த்தைகள் எகிப்து தலைநகர் கெய்ரோவில் நான்காவது நாளாக நேற்றும் தொடர்ந்த சூழலில் வடக்கு காசாவுக்கு உணவு உதவிகளை எடுத்துச் சென்ற உலக உணவுத் திட்டத்தின் முயற்சியை இஸ்ரேலிய படை தடுத்துள்ளது.



கடந்த இரண்டு வாரங்களில் முதல் முயற்சியாகவே வடக்குக்கு உணவு உதவிகளை எடுத்துச் செல்ல உலக உணவுத் திட்டம் முயன்றது. அவ்வாறான 14 லொறிகள் சோதனைச் சாவடியில் வைத்து திருப்பி அனுப்பப்பட்டதோடு பின்னர் அவை பாதிப்புக்கு உள்ளான மக்களால் களவாடப்பட்டது என்று அந்த ஐ.நா நிறுவனம் தெரிவித்துள்ளது.

வடக்கு காசாவில் பட்டினியால் குழந்தைகள் மரணித்து வருவதாக உலக சுகாதார அமைப்பு கூறிய நிலையிலேயே அந்தப் பகுதிக்கு உதவிகள் செல்வது தடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது வீதி காசா சோதனைச் சாவடியில் மூன்று மணி நேரம் காக்க வைக்கப்பட்ட உதவி லொறிகள் பின்னர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன. தொடர்ந்து அந்த லொறிகள் வேறு பாதைக்கு மாற்றப்பட்ட நிலையில் பாதிக்கப்பட்ட பெரும் எண்ணிக்கையானோர் லொறிகளில் இருந்து சுமார் 200 தொன் உதவிப் பொருட்களை திருடிச் சென்றதாக உலக உணவுத் திட்டம் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னதாக வடக்கு காசாவுக்கான உணவு விநியோகத்தை இடைநிறுத்துவதாக உலக உணவுத் திட்டம் கடந்த பெப்ரவரி 20 ஆம் திகதி அறிவித்தது. அந்த அமைப்பின் உதவி லொறிகள் களவாடப்பட்டு சமூக ஒழுங்கு சீர்குலைந்திருப்பதை காரணமாகக் கூறியே அந்த அமைப்பு இந்த அறிவிப்பை வெளியிட்டிருந்தது.

இந்நிலையில் கடந்த வாரம் காசா நகரில் உதவிக்காக காத்திருந்த பலஸ்தீனர்கள் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 100க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஜோர்தானுடன் ஒருங்கிணைந்து வடக்கு காசாவுக்கு கடந்த செவ்வாயன்று 36,000 உணவுப் பொதிகளை வானில் இருந்து வீசியதாக அமெரிக்கா கூறியுள்ளது. காசாவில் அமெரிக்கா வானில் இருந்து உதவிகளை போடும் இரண்டாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

எந்த நடவடிக்கையும் எடுக்காத பட்சத்தில் காசாவில் பஞ்சம் ஏற்படுவது தவிர்க்க முடியாதது என்று ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் காசாவில் ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் நீரிழப்பினால் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 18 ஆக அதிகரித்திருப்பதாக காசா சுகாதார அமைச்சு நேற்று கூறியது.

**உயிரிழப்பு 30,717 ஆக உயர்வு**

காசாவில் இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடரும் சூழலில் கடந்த 24 மணி நேரத்தில் 86 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டு மேலும் 113 பேர் காயமடைந்திருப்பதாக காசா சுகாதார அமைச்சு நேற்று (06) வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி இன்று ஐந்து மாதங்களை தொடும் காசா போரில் கொல்லப்பட்ட பலஸ்தீனர் எண்ணிக்கை 30,717 ஆக அதிகரித்திருப்பதோடு மேலும் 72,156 பேர் காயமடைந்துள்ளனர். இதில் கொல்லப்பட்டவர்களில் 70 வீதத்துக்கும் அதிகமானவர்கள் பெண்கள் மற்றும் சிறுவர்களாவர்.

இதில் தெற்கு நகரான கான் யூனிஸ் மற்றும் ரபாவில் இஸ்ரேல் நேற்று நடத்திய சரமாரித் தாக்குதல்களில் சிறுவர்கள் மற்றும் பெண்கள் உட்பட பலர் கொல்லப்பட்டாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டது.

இதில் ரபாவின் கிழக்கே உள்ள அல் ஷோகா பாடசாலைக்கு அருகில் இடம்பெற்ற பீரங்கி தாக்குதல் ஒன்றின் காரணமாக பல பொதுமக்கள் கொல்லப்பட்டதாக உள்ளூர் வட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

அதேபோன்று மத்திய காசாவின் டெயிர் அல் பலாஹ்வில் உள்ள வீடு ஒன்றின் மீது இஸ்ரேல் வீசிய குண்டில் மூவர் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்துள்ளனர். இதில் அல் அத்தார் குடும்பத்திற்கு சொந்தமான வீட்டின் மீதே இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதாக வபா கூறியது.

**தொடரும் பேச்சு**

அமெரிக்கா, எகிப்து மற்றும் கட்டாரின் மத்தியஸ்தத்துடன் கெய்ரோவில் புதிய சுற்று பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருவதோடு அதில் பங்கேற்றிருக்கும் ஹமாஸ், போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவதற்கு தொடர்ந்து முயன்று வருவதாக நேற்று (06) கூறியது. எனினும் இந்தப் பேச்சுவார்த்தைகளில் இஸ்ரேல் பங்கேற்கவில்லை.

'எமது மக்களுக்கு எதிரான ஆக்கிரமிப்பை முழுமையாக நிறுத்தும் நோக்கில் தேவையான நெகிழ்வுப் போக்கை நாம் காட்டுகின்றபோதும் ஒப்பந்தத்தை எட்டுவதை ஆக்கிரமிப்பாளர்கள் தொடர்ந்து தடுக்கின்றனர்' என்று ஹமாஸ் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் மார்ச் 10 அல்லது 11 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள முஸ்லிம்களின் புனித ரமழான் மாதத்திற்கு முன்னர் இஸ்ரேல் மற்றும் ஹமாஸுக்கு இடையே 40 நாள் போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவதற்கே கெய்ரோவில் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

காசாவில் பிடிக்கப்பட்டிருக்கும் பணயக்கைதிகளை விடுவிக்கும் கைதிகள் பரிமாற்ற உடன்வடிக்கை மற்றும் போர் நிறுத்தம் ஒன்றுக்காக முன்வைக்கப்பட்டிருக்கும் உடன்படிக்கையை ஹமாஸ் ஏற்பதிலேயே இந்தப் போர் நிறுத்தம் தங்கி இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் செவ்வாயன்று (05) கூறியிருந்தார்.

ஹமாஸுக்கு முன்வைக்கப்பட்டிருக்கும் உடன்படிக்கையில் பணயக்கைதிகள் சிலரை விடுவிப்பது மற்றும் காசாவில் பஞ்சத்தை தடுப்பதற்கு அங்கு உதவிகளை அதிகரிப்பது ஆகியவை உள்ளடங்கும். இதில் ஹமாஸ் காசாவில் உள்ள அனைத்து பணயக்கைதிகளின் விபரங்களையும் வெளியிட கோரப்பட்டுள்ளது.

இந்நிலையில் அமெரிக்க பாதுகாப்புச் சபைக்கு முன்வைக்க தீர்மானித்திருக்கும் வரைவு தீர்மானத்தின் மொழியில் மாற்றத்தை கொண்டு வந்திருப்பதாக ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. அதில் அனைத்து பணயக்கைதிகளையும் விடுவிப்பதுடன் சேர்த்து காசாவில் கிட்டத்தட்ட ஆறு வாரங்கள் அவசர போர் நிறுத்தம் ஒன்றுக்கு கோரப்பட்டுள்ளது.

எனினும் வரைவுத் திர்மானத்தை பாதுகாப்புச் சபையில் கொண்டுவருவதற்கான விபரம் இன்னும் வெளியாகவில்லை. எவ்வாறாயினும் இந்தப் போர் தொடர்பில் அமெரிக்கா ஏற்கனவே மூன்று பாதுகாப்புச் சபை தீர்மானங்கள் மீது வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்திய சூழலில் அமெரிக்காவின் இந்தத் தீர்மானம் மீது ரஷ்யா மற்றும் சீனா வீட்டோவை பயன்படுத்தும் வாய்ப்பு உள்ளது.

ஏற்கனவே போர் நிறுத்தம் தொடர்பில் ஹமாஸின் பிரதான கோரிக்கை பற்றி லெபனானில் உள்ள ஹமாஸ் அதிகாரியான ஒசாமா ஹம்தான் வலியுறுத்தி இருந்தார். அதில் காசாவில் இஸ்ரேலின் தாக்குதல்கள் நிறுத்தப்பட்டு இஸ்ரேலியப் படை அங்கிருந்து வாபஸ் பெற வேண்டும் என்றும் வெளியேற்றப்பட்ட அனைத்து காசா மக்களும் தமது வீடுகளுக்கு திரும்ப வேண்டும் என்று கோரியிருந்தார்.

எனினும் ஹமாஸை ஒழிக்கும் வரை போரை நிறுத்தப்போவதில்லை என்று இஸ்ரேல் கூறி வருகிறது.

மெரிலாண்டில் நேற்று முன்தினம் பேசிய பைடன் கூறியதாவது, 'ரமழான் காரணமாக போர் நிறுத்தம் எட்டப்பட வேண்டும். ரமழான் வரை தொடரும் நிலைக்கு நாம் வந்தால், இஸ்ரேல் மற்றும் ஜெரூசலம் மிக மிக அபாயகரமானதாக இருக்கும்' என்றார்.

இது தொடர்பில் அவர் விரிவாகக் கூறாதபோதும் ஜெரூசலம் அல் அக்ஸா பள்ளிவாசலில் முஸ்லிம்கள் தொழுகை நடத்த அனுமதிக்க வேண்டும் என்று இஸ்ரேலுக்கு அமெரிக்கா கடந்த வாரம் அழுத்தம் கொடுத்திருந்தது. இந்தப் பள்ளிவாசல் வளாகத்தை ஒட்டி ரமழாம் மாதத்தில் தொடர்ச்சியாக பதற்ற சூழல் நிலவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் கடந்த ஆண்டுக்களில் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையான வழிபாட்டாளர்கள் பள்ளிவாசல் வளாகத்திற்குள் இம்முறையும் அனுமதிக்கப்படுவார்கள் என்று இஸ்ரேல் அரசு குறிப்பிட்டுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 மார்ச் மாதம் 7ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.